சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

24

ஆசிரியர்: மு.தயாளன்

இதழ் 24 ஆடி 2022 £4.00



வளர்ந்த , வளரும் படைப்பாளிகளுக்கான களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்காளர்கள்



கர்ணன் சின்னத்தம்பி
பக்கம் 3
இலண்டன்



கமலினி கதிர்
பக்கம் 5
சுவிஸ்



ஆர்த்திகா சுவேந்திரன்
பக்கம் 7
இலங்கை



மண்டூர் அசோகா
பக்கம் 11
இலங்கை



ஸ்ரீரஞ்சனி
பக்கம் 14
கனடா



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்
பக்கம் 19
இலங்கை



அலெக்ஸ் பரந்தாமன்
பக்கம் 21
இலங்கை



கே. டானியல்
பக்கம் 24
இலங்கை



பேராசிரியர் யோகராசா
பக்கம் 31
இலங்கை

20 % கழிவு

## SKM BOOKS FOR SALE

20 % கழிவு



300 ரூபா | 300 ரூபா | 300 ரூபா | 300 ரூபா | 300 ரூபா | 300 ரூபா | 200 ரூபா | 300 ரூபா | 350 ரூபா



200 ரூபா | 300 ரூபா | 300 ரூபா | 300 ரூபா | 400 ரூபா

India 400 Rs
London £5 Can/Ame $10
Europe 10 Euro
மேற்குறிப்பிட்ட விலைகளிலிருந்து 20% கழிவில் பெறலாம்

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை skmbooks50@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்

**வாசிப்பதனால் மனிதன் பூரண மனிதனாகிறான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் மக்கள் இலக்கியம்!

இலக்கியம் என்பது மக்கள் சார்ந்து நிற்பது என்பதே அடிப்படையாகவுள்ளது. மக்களிடமிருந்து பெற்று மக்களுக்கே அவற்றைத் திரும்ப வழங்குவது என்பதே சிறந்த செயற்பாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கலை கலைக்காகவே என்ற ஒரு வெத்துவேட்டுக் கோசமும் ஆங்காங்கு எழுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கோசம்பற்றி நாம் சிறிதும் கவலை கொள்ளவில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் இலக்கியம் எந்தளவுக்குத் தன்னைத் தாக்குப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்ற வினாவின் பக்கமே நாம் எமது பார்வையைத் திருப்பிவிட்டிருக்கிறோம். குறிப்பாகப் புலத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இலக்கியத்தின் இன்றைய தார்ப்பரியம் என்ன என்பது பற்றியே சிந்தனை திரும்பியுள்ளது.

புலத்தைப் பொறுத்த அளவில் இன்றைய பொருளாதாரப் பிரச்சினை அறிவைத் தேடுவதா பொருளைத் தேடுவதா என்கின்ற பாணியில் போக்குகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் ஆங்காங்கு புதிய புத்தகங்கள் வெளிவருவதும் வெளியீட்டு விழாக்கள் நடைபெறுவதும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இடையிடையே புத்தகத் திருவிழாக்களும் நடந்து கொண்டிருக்கின்றன தான். ஒரு மாற்றத்தைக் கொண்டுவரக் கூடியளவுக்கு எங்கட புத்தகங்கள் அமைப்பினர், உயிலடி புத்தக அமைப்பினர், பண்டாரவன்னியன் புத்தகசாலையினர், தேசியகலை இலக்கியப்பேரவையினர் ஜீவநதி சஞ்சிகையினரென பலர் உத்வேகத்தோடு புறப்பட்டு ஈழத்து எழுத்தாளர்களுக்கு நம்பிக்கை கொடுத்து வந்த வேளையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இலக்கிய நகர்வுகளின் பாதையில் ஒரு பின்னடைவைக் கொண்டு வந்துள்ளது.

புலம்பெயர் நாடுகளில் எழுத்தாளர்கள் குழு நிலையில் இயங்கி வருகிறார்கள். ஆங்காங்கே செயற்பாடுகள் நம்பிக்கை தருபவனாக உள்ளன. சில அமைப்புகள் காத்திரமான சில விடயங்களை இலக்கியத்திற்காகப் புரிவதையும் காணக் கூடியதாகவுள்ளது.

இங்குள்ள வாசகர்கள் இலக்கியப் புத்தகங்களை சஞ்சிகைகளை வாங்குவதில் ஆர்வம் காட்டாத நிலை ஒன்று உள்ளது. அவர்கள் கூறும் காரணம் ஊருக்குதவுகிறோம் அதனால் பணம் இல்லை என்பதுவே. ஊர்ப்பிரச்சினைகளை சாட்டாகக் கொண்டு நழுவுகின்ற மனப்பான்மை இப்போது மட்டுமல்ல நாட்டில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே நிகழ்கிறது. சாதாரண வாசகர்களைவிட இலக்கியத்தோடு ஈடுபாடு கொண்டவர்களும் உள்ளடங்குவது கவலையைத் தருகிறது.

இங்கு நடைபெறும் இலக்கியக் கூட்டங்களில் செவிமடுப்பவர்களாக பத்துப்பேர் இருக்கும்போது இருபதுபேர் உரையாற்றுவார்கள். இதன் தார்ப்பரியம் எனக்குப் புரிவதில்லை. இலக்கிய சஞ்சிகைகளையும் புத்தகங்களையும் சில இலக்கிய விற்பன்னர்கள் இலவசமாக எதிர்பார்க்கின்றனர்.

ஈழத்துப் புத்தகங்களை விமர்சிக்கும் ஒரு சிலர் அவற்றை நையாண்டி செய்து சபையிலிருப்பவர்களை சிரிக்க வைத்து அதனில் குளிர் காய்கிறார்கள்.

இந்த நிலைமைகள் எப்போதுதான் மாறப்போகிறதோ தெரியவில்லை?

மக்களோடு பேசுவோம்! மக்களிடம் அன்பைத் தேடுவோம் ! மக்களுக்காகவே படைப்போம்!

மு. தயாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே................


1 புலத்திலும் புலம்பெயர் தேசத்திலும்....
ஆசிரிய தலையங்கம்

2 உள்ளே.......

3 அவளும் நானும்
கர்ணன் சின்னத்தம்பி

5 அன்பு என்பது
கமலினி கதிர்

7 கோண(ல்)ப்பார்வைகள்
ஆர்த்திகா சுவேந்திரன்

11 வேட்டை
மண்டூர் அசோகா

15 கரும்பலகை - தொடர்கதை
மு.தயாளன்

19 உழவுமாடு
காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

21 குழம்புச்சோறு
அலெக்ஸ் பரந்தாமன்

24 நெஞ்சிலிட்ட தீ
கே. டானியல் சிறப்புச் சிறுகதை

31 மஞ்சரி 23 ஒரு பார்வை
பேராசிரியர் செ. யோகராசா

32 சிறுகதை எழுதுவது எப்படி...
மு.தயாளன்


**சிறுகதை மஞ்சரி 23 இன் சிறந்த மூன்று சிறுகதைகள்**

1. பூக்களின் வண்ணங்கள் - கமலினி கதிர்
2. எங்கிருந்தோ வந்த மரணம் - அகரா
3. காலத்தின் கோலங்கள் - சியாமளா யோகேஸ்வரன்

மஞ்சரியின் 26 ஆவது இதழ் (புரட்டாதி) நந்தினிசேவியர் சிறப்பிதழாக வெளிவருகிறது. அவர் சம்பந்தப்பட்ட விடயங்கள் வரவேற்கப்படுகின்றன.

### எழுத்தாளர்கள் கவனத்திற்கு:

மஞ்சரியில் எழுதும் இலங்கையில் வதியும் எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக 1000 ரூபா தரப்படும் என்று கூறியுள்ளோம். இது கிடைக்காதவர்கள் தயவுசெய்து உங்கள் வங்கிக் கணக்கு விபரங்களை எமக்கு அறியத்தரவும். ஒவ்வொரு தடவை நீங்கள் கதையை அனுப்பும்போதும் இந்த விபரங்கள் கதையுடன் இணைக்கப்பட வேண்டும். (ஆ-ர்)


**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர், ஓவியர் கைலாசநாதன் ஓவியை கோகிலா டயாளினி


**1000 பேரை இணைப்போம்......**

தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: ஒரு பாடசாலை ஒருவருடம் **£5.00**
ஐரோப்பா: ஒரு பாடசாலை ஒரு வருடம் **6 Euro**
மற்றைய நாடுகள்: ஒரு பாடசாலை ஒரு வருடம் **$10**


**அட்டை வடிவமைப்பு:** ரமணன் நற்குணதயாளன்
**அட்டைப்படம் :** R. கோகிலா டயாளினி
**ஓவியர்கள்:** G. கைலாசநாதன் , R. கோகிலா டயாளினி

**முதன்மை ஆசிரியர்**
மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின், செல்வி த. சரண்யா, திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா
**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649

**சந்தா விபரம்:**
**Srilanka:** 900Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year
**Den/Swiss/Ger:** 80Euro/year **Can/USA/Aus:** $120
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC BUKBGB22

**விநியோகம்:**
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: வி. மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649
வவுனியா பண்டாரவன்னியன் புத்தகசாலை +94772244616





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளும் நானும்..

அவளை எப்போது கண்டேன். எப்போது அவளோடு முதன் முலாக பேசத் தொடங்கினேன் என்பது கூட எனக்கு சரியாக நினைவில் இல்லை.எப்போதும் எனக்காகக் காத்திருப்பாள். நான் என்ன சொன்னாலும் என்ன ஏசினாலும் கூட மறுவார்த்தை கூடப் பேசாமல் கேட்டுக் கொண்டே இருப்பாள். என் உணர்வுகளின் மனக்குமுறல்கள் எல்லாவற்றையும் அவளுடனேயே பேசுவேன். அவள் வேறு யாரிடமும் பகிர்ந்து கொள்ளமாட்டாள் . தனக்குள்ளேயே வைத்திருப்பாள் என்ற நம்பிக்கை.



அவள் பாடசாலைப் பக்கமே போனது கிடையாது. அவளுக்கு நான்தான் சிலவேளைகளில் சொல்லிக் கொடுப்பேன். அப்போதும் கூட விளங்கிக் கொள்கிறாளா? இல்லையா என்பது கூட எனக்குத் தெரியாது.

சிலவேளை வறுத்தலங் கம்பு புடுங்கி நான் வாத்தியாரிடம் வாங்கின அடிகளை எல்லாம் ஞாபகம் வைத்து அவளிடம் கேள்வி கேட்டு அவள் சொல்லாத போது அவளுக்கு அடி அடி என்று அடித்து விடுவேன். அவள் அப்போதும் கூட கல்லுளி மங்கை போல பேசாமலே இருப்பாள். நான் கோபத்தில் இனி உன்னோடு கதைக்க மாட்டேன். நீ என்னுடைய தூமை என்று விரலை மடித்துக் காட்டி விட்டுப் போய் விடுவேன். அடுத்த நாள் மெது மெதுவாக அவளின் முன் போய் மன்னித்துக் கொள் நான் உன்னோடு உறவு என்று அவளின் தாகத்தைப் போக்குவேன். அவளோ நேற்று எதுவுமே நடவாவது போலவே இருப்பாள். இந்த ஒரு சிறப்பே எனக்கு அவளைப் பிடிக்க காரணமாயிற்று..

இப்போது ஆண்டுகள் பலவாகி இருவரும் கொஞ்சம் வளர்ந்து விட்டோம். ஆனாலும் இன்றும் அவளோடு தான் எனது பேச்சுகள் கோபங்கள் எல்லாமே. நேற்று கள்ள மாங்காய் பிடுங்கித் தின்றதை முன்னால் வீட்டு மணியண்ணன் சொல்ல அப்பா பூவரசங்கம்பால அடி அடி என்று அடிச்சு உடம்பெல்லாம் ஒரே தழும்பு.

அதைக் கூட காட்டிக் காட்டிச் சொல்ல .. நீ செய்தது பிழைதானே என்று சொல்லு மாப்போல பார்த்துக் கொண்டிருந்தாள். எதுவுமே சொல்லவில்லை. எனக்கும் பிறகு அவள் பார்வையில் இருந்து நான் செய்த தவறு புரிந்தது. அப்படி எனக்கொரு நல்ல நண்பியாகவே இருந்தாள்

காலம் தன்பாட்டில் ஓடிக்கொண்டிருக்கிறது. எனக்குள் என்னை அறியாமலே மாற்றங்கள். மீசை மெதுவாக முளைக்கத் தொடங்கியது. என் குரலும் மெதுவாக மாறிக் கொண்டிருக்கிறது. எனக்குள் ஏதோ மாற்றம் நிகழ்வதை உணர்கிறேன். அதைக் கூட அவளிடம் தான் சொல்லினேன். வெளியிலே சொல்ல வெட்கமாக இருந்தது. இப்போதெல்லாம் அடிக்கடி கண்ணாடி பார்க்கிறேன். மீசையை மெதுவாக வருடிப் பார்க்கிறேன். மீசைக் கந்தசாமி அண்ணன்ர மீசை எத்தனை அழகாக இருக்கிறது. அப்படி எனக்கும் முளைத்தால் எப்படி இருக்கும். எனது ஆசைக் கேற்ப மீசை வளரவில்லை. பள்ளியில பொடியள் கதைச்சாங்கள். மீசையை வழிச்சால் விரைவாக வளரும் என்று வீட்டில ஒருதரும் இல்லாத நேரம் பார்த்து அப்பாவின்ர றேசரை எடுத்து மெதுவாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிச்சுப் போட்டுக் கண்ணாடியில் போய்ப் பார்த்தேன். எனக்கே என்னைப் பிடிக்கவில்லை. வீட்டுக்குப் பின்னால போய் அவளிடம் காட்டினேன். அவளும் ஒரு மாதிரி முகத்தை திருப்புவது போல இருந்தது..ஆனால் எனக்குள் ஏனிந்த மாற்றம்.

வகுப்பில் எல்லாப் பெண்களையும் ஒரே மாதிரிப் பார்த்த எனக்கு அந்த இரட்டைப் பின்னல் போட்டுக் கொண்டு வாற கறுப்பி மேல என்னை அறியாமலே ஒரு வித ஆசை முதலில் அவளைப் பார்க்கும்போது ஏற்பட்ட வெறுப்பு இப்போது இல்லை. அவளது பெயரைக் கறுப்பி என்று கூப்பிடும் போது என்ன கறுப்பி சிவப்பி வேறை பெயரே கூப்பிடக் கிடைக்கவில்லையா என்று நினைத்த எனக்கு இப்போது கறுப்பி என்பதைவிட அழகான வேறு பெயர் உலகத்தில் இருக்க முடியுமா என்று எண்ணத் தோன்றியது.

அவளது உச்சியிலே தெரிந்த நாலைந்து நரை முடிகள் மழைக்கால மேகத்தில் மின்னல் தெரிவது போல இருந்தது.அவளைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்ற எண்ணத்தில் இவளோடு பேசும் நேரம் குறைந்து போனதை நானே அறியவில்லை. ஆனாலும் என்னிடம் இருந்த மாற்றங்களை எப்படியாவது இவளிடம் இன்று சொல்லிவிடவேண்டும் என்று சொல்லிவிட்டேன். அவளும் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தாள். இதுவரை நான் இவளோடு பேசிய எதையும் யாரிடமும் சொன்னதில்லை. இப்போதும் யாரிடமும் சொல்ல மாட்டாள் என்ற நம்பிக்கை.

ஊரில பரகசியமானால் காதலும் கத்தரிக்காயும் முளைச்சு மூண்டு இலை விடேல்லை அதுக்குள்ள காதல் கேட்குதோ என்று வீட்டில பிரசங்கம் தொடங்கிவிடும். ஊரில காதலை எப்போதுமே எங்கள் சமூகம் அங்கீகரித்ததாகத் தெரியவில்லை. அதனால் இவளிடமே எனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது வழக்கமாகி விட்டது. அவளும் நல்ல நண்பியாக நான் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொண்டே இருந்தாள்.. இப்பவெல்லாம் கறுப்பியைப் பார்ப்பதும் அவளோடு பேசுவதுமே பொழுதாகிக் கொண்டிருக்க திடீரென கட்டாய ஆள் சேர்ப்பு அம்மாவும் அப்பாவும் ஏதோ கொஞ்ச நாளாக குசு குசுத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

ஒரு நாள் திடீரென அம்மா வந்து இனிமேல் இங்க இருக்க முடியாது எங்காவது ஓடித்தப்பு என்று சொல்லக் கேட்டதும் எனது கனவுகள் ஆசைகள் எல்லாம் தகர்வது போன்ற உணர்வு. அதிலும் கறுப்பியையும் நண்பியையும் விட்டுப் போக மனமில்லாது தவித்தேன். அம்மாவிடம் எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை.

அந்த நாளும் வந்தது. மண்ணை விட்டு கறுப்பியை விட்டு நண்பியை விட்டுப் போகப் போகிறோம் என்றதும் அழுகை தான் வந்தது. எதற்கும் நண்பியிடம் சொல்லிவிட்டு அவளையும் பார்த்துவிட்டுப் போவோம் என்ற உணர்வில் போய் அவளைப் பார்த்தபடியே கொஞ்ச நேரம் நின்று விட்டு இதுவரை என் உணர்வுகளையெல்லாம் அவளிடம் தானே சொன்னேன்.இப்படியொரு நண்பி இனி வாய்ப்பாளா..? தெரியவில்லை என்ற ஏக்கத்தோடே என் பயணம் ஆரம்பமானது.

எத்தனை ஆண்டுகள் எப்படிப் போனது என்றே தெரியவில்லை. இத்தனை ஆண்டின் பின் ஊருக்கு வந்திருக்கிறேன். எல்லாமே மாறிப் போய்க் கிடக்கிறது. குடிசைகள் எல்லாம் கல் வீடுகள் ஆகி எங்கடை வீட்டுக் காறரும் நல்ல தண்ணி தேடி வேறை இடத்தில....... எல்லாமே மாற்றம் அன்று எனக்குப் பெரிய தெருவாக இருந்ததெல்லாம் எனக்கு சிறிய தெருவாகத் தெரிகிறது. எங்கடை ஊரில இருந்த சனம் எல்லாம் எங்க போய்விட்டதோ தெரியவில்லை. ஒரே அமைதியாக சுடுகாடு மாதிரிக் கிடக்கு. இதுதான் அத்தனை வருடப் போர் எங்கள் மக்களுக்குத் தந்த பரிசு.

கறுப்பியைத் தேடினேன். அவளைக் காணவில்லை. சரி என் நண்பியைக் கண்டு புலம் பெயர் தேசத்தில் போன புதிதில நான் பட்ட அவஸ்தைகள் மொழி புரியாமல்பட்ட பாடு மேலைத்தேயப் பண்பாட்டோடு ஒத்திசைய முடியாமல் பட்ட பாடுகள்,குளிர் காலம் எல்லா அனுபவங்களையும் சொல்ல வேண்டும். வீட்டுக்குப் பின்னால போய்ப் பார்த்தேன். அவளுக்கும் வயது போய்விட்டது. நீண்டு நிமிர்ந்து வளர்ந்து விட்டாள். நாலைந்து காவோலைகள் விழுவதற்கு தயாராகிக் கொண்டிருந்தன. இளமையில் அவளோடு குனிந்து நின்றே பேசினேன். இப்போது அவள் எட்ட முடியாத உயரத்தில் அண்ணாந்து பார்த்தேன். அதன் இடுக்குகளுக்கிடையே வந்த புதிய பாளைகள் என்னைப் பார்த்துச் சிரிப்பது போல இருந்தது. காற்றுக்கு அசைந்த காவோலைகள் என்னைக் கண்டதும் நினைவு மிகுதியால் கைதட்டி வரவேற்பது போல இருந்தது. எனக்குள். என் நண்பி இன்னும் என்னை ஞாபகம் வைத்திருக்கிறாள் என்ற சந்தோசத்தில் அவளுக்கு கிட்டப் போய் ஒரு தட்டுத் தட்டி என் சந்தோசத்தை தெரிவித்தேன்...

## குரு

எந்த ஒரு விடயத்தையும் தெரிந்துகொள்வதற்கு ஒருவருக்கு இன்னொருவருடைய உதவி தேவைப்படுகிறது. அப்படி ஒரு விசயத்தைத் தெரிவிக்க வந்தவருக்கு ஆசார்யன் என்றும் குரு என்றும் பெயர். வித்தையைக் கற்றுக் கொடுப்பவர் ஆசார்யர் என்றும் ஞானத்தை உணர்த்துபவர் குரு என்றும் சொல்லப்படுகிறார். இதற்குச் சொல்லிக் கொடுக்கிற நபரின் அண்மை தேவைப்படுவதால் பரனுக்குத் தந்தையே ஆசார்யனாகவும் குருவாகவும் விளங்குகிறார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு என்பது...

கமலினி கதிர்

தோட்டத்தில் மெல்லென தென்றல் தவழ்ந்து கொண்டிருந்தது. பூஞ்செடிகளிலுள்ள சில மொட்டுகள் மென்மையான தம் இதழ்களை விரித்து மலரட்டுமா என்று யாரிடமும் அனுமதி கேட்காமலேயே மலர்ந்தன. தான் மலருவதற்கு அவை யாரிடமும் அனுமதி பெறும் தேவை அவற்றுக்கு இல் லை. அங் கிருந் த இருக்கையில் அமர்ந்து மனதைச் செதுக்கும் அறிவியல் நூலுக்குள் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்த பரிதி "ஙீ ஙீ" என்ற அவலக்குரல் கேட்டு அந்த இடத்திற்கு விரைந்தான்.ஒரு சிறு குழியில் விழுந்து வெளியே வர முடியாமல் "தயவு செய்து எனக்கு உதவுவாயா?" என்று ஙீஙீ என்ற தனது மொழியில் தலையைத் தூக்கிக் கேட்டது சின்னஞ் சிறிய நாய்க்குட்டி ஒன்று. அதன் கெஞ்சும் குரல் பரிதியின் இதயத்தை தொட அவசரமாக அந்த நாய்க்குட்டியை குழியிலிருந்து தூக்கினான். தூக்கியபோது அதன் இதயத் துடிப்பு பரிதிக்கு கேட்டது.பயத்தில் அதன் இருதயம் வேகமாகத் துடித்துக்கொண்டு இருந்தது. பரிதி அதை மெதுவாகத் தடவியபோது அதன் இதயத்துடிப்பு மெல்ல மெல்ல சீராகியது. காலைத் தடவும்போது மீண்டும் தன் மொழியில் "ஙீஙீ" என்றது.எல்லா உணர்வுகளுக்கும் அதற்குத் தெரிந்தது ஒரே மொழி.ஆனால் கத்தும் விதத்தில் உணர்ச்சியைக் காட்டியது.



பரிதி புரிந்து கொண்டான். கீழே விழும்போது காலில் அடிபட்டிருக்கிறது என்பதை. பரிதி மென்மையாக அதன் கால்களைத் தடவி விட்டான். தன்னைக் காக்க வந்த கடவுளாகப் பரிதியை நினைத்த அந்த நாய்க் குட்டி நிம்மதியாக அவன் நெஞ்சோடு ஒட்டிக் கொண்டு தூங்கத் தொடங்கியது. யாரோ பெண்குட்டி என்று தூக்கி எறியும் நோக்கில் அந்தத் தோட்டத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள்.நிலைமையைப் புரிந்து கொண்ட பரிதி தன்னுடன் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்று அடிபட்ட அதன் காலுக்கு மருந்திட்டான். அதற்கு ஒரு தட்டில் உணவு போட்டு அதன் முன்னால் வைத்தபோது நன்றி உணர்வுடன் வாலை ஆட்டியபடி உணவை உண்டது. அதற்கு படுக்க ஒரு விரிப்பு போட்டபோது பரிதியைத் தனது உறவாக வரித்துக் கொண்டது.அவன் போகும் இடம் எல்லாம் தானும் சென்று அவனை அன்பினால் தன் பக்கம் சாய வைத்தது.

பரிதி தன் பெற்றோரிடம் சொன்னான். "நாங்க இந்தக் குட்டியை வளர்ப்போமா அப்பா?"

"இது உயர்சாதி நாயாக இருந்திருந்தால் இதன் மதிப்பே தனி.உன் விருப்பப்படி வளர்க்கலாம்" என்றார். அப்பாவின் அனுமதி கிடைத்தவுடன்

"அப்பா! இதற்கு ஒரு பெயர் வைப்போமே" என்றான்.

"அதற்கென்ன ஒரு பெயர் வைத்திட்டால் போச்சு." என்று கூறி "கர்ணன் என்று பெயர் வை" என்றார்.

"மகாபாரதத்தில் வரும் கர்ணன் பெயரா அப்பா? அவர் கொடை வள்ளல் அல்லவா?அவருடைய பெயர் எப்படி இந்தக் குட்டிக்கு பொருத்தமாயிருக்கும்?" என்றனர் பரிதியும் அவன் அம்மாவும். "இல்லை. அதுதான் பொருத்தமான பெயர். அவன் கொடையாளியாய் இருந்தது போலவே தன் நண்பனான துரியோதனனுக்கு மிகவும் நன்றி உள்ளவனாகவும் இருந்திருக்கிறான். பாண்டவர்கள் தன் சகோதரர்கள் என்று தெரிந்த பின்பும் நண்பனை விட்டு விலகாது கடைசி வரை உடனிருந்து உயிரை விட்டிருக்கிறான். நன்றியைக் காட்டிய அவனது பெயரை விட வேறு எது பொருத்தமாக இருக்கும்" என்றார் அப்பா. அன்று முதல் அந்தக் குட்டி கர்ணனாக மாறியது.அந்தப் பெயருக்குப் பொருத்தமாக கொடுப்பதிலும் நன்றியுணர்விலும் சிறந்து விளங்கியது.பரிதி கொடுத்த அன்பினால் கர்ணனும் எல்லா உயிர்களையும் நேசிக்கத் தொடங்கியது. அன்று முதல் அந்தக்குட்டி கர்ணனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியது. அந்தப் பெயர் வைத்ததால் தானோ என்னவோ அதுவும் தனது உணவை பூனை,கோழி, காகம் என்று எல்லாவற்றுடனும் பங்கு போட்டு உண்ணத் தொடங்கியது. இயல்பிலேயே அது எல்லோரையும் நேசித்தது. அன்பு கொடுத்தலும் வாங்குதலும் அங்கே இயல்பாய் நடந்ததினால் அன்பு நடமாடும் இடமாக அந்த வீடு மாறியது. காகம்.கோழி, பூனை,ஆடு, அணில் யாவும் கர்ணனிடம் பயமின்றி அன்புடன் பழகின.

கோழி தனக்கு கொடுக்கும் அரிசியை கர்ணனுடன் பகிர்ந்து உண்ண விரும்பியது. ஆனால் கர்ணனால் அரிசியை உண்ண முடியாததால் கோழியை உண்ண விட்டு பார்த்து இரசித்தது. கோழிக் குஞ்சுகளை பருந்திடம் இருந்து பாதுகாக்கும் பொறுப்பை கர்ணன் தானாகவே எடுத்துக் கொண்டான். பருந்துகள் வரும்போது காகங்களும் "காகா" என்று கரைந்து கோழிக்குஞ்சுகளைக் காத்தன. காகம் கர்ணனின் மேல் உட்கார்ந்து இருப்பதும் கோழிக்குஞ்சுகள் பூனையுடனோ கர்ணனிடமோ ஒட்டி இருப்பதும் அங்கே இயல்பாய் நடந்தன. கர்ணனின் வருகையால் அந்த வீட்டில் எந்நேரமும் அன்பும் பாசமும் இரக்கமும் பரவியது.

கர்ணன் பரிதி வீட்டுக்கு வந்தது 2008 காலப் பகுதி ஈழப்போர் வலு மும்மரமாக நடந்த காலமது. எறிகணைத் தாக்குதல் தாறுமாறாக நடந்தது. எங்கும் மரண ஓலம். ஒவ்வொருத்தரும் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தார்கள். எங்கும் ஐயோ அம்மா என்ற அவலச் சத்தமே காற்றோடு கலந்து ஒலித்துக் கொண்டிருந்தது. இரத்த வாடையையும் அவலச் சத்தத்தையும் சுமந்துகொண்டு வீசியது ஈழக்காற்று. குண்டுகள் சரமாரியாகப் பொழிந்தன. பரிதியோடு ஒட்டிக்கொண்டு கர்ணனும் வீட்டுக்குள் முடங்கியிருந்தது. வெளியில் சென்றிருந்த அப்பாவை நினைத்துக் கவலையோடு அந்தக் குடும்பம் காத்திருந்தது. அப்போது பயங்கரச் சத்தம் காதைத் துளைத்தது. சத்தம் அடங்கியபோது பரிதியின் வீடு தரைமட்டமானது தெரிந்தது. இடிபாடுகளுக்கிடையே தன் கால் மாட்டிக் கொண்டு வெளியே எடுக்க முடியாமல் திண்டாடினான் பரிதி. பக்கத்தில் நின்ற கர்ணன் தன் பற்களால் அவனை வெளியே எடுக்கப் படாதபாடுபட்டது. ஒரு வழியாக வெளியே இழுத்துவிட்டு பரிதியின் சட்டையைக் கௌவி இழுத்துக்கொண்டு மெல்ல மெல்ல பாதுகாப்பான இடம் நாடியது கர்ணன். இரத்தம் வழிவதை தன் நாக்கால் வழித்து விட்டபடி வைத்தியர்கள் சிகிச்சை செய்யும் இடத்துக்கு விரைந்த கர்ணனை நினைத்துப் பெருமைப் பட்டான் பரிதி. தான் தப்பி ஓடாமல் தன்னை இழுத்துக்கொண்டு வைத்தியர் முன் நிறுத்திய கர்ணனை வாஞ்சையுடன் தடவினான் பரிதி. அப்போதுதான் பார்த்தான் கர்ணனின் காலிலும் அடி பலமாகப் பட்டு இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. கண்களில் நீர் சோரக் கர்ணனை வாரியணைத்தான் பரிதி. ஐந்தறிவு மனிதர்களிடம் மனித நேயம் வற்றிக் கொண்டு போக நாலறிவு என்று மனிதனால் தரப்படுத்தப்பட்ட உயிரினம் அன்பு செலுத்துவதில் உயர்ந்து நிற்பதைக் கண்கூடாகப் பார்த்து மலைத்துப் போனான் பரிதி. மனிதன் ,மிருகம், பறவை என்ற எந்த வேறுபாடும் இன்றி உயிரினங்கள் என்ற பொதுப் பெயருடன் மகிழ்வோடு வாழ்ந்து வந்த இடம் இனத்தின் பெயரால் சிதைக்கப்படுவதை எதுவுமே செய்ய முடியாமல் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் பரிதி. அன்பு என்ற பயிர் விதைக்கப்படாததால் இனி அன்பை அறுவடை செய்ய முடியாதோ?

## இறப்பு

இறந்துபோதல் என்றால் என்ன? அப்பாவை எப்படித் தகனம் பண்ணி இருப்பார்கள் ? நெருப்பு மூட்டி எரித்தால் வலிக்காதா? ஏன் வலிக்காமல் போயிற்று? எது இருந்தால் வலி? எதை இழந்தால் மரணம்? என்று தன்னைத்தானே உற்றுப்பார்த்தான். எது இருக்கிறது உள்ளே? என்று மெல்லத் தேடினான். இறந்துபோதல் என்றால் எது வெளியே போகவேண்டும் என்று மறுபடியும் ஆராய்ந்தான். இப்படி உட்கார்ந்து பார்த்தால் தெரியுமா? இறந்து போனால்தான் தெரியும். மிகப்பெரிய அறிவாளிகள் கூட மரணம்பற்றி யோசிக்கமாட்டார்கள். பதினாறு வயது வேங்கடராமன் அதை அறிய விரும்பினான். பளீரென்று ஒரு பயம் வந்தது. செத்துப் போயிடுவோமா? உடம்பு ஆரோக்கியமாக இருந்தாலும் பயம் பதற வைத்தது. 'பரவாயில்லை போ'! அவன் மரணத்திற்குத் தயாரானான்.


**- பாலகுமாரன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண(ற்)ப் பார்வைகள்

அது மழைக் குணமான ஒரு இதமான மாலை நேரம். நூலகத்தில் அந்த அமைதியான இதமான நேரத்தில் புத்தகம் வாசிப்பது அவ்வளவு எளிதில் கிடைக்காத ஒரு வரம். இருந்தும் கமலா நூலகத்தில் இருந்து அவசர அவசரமாக மூன்று மணியளவிலேயே வீட்டிற்குப் புறப்பட்டாள். நூலகம் சென்று புத்தகங்களோடு பொழுதைக் கழிப்பது கொள்ளைப் பிரியமாக இருந்தாலும் அவளுக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் தான் நூல் நிலையம் செல்வதற்கு வாய்ப்புக் கிடைக்கும். அதனால் அந்த வாய்ப்பைத் தவறவிட்டுவிடாமல் வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்காக ஞாயிற்றுக் கிழமைகளில் நூலகம் திறக்கும் போது காலை ஒன்பது மணியளவில் நூலகத்தினுள் செல்பவள், நூலகம் பூட்டும் போது மாலை ஐந்தரை மணியளவிலேயே வெளியில் வருவாள். ஆனால் அன்று மூன்று மணிக்கே வெளியில் வந்தாக வேண்டும் என்பது கமலாவின் மனது அவளுக்கு ஏற்படுத்திய நிர்ப்பந்தம்.



அன்று அவளின் அயல் வீட்டுக் குழந்தையின் முதலாவது பிறந்தநாள் நிகழ்வு. நூலகமா? நிகழ்வா? என்றால் நிச்சயம் கமலாவின் மனம் நூலகம் என்று தான் கூறும். ஆனால் அன்று அது வேறுவிதமாக இருந்தது. மூன்று மணிக்குப் புறப்பட்டவள், அவசர அவசரமாக நடந்து பேரூந்து நிலையத்தை அடைந்தாள். புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த பேரூந்தில் ஏறியவள் நான்கு மணியளவில் வீட்டைச் சென்றடைந்தாள்.

"ஐஞ்சு மணிக்கு கேக் வெட்டுறது எண்டு சொன்னவை. நீ வரமாட்டாய் எண்டு எல்லோ நினைச்சன். தம்பி உதவி செய்யுறதுக்காக போய் இருக்கிறான். சரி குளிச்சு வெளிக்கிட்டு வா."

"இல்ல அம்மா. இங்க நான் கட்டாயம் வரவேணும். அதுதான் வந்தனான். சரி நீங்கள் போகேலயோ? ஏதும் உதவி செய்து குடுக்கலாம் இல்லையோ?"

"இது என்னடி அந்தக் காலமா? அந்தக் காலத்தில ஒரு வீட்டு நிகழ்வை ஊரே கூடி நிண்டு செய்து முடிக்கும். இப்ப ஆருக்குத் தான் நேரம் இருக்கு. எல்லாம் ஓடர் தான். பணத்த குடுத்தா அந்த அந்த வேலைய உரிய உரியவன் செய்து விட்டுட்டுப் போகப் போறான்."

"அதுவும் சரி தான் அம்மா. இண்டைக்கு திடீரெண்டு மழையாவும் கிடக்குது. சைக்... "

கமலா குளித்துவிட்டு வந்து தயாராகுவதில் மும்முரமாக இருந்தாள். வெளித் தோற்றம் பற்றிச் சிறு கவலையும் இன்றி இருந்தவள் தான் கமலா. அப்போதும் கூட கவலை இல்லாவிட்டாலும் அடி மனதில் ஒரு நெருடல் இருந்து கொண்டு தான் இருந்தது. அந்த நெருடலுக்கு எவ்வாறேனும் அன்று மருந்து போட்டு விட வேண்டும் என்றே துடித்துக் கொண்டிருந்தாள். அந்தத் துடிப்புத் தான் நூலகத்தில் இருந்த அவளை விரைவாக வர வைத்தது. தோற்றத்திலும், தன்னை அலங்கரிப்பதிலும் சிறிதும் நாட்டம் இல்லாத தன் மகள் அன்று ஐந்தாறு உடைகள் மாற்றி மாற்றி கண்ணாடி முன் நிற்பதைப் பார்க்க கமலாவின் தாய்க்கு வியப்பாகவே இருந்தது. அப்போது இருந்துவிட்டு எப்போதாவது நிகழும் அந்த சம்பாசணை தாயின் ஞாபகத்தில் எட்டி உதைத்தது.

"உன்ட வயசுப் பிள்ளையளில நிறைய மேக்கப், சீன் எண்டு சுத்திட்டு திரியுதுகளே. உனக்கு இது மாதிரி இந்த வயசுல வாற உன்னை மற்றவங்கள் முன்னால அழகா காட்டிக்கோணும் எண்டு ஆசை இல்லையா?"

"அடப் போம்மா.... தேவை இல்லாத வேலை அம்மா அது. தோற்றத்தை வைச்சு தான் உலகம் இருக்கு எண்டா அவங்களப் போல முட்டாள் யாரும் இருக்க ஏலாதும்மா.... வெறும் தோற்றம் மட்டும் வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லைம்மா. நாம சுத்தமா இயற்கையா இருந்திட்டா சரி. மினுக்கி மேக்கப் போட்டுத் தான் வாழ வேணும் எண்டு இல்லை கண்டியோ. பேசாம வேலையப் பாரும்மா. நீங்களும் தான் இருக்கிறீங்கள். நீங்கள் என்ன மேக்கப்லயோ திரியு றீங்கள்?"

"அதில்ல கமலா. நாங்க வயசு போனவங்கள். நீங்கள் தானே இளம் பிள்ளைகள். உங்களுக்கு அந்த ஆசை... அதுவும் இந்தக் காலத்தில.... வாறது வழமை தானே. அது தான் கேட்டனான்."

"அப்பிடி முகத்தை பாத்து தான் என் வாழ்க்கைல ஆரும் பழகுவினம் எண்டா அப்பிடி ஒராள் என்னோட பழகவே தேவையில்லை. அந்த மேக்கப் மண்ணாங்கட்டியப் போடுற நேரத்துக்கு கடைசி பத்துப் பக்கமாவது வாசிச்சுப் போடுவன். அவன் அவன் நேரம் இல்லாம திரியுறான். இதுக்க நீங்கள் வேற சும்மா போங்க அம்மா..."

இந்த வார்த்தைகளைக் கேட்கும் போது தன் மகளை நினைத் துக் கர்வம் கொண்ட தாய் உள்ளம், 'அன்று அந்த வார்த்தை களைக் கூறிய கமலா தானா இது?' என்று எண்ணும் அளவிற்கு அன்று அவளது நடவடிக்கைகள் இருந்தன. தாய்க்கு அது வியப்பாக இருந்தாலும் தாய் அதைக் காட்டிக் கொள்ளாமல் நடப்பவற்றை வேடிக்கை பார்த்தாள். ஒரு உடையில் திருப்தி அடைந்தவள் அடுத்து கண்ணாடி முன்னால் நின்று தலை வாரினாள். முழுகினால் கூடத் தாய் ஏச ஏச கேட்காமல் பின்னிக் கொண்டு செல்லும் அவள் அன்று தலையை நன்றாக விரித்து முன்னால் இருபுறமும் இருந்த இரண்டு தொகுதி மயிரை எடுத்து பின்னால் கிளிப் குற்றி முன்னாலும் சில மயிரை எடுத்து அழகாக முகத்தை வருடிக் கொண்டிருக்குமாறு விட்டாள். அவளது சுருள் முடிக்கு அது மிக அழகாக இருந்ததை தாய் கவனிக்காமல் இல்லை.

தலை வாரி முடித்த கமலா அதில் இருந்த பவுடரை எடுத்தாள். தாய்க்கோ ஒரே வியப்பு. சிறு வயதில் தாய் போட்டு விட்ட தன் பின் அவள் ஒரு நாளும் பவுடர் போட் டதே இல்லை. "சும்மா முகத்த பழுதாக்காம சும்மா போம்மா...." என்றுவிட்டுப் போய்விடுவாள். அதன் தாற்பரியம் தாய்க்குப் புரிவதே இல்லை. ஆனால் அன்று அனைத்தும் தலை கீழாக நிகழ்ந்து கொண்டிருந்தது. பொட்டும் வைத்துவிட்டுத் திரும்பிய கமலாவைப் பார்க்க தாய்க்கு தன் கண்ணே பட்டுவிடும் போலத் தோன்றியது. அழகான பார்ப்பவரை உடனே ரசிக்கத் தோன்ற வைக்கும் இயற்கையான முகம் அது. மையிடாத கண்கள் கூட அழகாக கரு கருவென்ற கருவிழிகள், சிவந்த உதடுகள், கன்னங்களை வருடியபடி நிற்கும் சுருள் மயிர், நெற்றி முழுவதையும் ஆக்கிரமித்த வீபூதி, சிரிக்கும் போது கன்னத்தில் விழுந்த குழி என அவள் அழகை ஒவ்வொன்றாக ரசித்துக் கொண் டிருந்தது தாய் உள்ளம். 'இந்தத் தோற்றத்தை வைச்சுத் தானே எல்லாரும் ஒராள மதிப்பிட்டுக் கொண்டு திரியினம். நேற்று வரைக்கும் அது தவறு எண்டு சொல்லிக் கொண்டி ருந்தவள் திடீரெண்டு இப்பிடி மாறிட்டாளே!' என்று எண் ணித் தாய் ஒரு பெரு மூச்சொன்றை விட்டாள்.

"என்னம்மா நிண்டு என்னை பாத்துக் கொண்டு இருக்கிறியள். கெதியா போகோனும் வாங்கோ."

"அது... ஒண்டும் இல்ல... பொறு ரண்டு நிமிசத்துல வந்துடுறன்...."

தன் நடவடிக்கையில் மாற்றம் இருப்பதைப் பார்த்து தாய் திகைத்து போய் இருப்பது கமலாவிற்குப் புரிந்தாலும் 'தாயே திகைத்துப் போனால் அங்கு...' என நினைக்கும் போது அடி மனதுக்குள் ஒரு குதூகலம் ஏற்படவே செய்தது.

"என்ன கமலா இப்பிடியோ வரப் போறாய்? தலையை இப்பிடி விரிச்சு விட்டிருக்கிறாய்? கடசி ஒண்டா சேத்து ஒரு ஹேல்பாண்ட போடன்."

"என்னம்மா நீங்கள்? பின்னி கட்டினா அவிட்டு விடு எண்டு வீங்கள். இப்ப இப்பிடி சொல்லுறீங்கள். இண்டைக்கு ஒரு நாள் பேசாம என் போக்குல விடுங்கோ வாங்கோ அம்மா."

"பின்ன இப்பிடியா விரிச்சு விடுறது? சரி வா நேரம் போகுது....." நிகழ்வுக்குச் சென்று கலந்து கொண்டு வந்திருப்ப வர்களுடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது கமலா யாரையோ தேடிக் கொண்டிருப்பதை தாயும் அவதானித்துக் கொண்டிருந்தாள். ஒரு பிள்ளை அவளைக் குறு குறு என்று பார்த்துக் கொண்டிருந்தது. அந்தப் பிள்ளைக்கும் அந்தப் பிள்ளையின் தாய்க்கும் முன்னால் கமலா எழுந்து சென்று வேறு ஒருவருடன் கதைப்பது போல அவர்களுக்கு தன்னைக் காட்டிய வண்ணம் நின்றது யாராலும் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், கமலா அங்கு போய் நிற்பது அவர் களுக்குத் தன்னைக் காட்டத்தான் என்றது தாய்க்குப் புரிந்தது. தாயும் நிகழ்பவற்றை பார்த்தும் பார்க்காது போல பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தப் பிள்ளை கமலாவை விழித்து விழித்துப் பார்த்துக் கொண்டு இருந்தது. அந்தப் பிள்ளையின் தாய் ஒரு சிறு சோகம் முகத்தில் வந்து போக கமலாவை நோக் கினாள். இவற்றை கடைக்கண்களால் அவதானித்த கமலா ஒரு வெற்றிப் பூரிப்பை உணர்வதைக் கமலாவின் தாய் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே இருந்தாள். தாய்க்கு அனைத்தும் புதிதாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. சிறிது நேரத்தின் பின் கமலாவை விழித்து விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த பிள்ளை எழுந்து வீட்டிற்குச் செல்வதையும் கமலாவும் தாயும் அவதானிக்காமல் இல்லை. அதன் பின்னர் அந்தப் பிள்ளையின் தாயும் தன் தாயும் கதைப்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கல்வி பற்றிக் கதைப்பதையும் கமலா அவதானித்தாள். கமலாவும் கடமைக்கு அவர்களைப் பார்த்து புன்னகைத்தாள். கமலாவிற்கு அடி மனதில் இருந்த நெருடலுக்கு நிறைவான மருந்து போட்டுவிட்ட திருப்தி கிடைத்தது. நிகழ்வும் இனிதாக நிறைவேறியது. வீட்டிற்குச் சென்றதும் கமலாவின் நடவடிக்கைக்கு என்ன அர்த்தம் என்பதைப் புரியாத அவள் தாய் தனது சந்தேகத்தை அவளி டமே வினவினார்.

"கமலா.... உன்னில இண்டைக்குக் கொஞ்ச மாற்றம் தெரிஞ்சுதே. அது ஏன் எண்டது தான் இன்னும் விளங்கேல எனக்கு."

"என்ன அம்மா பயந்திட்டிங்களோ? வீட்டில இருந்து வெளிக்கிடேக்க நீங்கள் உள்ளுக்க பயந்தது எனக்குத் தெரிஞ்சது. ஒண்டு சொல்றன் நல்லா கேட்டுக் கொள்ளுங்கோ அம்மா. இதுவரைக்கும் என்ட வாழ்க்கைல எல்லா விசயமுமே என்ட விருப்பப்படி தான் நடக்குது. என்ன படிக்கோணும் என்ன சாதிக்கோணும், என்ன உடுப்பு போடோணும்,என்ன சாப்பிடோணும், எண்ட எல்லாமே என்ட விருப்பம் தான். ஆனா வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்கிற உரிமை, விருப்பம் முழுக்க உங்க விருப்பப்படி தான். எனக்குத் தெரியும். என்னை விட உங்களுக்குத் தான் என்னை பற்றி நல்லா தெரியும். அதால அந்த பொறுப்பு உங்கட தலைல தான். அதால இனிமேல் மற்றப் பிள்ளையள்ட அம்மா மாதிரி இப்பிடி பயப்பிடுறத நிப்பாட்டுங்கோ சரியோ"

"அதில்லடி. நீ என்ட பிள்ளை. ஆனாலும் பொம்பிள பிள்ளைய பெத்த அம்மாக்கு ஒரு பயம் இருக்கிறது சாதாரணம் தான். நான் உன்னை நம்புறதால தான் போய்ட்டு வந்தா பிறகு உன்னை கேக்கிறன்."

"என்ட அம்மா அம்மா தான்...." தாயைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் கமலா.

"சரி அது இருக்கட்டும். இண்டைக்கு என்ன நடந்தது. ஏன் அந்தப் பிள்ளை உன்னை முழுசி முழுசிப் பாத்துப் போட்டு இடையிலயே எழும்பிப் போட்டுது. அந்தப் பிள்ளைண்ட தாய்க்கும் ஒரு மாதிரிப் போட்டுது. நீ அந்தப் பிள்ளைக்காகத் தானே லைப்றறியையும் விட்டுட்டு இண்டைக்கு வந்தனீ."

"ஓம் அம்மா. நீங்க எப்பவும் கரெக்ட் தான் உங்களுக்கு ரண்டு வருசத்துக்கு முதல் கோயில் திருவிழால நடந்த விசியம் ஞாபகம் இல்லையோ. உங்களுக்கு மறந்திருக்கலாம். ஆனா என்னால இண்டைக்கு வரைக்கும் மறக்க முடியல. இனிமேலும் மறந்து போகுமோ தெரியேல."

"என்னத்த சொல்லுறாய்? விளங்கேல."

"அந்த வருசம் நான் ரண்டாம் தரம் அப்ப தான் ஏ எல் பரீட்சை எடுத்திட்டு இருந்த வருஷம். றிசல்டும் வரேல."

"ஓம் அதுக்கு என்ன? முதல் வருஷம் கிடைச்ச கம்பசுக்கு போ எண்டு சொல்ல நீ தான் கேக்காம திருப்பி எடுத்தனீ."

"உண்மை தான் அம்மா. திருப்பி எடுத்தும் எனக்குப் பிடிச்ச துறை கிடைக்கல. என்ன தான் நான் ஒரு நல்ல துறைல படிச்சுக் கொண்டு இருந்தாலும் பிடிச்சது கிடைக்காத இந்த வருத்தம் வாழ்நாள் முழுக்க இருக்கத்தான் செய்யும். அத விடம்மா. முடிஞ்ச வரைக்கும் எங்களுக்காக எங்கட சமூகத்துக்காக எங்கட நாட்டுக்காக இந்த உலகத்துக்காக ஏதாவது பண்ணுவன். எல்லாருக்கும் பிரயோசனமா ஏதாவது சாதிப்பன். அது ஒரு பக்கமா இருக்கட்டும். ஆனால் அண்டைக்கு நடந்த அந்த சம்பவம் தான் அம்மா என்னையும் என் தோற்றத்து மேல பார்வைய செலுத்த வைச்சது."

"எல்லாம் சரி தான். என்ன சம்பவம்"

"அந்த மீனாவை தெரியும் எல்லோ? எனக்கு அடுத்த வகுப்பு."

"ஆர கந்தன் அண்ணைன்ட மகள சொல்லுறியோ?"

"ஓம் அம்மா. அந்தப் பிள்ளை ஏ எல் எக்ஸாம் சம்பந்தமா கோயில்ல நிக்கேக்க என்னோட கதைச்சுக் கொண்டு இருந்தது. அது கதைச்சுக் கொண்டிருக்க இண்டைக்குப் பாத்தமே, அந்தப் பிள்ளை மீனான்ட கையப் பிடிச்சு இழுத்துக் கொண்டு போய் என்னோட கதைக்க வேண்டாம் எண்டு சொல்லிட்டுப் போக, மீனா அதுக்குப் பிறகு சும்மா ஒருக்கா கடமைக்குச் சிரிச்சிட்டுப் போட்டா."

"ஓம் நானும் பக்கத்தில நின்டனான் தானே. நீ தலை முடிய வெட்டி இருந்ததால தான் அந்தப் பிள்ளை இழுத்துக் கொண்டு போனது."

"ஓம் அம்மா. நான் எதுக்கு தலை முடிய வெட்டினான்? ஸ்ரைலுக்கோ? தேவைக்குத் தானே. பொம்பிள பிள்ளைக்கு நீண்ட கூந்தல் என்பது மரியாதையான நாகரிகமான ஒரு விடயம். அது எனக்கும் தெரியும். ஆனா அதே தலை முடி அந்தப் பிள்ளைக்கு பிரச்சனையா இருந்தா அத வெட்டுறதுல தப்பு இல்ல தானே அம்மா. அண்டைக்கு ஊர் கதைக்கும் அவை சிரிப்பினம் இவை சிரிப்பினம் எண்டு வெட்டாம விட்டிருந்தா தலையிடில படிப்ப கவனிக்க ஏலாம ரண்டாம் தரம் இன்னும் குறைய எல்லொ றிசல்ட் வந்திருக்கும். கடைசியா ஒண்டும் இல்லாம வீட்டில இருந்திருப்பன். இப்ப பாருங்கோ அம்மா என்னட்ட அந்த தலைமுடியும் இருக்கு. மனசுக்குப் பிடிக்காட்டியும் வாழுறதுக்கு ஒரு வழியும் இருக்கு. என்ட இலக்க நோக்கி போய்ட்டு இருக்கும் போது ஏதாவது தடையா இருந்தா அத தூக்கிப் போட்டுட்டுப் போகத் தானே வேணும். அதுக்கு ஏன் அம்மா எல்லாரும் பாத்து சிரிக்க வேணும்? உலகம் எங்க வரைக்கும் வளந்திட்டு பாருங்கோ! ஆனா எங்கட ஊர் இப்பவும் ஒண்டும் இல்லாதத தூக்கிப் பிடிச்சுக் கொண்டு, பொம்பிள பிள்ளை எண்டு காரணம் காட்டி எத்தினையோ திறமைய புதைச்சுக் கொண்டு இருக்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது என்னவோ உண்மை தான்டி. அதுக்குத் தானோ தலைய விரிச்சுப் போட்டு வந்தனீ."

"பின்ன.... அவான்ட வயசு என்ன?.. அந்தச் சின்னப் பிள்ளைக்கு என்ன விளங்கும் எண்டு மீனாவை இழுத்துக் கொண்டு போனவா. அந்த நேரம் எனக்கு எப்பிடி இருந்திருக்கும். ஏதோ நான் தப்பு செய்து போட்ட மாதிரி எல்லோ நடந்தவா. அந்த திருவிழா முழுக்க என்னைப் பாத்துப் பாத்து நக்கலா சிரிச்சுக் கொண்டு திரிஞ்சவா. என்ன தான் நான் திடமா இருந்தாலும் அந்த சம்பவம் இவ்வளவு நாளா எனக்குள்ள இருந்து எப்பிடி வேதனைப்படுத்திக் கொண்டு இருந்தது தெரியுமோ? இண்டைக்கு போய் முன்னால நிண்டு காலம் பதில் சொல்லும் எண்டத அவாக்குக் காட்டினாப் பிறகு தான் எனக்கு ஒரு நிம்மதியா இருக்கு. ஆனா அவ இவ்வளவு சீரியஸா எழும்பிப் போவா எண்டு நான் நினைக்கேல."

"என்னடி கமலா நீ... அது ஏதோ சின்னப் பிள்ளை. நீ படிச்ச பிள்ளை."

"ஓம் அம்மா. படிச்ச பிள்ளை எண்டதால தான் பேசாம நிண்டுட்டு வந்தனான். ஏன்... அம்மா இன்னும் இந்த ஊரும் ஆக்களும் இப்பிடி இருக்கிறாங்கள்? வாழ்க்கை சரியான சின்னன். ஆனா தெரிஞ்சு கொள்ள, சாதிக்க எத்தினையோ விசியம் இருக்கு. அதுகல விட்டுட்டு இன்னும் சிறுமைத்தனமா தேவை இல்லாத ஒண்டை தூக்கிப் பிடிச்சுக் கொண்டு. பொம்பிள பிள்ளை பொம்பிள பிள்ளை எண்டு சொல்லிக் கொண்டு இருக்கினம்.... பொம்பிள பிள்ளைக்குரிய ஒழுக்கம் வேற, அடக்குமுறை வேற. இந்த ஊரில எத்தின பொம்பிள பிள்ளையள் தங்கட திறமைய உள்ளுக்க ஒளிச்சு வைச்சுக் கொண்டு ஊரு சொல்லும் உலகம் சொல்லும் எண்டு பயந்து கொண்டு இருக்கினம்... நீங்கள் உட்பட..... என்னம்மா இது? ஒரு பொம்பிளயால ஒழுக்கமா சாதிக்க ஏலாது எண்டு ஆர் சொன்னது?"

"அது என்னவோ உண்மை தான்டி. உலகம் எவ்வளவு நவீனத்துவத்துக்க போனாலும் இன்னும் கிணத்து தவளையா தேவையில்லாதத பிடிச்சுக் கொண்டு தேவையானத விட்டுட்டு இருக்கிறம்."

"ஓம் அம்மா. நீங்க சங்க இலக்கியங்கள் எல்லாம் படிச்சிருக்கிறிங்கள் தானே. அந்தக் காலத்திலயே புறத்திணையைப் போல அகத்திணைக்கும் முக்கியத்துவம் குடுத்து இருக்கு தானே. ஆனா இப்ப பாருங்கோ ஒரு பொம்பிள பிள்ளை ஒரு காதல் கவிதையோ ஒரு கதையோ எழுதிட்டா போதும். உடன அந்தப் பிள்ளை லவ் பண்ணுது. பாரன் உவாவ எண்டு கொண்டு தொடங்கிடுவீனம். எழுதுற ஆர்வம் இருந்தா எழுத எழுத தானே அம்மா ஆற்றல் வளரும்? இப்பிடி பயந்து எழுதாம விட்டா ஆற்றலும் கண்காணாம தானே போகும். எழுத்து வேற எழுதுறவங்கட தனிப்பட்ட வாழ்க்கை வேற. எழுத்து எப்பவும் சொந்த வாழ்க்கைய மட்டுமில்லை அவதானித்த விடயங்களையும் சொல்லும் எண்ட அடிப்படை கூட நம்மட சனத்திட்ட இல்லையே அம்மா. இது ஒரு உதாரணம் தான். இப்பிடி எத்தினையோ திறமை எத்தினையோ ஆற்றல் பொம்பிள எண்ட ஒரே காரணத்துக்காக, ஊர் சொல்லும் அது சொல்லும் இது சொல்லும் எண்ட ஒரே காரணத்துக்காக மழுங்கடிக்கப்பட்டுக் கொண்டு இருக்கு. எப்ப தான் இது எல்லாம் எல்லாருக்கும் புரியுமோ? வெட்டிக் கதை எல்லாம் எப்ப தான் ஒழியுமோ?"

"உண்மை தான்டி. இது நாங்கள் சொல்லி ஏதோ புரியப் போகுதோ? ஆனா ஒண்டு. மாற்றம் எப்பவும் நடந்து கொண்டு தான் இருக்கும். இப்ப பழைய காலத்தை விட எவ்வளவு முன்னேற்றம். இனியும் மாறும். மாறிக் கொண்டு தான் இருக்கும். நீ சொல்ற மாதிரி எல்லாம் புரிஞ்சு கொள்ளுற காலமும் வரும்."

"காலம் வரும் அம்மா. அதில சந்தேகம் இல்லை. ஆனா எண்ட கவலை எல்லாம் அதுக்கிடேல எவ்வளவு திறமைகள், எவ்வளவு விசயங்கள் அழிஞ்சு போகுது. எனக்கு அந்தப் பிள்ளைல கோபம் எல்லாம் இல்லை அம்மா. அந்தப் பிள்ளைய நினைக்க வேதனையா தான் இருக்கு. இப்ப அந்தப் பிள்ளைண்ட மனசிலயும் தப்பான சில எண்ணக்கருக்கள் தானே விதைக்கப்பட்டிருக்கு. தலை முடி வெட்டினா தப்பு எண்டு யார் சொல்லிக் குடுத்தது அம்மா? இதுல சரி இதுல தப்பு எண்டது அந்த சந்தர்ப்பத்த பொறுத்து தானே இருக்கும். அந்த வேறுபட்ட பார்வைக் கோணம் இருக்கு எண்ட புரிதலே இல்லாத பிள்ளை நாளைக்கு தன்ட ஆற்றலை வெளிக் கொணர முயற்சிக்குமா இல்லையா?... இதுகல நினைச்சா வேதனையா இருக்கும்மா..... அது தான் நான் இண்டைக்குப் போய் முன்னால அப்பிடி நின்டாலாவது அந்தப் பிள்ளைண்ட சிந்தனைல ஒரு மாற்றம் வராதா? அந்தப் பிள்ளை எது சரி எது பிழை எண்டு கொஞ்சமாவது யோசிக்காதா எண்டது என் மனசுல தோன்றின ஒரு பேராசை தான் அம்மா.... என்னவோ சிந்தனை உலகத்துக்குப் பிரியோசனமா இருந்தா சந்தோஷம்...."

பெருமூச்சொன்றை விட்ட கமலாவின் அடி மனதில் இருந்த காயம் ஆறியதாக வெளியில் தோன்றினாலும் அது உள்ளே இன்னும் தகித்துக் கொண்டு தான் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேட்டை

கருநிற மைக்குழம்பைக் கவிழ்த்துக் கொட்டி விட்டாற்போல் எங்கும் இருள் அப்பிக்கிடந்தது. மேற்கு வானத்தில் தயங்கித் தயங்கி எட்டிப்பார்க்கும் ஏழாம் பிறையும் மேகங்களுக்கிடையில் நடுங்கிக் கொண்டிருக்கும் நட்சத்திரங்களும் சிந்தும் ஒளியைவிட வேறெந்த ஒளிகளுமற்ற அந்தகாரமாய் விரிந்து கிடந்தது அந்தப்பிரதேசம்.

தோளில் பாரமாய் அழுத்தும் துவக்கும் கையில் தங்கை முடிந்துதந்த சோற்று மூட்டையும் கறிபுளி சாமான்களுமாய் பழக்கப்பட்ட வழித்தடத்தில் அவன் நடந்து கொண்டிருந்தான். அந்த ஒற்றையடிப் பாதையின் இரு மருங்கிலும் பரந்து கிடந்த வயல் வெளிகளிலிருந்து விளைந்த நெற்கதிர்களின் வாசம் குளிர் காற்றோடு குழைந்து வந்து நாசியை நிறைத்துச் சென்றது. சில்வண்டுகளின் இரைச்சல் செவிப்பறைகளை அறைந்து கொண்டிருந்தது.

'இண்டைக்கு கொஞ்சம் பிந்தித்தான் போனன்.' வாடியில் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கும் நண்பனுக்குப் பசிக்குமே என்ற எண்ணம் அவனது நடையின் வேகத்தைக் கூட்டியது. வாடியிலிருந்து காலையில் ஊருக்குப் புறப்பட்டால் திரும்பி வர இரவாய்ப் போய்விடும் என்பது தெரிந்த விடயம் தான். என்றாலும் புறப்படும் போதே 'என்ர வயல்ப்பக்கமும் பார்த்துக் கடா மச்சான்.' என்று நண்பன் சுந்தரத்திடம் சொல்லிவிட்டுத் தான் ஊருக்குப் போயிருந்தான்.

ஊரிலிருந்து ஏறத்தாழ இரண்டு மைல் தூரத்துக்கப்பால் இருந்தது அவனுடைய வயல்வாடி. ஐந்தரை ஏக்கர் வயற்காணியும் அதையொட்டிய தென்னந்தோட்டமும் கொச்சி, கத்தரி, மரவள்ளித் தோட்டமும் நடுவே வாடியும் நீர் நிறைந்த துரவுமாய் தன் உடல் உழைப்பைக் கொட்டிக் கொட்டி நிறைத்து வைத்திருந்தான் அவன். ஊரில் நோயாளியான தந்தையும் வயதான தாயும் திருமணத்துக்குக் காத்து நிற்கும் தங்கையுமாய் அவனையே நம்பி வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அவனுடைய பக்கத்து வாடியும் வயலும் நண்பனான சுந்தரத்துக்குச் சொந்தமானவை. இரண்டு பேருமே நல்ல பலசாலிகள். வயல்வேலை, தோட்ட வேலை தொடங்கி விட்டால் ஊரையே மறந்து விடுவார்கள். சமையல், சாப்பாடெல்லாம் வாடியிற்தான். வயலை ஒட்டி ஓடிக் கொண்டிருக்கும் சிற்றோடையில் வலைவீசி மீன் பிடிப்பதில் சுந்தரம் கை தேர்ந்தவன். இரண்டு பேருமாய் ஒரு வாடியில் சோறாக்கி மீன்கறியோடு ஏதாவது ஒரு மரக்கறியும் சமைத்து வைத்தால் இரண்டு நேரப் பொழுது ஓடிவிடும். இரவில் மிஞ்சிய சோற்றுக்குள் நீரூற்றி வைத்து காலைப் பொழுதைக் கழித்து விடுவார்கள். மற்ற நேரமெல்லாம் உழைப்பு... உழைப்பு... உழைப்புத்தான்.

திடீரென காலடியில் சலாரென்று ஏதோ வழுக்கிக் கொண்டு ஓடியது. குமரன் முன்னால் துள்ளிப் பாய்ந்து நின்று திரும்பிப் பார்த்தான். நீளமாய் அசைந்து சென்ற வால்ப்பகுதி பற்றைக்குள் மறைவது அந்த மங்கிய வெளிச்சத்தில் தெரிந்தது. "என்ன சாதியோ தெரியல்ல" அவன் ஒரு காலால் மற்றக் காலை உரசி நோ ஏதும் தெரிகிறதா என அவதானித்து விட்டு நடையைத் தொடர்ந்தான்.

"ஒரு பந்தமாவது கட்டித்தாறன், கொண்டு போ மனே." என்று கெஞ்சிய தாயைப் புறக்கணித்து விட்டு வந்தது. மடத்தனம் என்று தன்னையே நொந்து கொண்டான். பசிவேறு வயிற்றைக் கிள்ளத் தொடங்கியிருந்தது.

ஊருக்குப் போய்த் திரும்பும் வேளைகளில் இவருவருக்குமாக தங்கை சமைத்துச் சீலையில் முடித்து தரும் கட்டுச் சோற்றோடுதான் குமரன் வாடிக்குத் திரும்புவான். இரண்டு பேருமாகச் சாப்பிட்ட பின்பு ஊர்க் கதைகள் பரிமாறிக் கொண்டு தூக்கம் வரும்வரை வயலைச் சுற்றிப் பார்த்து விட்டு அவரவர் வாடிக்குப் பிரிந்து செல்வார்கள்.

அவனுடைய நண்பன் சுந்தரத்துக்குத் தாயில்லை. ஒரு அக்கா திருமணமாகிக் கணவனுடன் தனி வீட்டில் வாழ்கிறாள். இரண்டு தம்பிமார் அவர்களுக்கு எல்லாமும் தகப்பன்தான். குமரன் வீடு போலத்தான் சுந்தரம் வீடும், அவனுடைய உழைப்பை நம்பித்தான் அந்த மூன்று சீவன்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

"பொடியன் நல்ல பிரயாசி, சோலி சுரட்டுக்குப் போகாதவன். தாயாப் புள்ளையாப் பழகிறான்..... ஏன் மனே, நம்மட பொன்மணிக்கு இவனக் கேட்டுப் பார்த்தா என்ன?"

ஊருக்கு வந்திருந்த ஒருநாள் அம்மா கேட்ட கேள்வி குமரனுக்கு விசித்திரமாகப் படவில்லை. இருந்திருந்து சுந்தரம் ஊருக்கு வரும் வேளை களில் இவர்கள் வீட்டுக்கும் வருவான். அப்போதெல்லாம் தங்கை பொன்மணி யிடம் காணப்படும் பரபரப்பும் தடுமாற்றமும் சுந்தரத்தின் பார்வையும் தேடலும் அவன் அறிந்தவைதான். காலம் கனியட்டும் என்றுதான் குமரன் காத்திருந்தான். அப்படியொரு நல்லவனைக் கை நழுவ விட அவன் விரும்பவில்லை. சற்று முன்னர் அவன் வீட்டிலிருந்து புறப்படும் நேரத்திற்கூட ஓடி ஓடி கருவாட்டுக் குழம்பு வைத்து மாசி போட்டு கத்தரிக்காய் கறி சமைத்து அண்ணனுக்கு என்ற சாட்டில் சுந்தரத்துக்கும் சேர்த்து அவள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டித் தந்த கட்டுச் சோற்றில் பொன்மணியினுடைய ஆசையும் காதலும் கலந்திருப்பதாய் அவன் நினைத்துக் கொண்டான்.

போன தடவை குமரன் ஊருக்கு வந்திருந்தபோது பொன்மணி வீட்டில் இல்லை. அவசியம் இல்லாமல் அவள் வீட்டை விட்டு எங்கேயும் போவதில்லை. வீட்டுவேலைகளும் அவளுடைய தையல் வேலைகளுமாய் பொழுதைக் கழித்து விடுவாள். அன்று அம்மா சுடச்சுட இரண்டு கொழுக் கட்டைகள் எடுத்துக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னாள். வறுத்த எள்ளும் தேங்காய்ப் பூவும் சர்க்கரையுமாய் தேன் சொட்டச் சொட்டச் சாப்பிட்டு முடித்தவன் "என்ன விசேசமம்மா, கொழுக்கட்டை நல்லாத்தான் இனிக்குது" என்றான். "சுந்தரத்திர அக்கா தேவகி உண்டாகியிருக்காளாம். ஆறு மாதமாம், தலப்புள்ளத்தாச்சி..... அதுதான் பொன்மணி கொழுக்கட்ட அவச்சிற்றுக் கொண்டு போயிரிக்காள்." என்று அம்மா சொன்னபோது 'அந்த அளவுக்குப் போயிற்றா சங்கதி' என்று குமரன் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

'இனியென்ன, வயல் விளைஞ்சிற்று. இன்னும் ஒரு பதினைஞ்சு நாளைக்குள்ள வெட்டிக் கட்டிச் சூடடிச்சிரலாம். சுந்தரமும் ஆறுதலாகட்டும். என்னதான் அவனுக்குப் பொன்மணியில விருப்பம் போலத் தெரிஞ்சாலும் நேரடியாகக் கேட்டுத் தெரிஞ்சிக்காம நாமளே முடிவெடுக்கப் போடாது தானே, அவனிட்டக் கேட்டு ஓமெண்டிட்டா னெண்டா வீட்டிலயும் கேட்டு வாற வைகாசியிலயே கலத்தில போட வெச்சிரலாம்.'

குமரனின் சிந்தனைகள் சிறகுகட்டிப் பறந்தன. வானத்தில் நிலவு மேகத்துக்குள் மறைவதும் முகத்தைக் காட்டுவதுமாய் விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தது. நட்சத்திரங்கள் மட்டும் இதோ விழுந்து விடுவோம்.' என்பது போல இன்னமும் நடுங்கிக் கொண்டிருந்தன. தூரத் தூர வயல் வாடிகளில் சின்னச் சின்னதாய் ஒளிப்பொட்டுக்கள் இருளோடு போராடிக் கொண்டிருந்தன. வயல் விளைந்து விட்டால் பன்றிகளின் தொல்லையால் விவசாயிகள் தூக்கமிழந்து விடுவார்கள். எந்தப் பக்கத்தால் வருகிறதென்று தெரியாமல் வேலியையும் பீறிக்கொண்டு வந்து வயலை நாசம் செய்து விடும். அனேகமாக எல்லா வயல் வாடிகளிலும் காவலுக்கு யாராவது இருப்பார்கள். விடிய விடிய நெருப்பு மூட்டி விழித்திருந்து கூய்ப்போட்டுக் காவல் காக்க வேண்டும். ஒருசில வாடிக்காரர்களிடம் துவக்கு இருக்கும். பன்றிகள் வயலுக்குள் புகுந்துவிட்டால் குறிபார்த்துச் சுட்டு வீழ்த்தி விடுவார்கள்.

அப்படிப் பன்றிகள் சூட்டுக்கு அகப்படும் நாட்களில் சுற்றியிருக்கும் வாடிக்காரர்களுக்குக் கொண்டாட்டம்தான். அனேகமாக வீடுகளில் பெண்கள், குழந்தைகள் எவரும் பன்றி இறைச்சி சாப்பிடுவதில்லையாதலால் வயல் வாடிகளிலேயே பன்றி கறியாகி விடும்.

குமரனும் நல்ல வேட்டைக்காரன்தான். இருந்தாற் போலிருந்து சுந்தரத்தையும் கூட்டிக்கொண்டு காடுகளுக்குள் புகுந்து விடுவான். சூழ உள்ள காடுகளுக்குள் மானோ மரையோ கிடையாது. முயலோ பன்றியோ தான் அகப்படும். முயல் இறைச்சி கிடைத்தால் மட்டும்தான் குமரன் வீட்டுக்குக் கொண்டு போய்க் கொடுப்பான்.

வலது தோளில் அழுத்தும்பாரத்தை இடது தோளுக்கு மாற்றிக் கொண்டான் குமரன். குளிர் காற்றும் புதுநெல்வாசமும் நாசியை நிறைத்தன. விளைந்து கதிர் சாய்ந்து கிடக்கும் நெற்பயிர்களைத் தீண்டிச் செல்லும் காற்று அந்த நெல் வாசத்தை யும் அள்ளிச் சென்றது.

தூரத்தில் எங்கோ நரியொன்று ஊளையிடும் சத்தம் காதைத் துளைக்குமாப் போல் கேட்டது. அதனைத் தொடர்ந்து இன்னும் பல ஊளைச் சத்தங்கள், நரிகளும், பன்றிகளும் வயலுக்குள் புகுந்து விட்டால் பாவம் சுந்தரம். அவைகளோடு போராட வேண்டியிருக்குமே என்ற எண்ணம் அவன் நடையை விரைவு படுத்திற்று. பசியும் குளிரும் சேர்ந்து அவனைத் தூங்கப் பண்ணியிருக்குமோ என்றொரு சந்தேகம் எழுந்தது. அவனுடைய நடையின் அதிர்வில் வயலுக்குள் அடைகாத்துக் கிடந்த ஆட்காட்டிப் பறவையொன்று அவலமாய் அலறிக் கொண்டு பறந்தது. "சீ, சனியன் என்னத்துக்கு இப்ப இப்பிடிப் பேய்க்கத்துக் கத்தித் துலைக்கிறாய்." என்று வாய் விட்டே சலித்துக் கொண்டான் குமரன்.

இருந்தாற் போலிருந்து வானம் இருண்டு கொண்டு வந்தது. பிறை நிலவையும் நட்சத்திரங்களையும் மேகம் அள்ளிக் கொண்டு போய் விட்டாற்போல எங்கும் கருமை படர்ந்து மைக்குழம்பாய் இரவு பிசுபிசுத்தது. "மழை வேற பெய்யப் போகுதோ?" என்று அலுத்துக் கொண்ட குமரனுக்குச் சட்டென்று புதிர் சாப்பிடுவதற்காக அறுத்துப் போட்ட கதிர்களின் ஞாபகம் வந்தது. "மழை பேஞ்சால் எல்லாம் நனைஞ்சு போகுமே." என்ற தவிப்புடன் கூடவே "சுந்தரம் எல்லாத்தையும் அள்ளிக் கவனமாக மூடிவைப்பான்" என்ற சமாதானமும் அவனை ஆசுவாசப்படுத்திற்று.

சுயநலமே இல்லாத இப்படியான நண்பன் கிடைத்தது. தனக்கொரு வரப்பிரசாதம் என நினைப்பான் குமரன். இவன் என்ன சொன்னாலும் அதற்கொரு மறுப்புச் சொல்லி அறிய மாட்டான். உழவு வேலையிலிருந்து அறுவடை வரை இரண்டுபேரும் ஒன்றாகவே இயங்கினாலும் குமரனுடைய வேலைகளுக்குத் தான் முக்கியத்துவம் கொடுப்பான் சுந்தரம்.

"நெடுக என்ர வயல்லதானே முந்தி விதைக்கிறம், ,ந்தமுறை உன்ரவயல விதைப்பம் மச்சான்." என்பான் குமரன். "முந்திப் பிந்தி விதைக்கிறதால என்ன லாபமும் நட்டமும் வரப்போகுது. முதல் உன்ர வேலையள முடிப்பம்." என்பான் சுந்தரம். "இதென்ன, எழுதி வெச்ச சட்டமா, என்ர வயல்தான் முதல் விதைக்கோணுமெண்டு?" என்று கேட்டால் "எழுத்தில எழுதாட்டியும் மனதில எழுதின சட்டம். நீ எனக்கு ரெண்டு வயது மூத்தவன். மூத்தாக்களுக்குத்தான் முன்னுரிம குடுக்கோணும்." என்று சொல்லிச் சிரிப்பான் சுந்தரம்.

சமையல் நேரங்களிற் கூட குமரனை அதிகம் வேலைகள் செய்ய விடமாட்டான் சுந்தரம். ஒரு பெண்ணைப் போல அடுப்படியில் குந்தியிருந்து சோறு கறி சமைப்பது, தேங்காய் துருவுவது, சட்டி பானைகளைக் கரிபோக தேங்காய்த் தும்பில் சாம்பல் தொட்டு தேய்த்துக் கழுவுவது என்று அனேகமான வேலைகளைத் தானே பொறுப்பெடுத்துக் கொள்வான். 'பாவம். தாயில்லாம வளர்ந்தவன். பொன்மணிய இவன் காலியாணம் முடிச்சால் நோக நொடிய விடாமப் பார்த்துக் கொள்ளச் சொல்லோணும்.' என்று நினைப்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரன்.

மெல்லிய தூறல்கள் பொட்டுப் பொட்டென்று விழத்தொடங்கின. ஓட்டமும் நடையுமாக வாடியை நெருங்கி விட்டான் குமரன். அந்தப் பிராந்தியத்தையே பேரமைதியும் அந்த காரமும் பேயைப் போல ஆக்கிர மித்துக் கொண்டிருந்தன. மழையைக் கலைக்குமாப் போலத் திடீரென்று வீசிய காற்றின் இரைச்சல் பெருந்துயரக்குரல் போல அந்த அந்தகாரத்தில் அவன் செவிகளின் வழியாக மனதைப் பிசைந்து சென்றது.

சுந்தரத்தின் வாடியில் காட்டுத் தடிகளும் நாட்டுக் கட்டைகளும் போட்டு எரித்த தீயடங்கித் தணல்கள் தகதகத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அதுவும் பொடுபொடுத்து விழும் மழைத்துளியோடு போராடிக் கொண்டிருந்தது.

தனிமையும் இருளும் உடல் அலுப்பும் சுந்தரத்தைத் தூங்கப் பண்ணியிருக்கும் என நினைத்தான் குமரன். பசியோடு தூங்குபவனை எழுப்பி பொன்மணி கட்டித்தந்த கட்டுச் சோற்றைக் கொடுத்தால் ஆசையாகச் சாப்பிடுவான் என்றெண்ணித் தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டான்.

நடையின் வேகத்தைத் தளர்த்தி வாடியை நெருங்கிய சமயத்தில் அவனுடைய வாடிக்கருகாக ஏதோ சலசலப்புக் கேட்பதை அவனால் உணர முடிந்தது. மழைத் தூறலில் மங்கித் தெரியும் தணலின் மெல்லிய வெளிச்சத்தில் நன்றாகக் கூர்ந்து பார்த்தான் குமரன். வாடிக்கு இடது புறமாக ஒரு உருவம் அசைவது தெரிந்தது. நன்றாகக் கூர்ந்து பார்த்தான். வைக்கோலின் சலசலப்பும் உயரம் குன்றிய அந்த உருவத்தின் அசைவும்... சந்தேகமே இல்லை. அது பன்றியேதான். 'இண்டைக்கு நல்ல வேட்டைதான்' மனதுக்குள் ஒரு குதூகலம் கொப்பளித்தது.

கொண்டு வந்த சுமையை ஓசையின்றி இறக்கி வைத்த குமரன் தோளில் கிடந்த துவக்கை எடுத்தான். ஏற்கனவே வெடிபொருள் நிரப்பப்பட்ட துவக்கு. "இண்டைக்கு நீ தப்பிப் போக விடமாட்டன். ரெண்டு மூண்டு நாளா நீதான் வயலுக்குள்ள வந்து விளையாட்டுக் காட்டியிருக்காய்." கறுவிக் கொண்டே முழங்காலை மடித்துப் பதுங்கி நின்று குறிபார்த்தான் குமரன். அந்த உருவம் சற்றே அசைந்தாலும் இடத்தை விட்டு நகரவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டான்.

இன்னமும் மழைத்துளிகள் பொடுபொடுத்துக் கொண்டேயிருந்தன. மேகத்துக்குள் மறைந்த நிலவு முகம் காட்ட மறுத்து அப்படியே கிடந்தது. சில் வண்டுகளின் ஓசை மட்டும் அந்தப் பிராந்தியத்தின் அமைதியைக் குலைத்துப் பேரிரைச்சலாய் எங்கும் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

மிக நிதானமாய்க் குறிபார்த்தான் குமரன். நிலவு வெளிப்பட்டுச் சற்றே தன் அசைவு தெரிந்தாலும் இரை தப்பி ஓடிவிடும். எப்படியும் அதனைச் சுட்டு வீழ்த்த வேண்டும் என்னும் வெறி அவனுள் கிளர்ந்தெழுந்தது.

'வெடிச் சத்தம் கேட்டால்த்தான் சுந்தரம் வெளியே வருவான். நாளைக்கு எல்லாருக்கும் விருந்துதான்.' தன்னுடைய குறி என்றைக்குமே தப்பியதில்லை என்ற இறுமாப்புடன் துவக்கின் விசையை அழுத்தினான் குமரன். அவ்வளவுதான். குனிந்து அசைந்த அந்த உருவம் ஒரு தடவை நிமிர்ந்து எழுந்து அனுங்கிக் கொண்டு கீழே சாய்ந்தது. பொறி கலங்கிப் போன குமரன் துவக்கை வீசி விட்டு ஓடிச் சென்றான். வானமே இடிந்து தலையில் வீழ்ந்தாலும் அவன் அப்படிக் கலங்கியிருக்கமாட்டான். சுருண்டு கிடந்து துடிக்கும் நண்பனைத் தூக்கி நெஞ்சோடு அணைத்தவன் அந்த வயல்ப் பிராந்தியமே அதிரும்படி அலறினான். அவன் அலறல் யாருக்கும் கேட்டிருக்க வாய்ப்பே இல்லை. மெல்ல மெல்ல உணர்விழந்து போகும் நண்பனின் தலையில் இருந்து வடிந்த இரத்தம் அவனைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது.

"என்ன காரியம் செய்து போட்டண்டா சுந்தரம்." என்று அவன் எழுப்பிய அவலக் குரலைக் கேட்பதற்குச் சுந்தரத்தினுடைய உயிர்ப்பறவை அவனுடைய உடம்பில் இருக்கவில்லை. சட்டென்று துடிப்படங்கிப் போன நண்பனின் உடலைக் கிடத்திவிட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தான் குமரன். புதிது உண்பதற்காக அரிந்து வாடியருகில் காயப்போட்ட நெற்கதிர்கள் மழையில் நனைந்து விடாமலிருக்க குந்தியிருந்து அவற்றைச் சாக்கில் அடைந்து கொண்டிருந்திருக்கிறான் என்பதை அறிந்த போது அவனுடைய நெஞ்சுக் கூட்டுக்குள் திரண்டெழுந்த தீ உடலெங்கும் பரவி எரிந்தது.

"வெள்ளிக்கிழமை நல்ல நாள் அண்ணா, புது நெல்லுக் கொண்டுவந்தா அண்டைக்கே புதிர் சாப்பிடலாம். ரெண்டு பேரும் வந்திருங்க." தங்கை பொன்மணியின் குரல் அவனைச் சுற்றிச் சுற்றி ஒலித்தது.

"இந்த முறை நெல்லவித்து அக்காவுக்கு ஒரு சோடிக் காப்பு வாங்கிக் குடுக்கோணும் மச்சான். புறக்கப்போற புள்ளைக்கும் நான்தானே நகையள் செய்து குடுக்கோணும்.... அத்தானுக்கும்,ப்ப வருமானம் மிச்சம் குறைஞ்சு போயிற்று..." சுந்தரம் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள். குமரனின் செவிப் பறையில் அறைந்தறைந்து அதிர்ந்தது,

தயங்கித் தயங்கி எட்டிப்பார்த்த நிலவு மீண்டும் மேகங்களுக்குள் போய் ஒழிந்து கொண்டது. சுழன்றடித்த காற்றும் அந்த அவலத்தைக் காணச் சகிக்காதது போல சென்ற இடம் தெரியாமல் எங்கோ தொலைந்திருந்தது. திடீரென்று சோவெனக் கொட்டத் தொடங்கிய மழையின் வீச்சில் அந்தப் பிராந்தியமே தன்னை இழுத்து மூடிக்கொண்டது.

எதையும் யோசிக்கும் சக்தியை இழந்தவனாக நின்றிருந்த குமரன் திடீரெனப் பாய்ந்து சென்று தான் வீசியெறிந்த துவக்கை அந்த இருளிலும் தடவி எடுத்துக் கொண்டான். உயிர்குடிக்கும் பிசாசுபோல அது வாய் பிழந்து அவன் கைகளிற் கனத்தது. ஒரு கணம்தான். மறுகணம் படீரென எழுந்த ஓசையில் அந்தப் பிராந்தியத்தின் அமைதி இரண்டாவது தடவையாகவும் கலைந்து அடங்கியது.

மாலையில் பொன்மணி கட்டிக்கொடுத்த சோற்று மூட்டையும் குமரன் கொண்டுவந்த பொருட்களும் தேடுவாரற்று மழையில் நனைந்து கிடந்தன.

## அதிசயம்

மலையோ மடுவோ ஆறோ கடலோ மிருகமோ
பறவையோ அதிசயம் இல்லை. பூமியினுடைய அதிசயம்
இந்த வானம். மேகமே இல்லாத நீல நிற வானம்.

-ரமணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்

**வகை:** சிறுகதைத் தொகுப்பு **தலைப்பு:** அந்திமகாலத்து நேசம்

**எழுதியவர்:** தக்ஷிலா ஸ்வர்ணமாலி தமிழில்: எம். ரிஷான் ஷெரீப் **விமர்சிப்பவர்:** ஸ்ரீரஞ்சனி

தக்ஷிலா ஸ்வர்ணமாலியின் அந்திமகாலத்து நேசம் என்ற சிறுகதைத் தொகுப்பு மனித மனங்களின் மென்னுணர்வுகளைப் பற்றி உணர்வுபூர்வமாகப் பேசுகின்றது. இதிலுள்ள கருப்பொருள்களுடன் தொடர்பான கதைகளை ஏற்கனவே வேறு சில எழுத்தாளர்களும் எழுதியிருக்கின்றனர், எனினும், சமூகத்தினால் அங்கீகரிக்கப்படாத அத்தகைய விடயங்களைக் குறித்தவரின் குற்றமாகவே அவர்கள் பொதுவில் காட்டியிருக்கின்றனர். தக்ஷிலாவோ அவை யாவும் மனித மனங்களின் இயல்புகளே என மிக இயல்பாகச் சித்தரித்திருக்கிறார். அவ்வகையில் அவர் நிகழ்த்தியிருக்கும் சமூகக் கட்டுடைப்பும், அவரின் எழுத்தின் தனித்துவமும் பல்வேறு வகையான வாசகர்களையும் அவர்பால் ஈர்த்திருக்கிறது. சிங்கள மொழியில் படைக்கப்பட்டிருந்த இந்தக் கதைகளை அழகான தமிழில், உயிர்ப்பான வார்த்தைகளுக்கூடாக மிகச் சிறப்பாக மொழிபெயர்த்திருக்கும் எம்.ரிஷான் ஷெரீப் அவர்களின் மொழியாற்றலும் இந்தத் தொகுப்பு அதிகம் பேசப்படுவதற்கான ஒரு முக்கிய காரணம் என்றால் அது மிகையாகாது. இந்தத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் பத்துக் கதைகளில் முதலாவது கதையான, 'தெருவழியே' என்ற கதை ஒரு பாலியல் தொழிலாளர் மீது காதல்கொண்ட பெண் ஒருவரின் உணர்வுகளையும் எதிர்பார்ப்புகளையும் மிக அற்புதமாக விபரிக்கிறது. அவனுடனே வாழ்க்கையைக் கட்டியமைக்க வேண்டுமென்ற வேட்கையுடன் அவனைத் தேடித் தெருவழியே அலையும் அவள் முடிவில் ஓர் இளம் பெண்ணுடன் அவனைக் காண்கிறாள். அவளின் கனவு சிதறுகிறது, இருந்தாலும்கூட, அவனைத் தன் காருக்குள் ஏற்றிச்சென்று அவனின் இடத்தில் இறக்கிவிடுகிறாள். 'நாங்கள் வழமையாகப் போகும் இடத்துக்குப் போவோம்' எனக் கூறுபவனுக்கு, 'இல்லை நான் நிரந்தரமாக ஊருக்குப் போகப்போகிறேன்' எனப் பதிலளிக்கிறாள். பலரைத் திருப்திப்படுத்தும் பாலியல் தொழில்தான் அவனின் தொழில் எனத் தெரிந்திருந்தும்கூட இன்னொரு பெண்ணுடன் சேர்த்து அவனைக் கண்டபின் அவனுடன் கூடுவதற்கு அவளால் முடியவில்லை. எனினும், 'சிலவேளை இனிமே நாங்கள் சந்திக்கமாட்டம்,' எனக் கூறி அவள் விடைபெறுவது அவளில் அவளுக்கே நம்பிக்கையில்லை எனக் காட்டுவதாகவும் கருதமுடியும். அதனால் முடிவில் வருத்தமுற்ற அவனின் தாய்க்கு மருந்தெடுத்துக் கொடுக்கும்படி பணம் வழங்கும் அவளின் செயல் அவளின் இரக்கமான மனதைக் காட்டுகின்றதா அல்லது மரத்துப் போகமுடியாத அவளின் காதலைக் கூறுகின்றதா எனக் கூறமுடியவில்லை. இருப்பினும், "முன்பொரு நாள் அளவிட முடியாத உற்சாகத்தோடு தெருவில் திரிந்த நான், இந்தளவு மந்தமாகிப் போகத் தொடங்கியது எவ்வாறு, அது எப்போது என்றெல்லாம் யோசித்து மனம் சோர்ந்து போகவேண்டிய தேவை எனக்கு இல்லை. மனிதர்கள் எவரும் தமது ஜீவிதத்தில் எடுத்த எந்தத் தீர்மானத்திற்காகவும் மனம் வருந்தத் தேவையில்லை. மனிதனால் எடுக்கப்படும் எந்தத் தீர்மானமும் தவறானதல்ல." என, அவள் சிந்திப்பதுபோலக் கூறப்படுவது, குறித்ததொரு சூழ்நிலையில் எங்களுக்குச் சரியெனத் தோன்றியதை நாங்கள் செய்ததுபற்றி நாங்கள் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை என ஓர் ஆறுதலையும் எங்களுக்கு வழங்கத் தவறவில்லை. தான் எடுத்த தீர்மானங்களுக்காக வருந்துபவளாக அந்தப் பாத்திரம் படைக்கப்பட்டிராமையும். அந்த அந்தச் சூழ்நிலையில் எது சரியெனப் பட்டதோ அதைச் செய்திருக்கிறேன், அதற்காகப் பழிசொல்ல எவராலும் இயலாது ஏனெனில், இது எனது ஜீவிதம் என தன்னைப் பற்றிய கழிவிரக்கமின்றிப் பேசுவதாகக் காட்டுவதும் சிறப்பாக இருந்தன.

'மாங்காய் பருவத்தில், அருண் தனித்திருந்த மேலுமொரு நாள் தொடங்கியது' என்ற கதையில் வரும் அருண் என்ற பாத்திரத்தின் ஊடாக, "மஞ்சுவுக்கு உன் மேல பாசம் இருக்குன்னா உனக்கு வழுக்கை விழுந்தாக் கூட அதை நேசிக்குற அளவுக்கு பாசம் இருக்கணும். நாங்க நேசிக்குற ஆட்களுக்கு இயல்பா என்ன அமைஞ்சிருக்கோ அதைத்தான் நேசிக்கணும்," என நிலுகாவின் கணவன் விமர்சிக்கப்படுவது உண்மையான அன்பு எதென்பதைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகிறது. ஆனால் எங்களில் எத்தனை பேரால் இப்படி இருக்கமுடியும் என்பது கேள்விக்குறிதான். அருணின் இந்த இயல்புக்காக அவனை அவளுக்குப் பிடித்திருக்கலாம். "நான் தூங்க வரல. உன்னோட சேர்ந்து விழிச்சிட்டிருக்குறதுதான் எனக்கு வேணும்,"' எனக் கூறுவதும், "மஞ்சுவோ, அஷேனோ என்னோட கதைச்சிட்டிருக்க வர்றதில்லையே." என அவள் தன் கணவனைப் பற்றியும் மகனைப் பற்றியும் பிரஸ்தாபிப்பதும் அருணுடனான உறவும் அவனுடனான தொடர்பாடலும் அவளுக்குக் கொடுக்கும் மகிழ்ச்சியையும் அதன் தேவைப்பாட்டையும் கோடிட்டுக்காட்டுகின்றன. வழமையான சமூக வரையறைகளின் கீழ் சில உறவுகளுக்கு பெயரிட முடியாது என்பதையும் இது உணர்த்திநிற்கிறது. இருப்பினும் எதிலும் பற்றற்ற தோரணையில் அவளுக்கு ஆலோசனை வழங்குவதுபோல அருண் கதைப்பதாகக் காட்டுவதன்மூலம் ஆண்களை மேலாக வைத்திருக்கும் எங்களின் கலாசாரத்தை எழுத்தாளர் காட்டுகின்றாரோ எனவும் எண்ணத்தோன்றியது.

காதல் என்பது அழகில் மட்டுமன்றி தகுதிநிலையிலும் தங்கியிருக்கிறது என்ற யதார்த்தத்தைக் கூறுகிறது, 'அன்றைக்கு பிறகு அவன் அவளருகே வரவேயில்லை,' என்ற கதை. மிக ஆவலுடனும் காதலுடனும் சந்திக்கச் சென்றவனின் மனதை அந்தப் பெண்ணின் ஏழ்மை நிலை மாற்றிவிடுகின்றது. அத்துடன், இறங்கியவனின் தலைமுடி கலைந்து போயிருந்தது, சப்பாத்தின் முடிச்சுகள் அவிழ்ந்து போயிருந்தன, களிசானுக்குள் ஒதுக்கிவைத்திருந்த மேல்சட்டை வெளியே வந்திருந்தது போன்ற விபரணங்கள் இலங்கையில் பேருந்துப் பயணம் ஒன்று

23 ஆம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் 9

அன்று இரவு முழுவதும் கபிலனால் தூங்க முடிய வில்லை. அடுத்தநாள் பாடசாலையில் நடக்கப்போகும் மீட்டல் செய்து கொண்டான்.

" என்ன மச்சான் ரெடியா?" என்ற குரல்கேட்டு நிஜவுலகுக்கு வந்த கபிலன் நண்பன் எழுந்துவிட்டதை அவதானித்து அவனைப் புன்னகையோடு பார்த்தான்.

# கரும்பலகை



இரண்டாவது நேர்முகப் பரீட்சைபற்றியே நினைத்துக் கொண்டிருந்தான். படிப்பித்தல் கபிலனுக்குக் கடினமான வேலை இல்லை. அதற்கான சகல திட்டங்களும் போட்டுவிட்டான். அட்சரகணிதம் கபிலனுக்குப் பிடித்த ஒன்று. ஆனாலும் என்னவோ அவனால் தூங்க முடியவில்லை. ஒரு பதட்டம் அவனுள் பரவிக் கொண்டிருந்தது.

காலை வெள்ளெனவாகவே எழும்பிவிட்டான். காலைக்கடன்களை முடித்துவிட்டு தனக்கு மிக விருப்பமான மேற்சட்டையையும் காற்சட்டையையும் போட்டுக் கொண்டு தயாராகிவிட்டான். நண்பன் அருகில் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். கட்டிலில் அமர்ந்த வண்ணம் எப்படி வகுப்பை ஆரம்பிப்பது? எப்படி குழப்படி செய்யும் பிள்ளைகளை கட்டுப்படுத்துவது? என்று மனதிற்குள் ஒருதடவை

" என்ன மச்சான் ரென்சன் போலை?"

" ஓமடாப்பா என்னவோ தெரியேல்லை சரியான பதட்டமாகக் கிடக்குது." என்று கபிலன் சொன்னான்.

" பயப்பிடாதை மச்சான்.. நீ செய்வாய்..பதட்டப் படாமல் போயிட்டு வா என்றான்" நண்பன்.

அவசரஅவசரமாக எழும்பிக் காலைக் கடன்களை முடித்துவிட்டுப் புறப்படத் தயாரானான் கபிலன். கபிலனும் " சரி மச்சான் பின்னேரம் சந்திப்பம்" என்று கூறியபடியே புறப்பட்டான்.

பாடசாலைக்கு முன்னால்வந்து கடவுளை ஒருதரம் மனதில் நினைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தான். பாடசாலைக்குள் நுழைந்த கபிலன் நேராக அதிபரின் அறையை நோக்கி நடந்தான்.

அவன் வருவதை தூரத்தில் இருந்தே அவதானித்த வசந்தி புன்னகைத்தபடி அவனருகில் வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்ன கபிலன் வெள்ளனவே வந்திட்டீர்.படிப்பிக்கத் தயாரோ ?" என்று கேட்டாள் வசந்தி.
கபிலன் புன்னகைத்தபடி "பார்ப்பம்" என்றான். இவர்கள் இருவரும் கதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து ஒருவித நமட்டுச் சிரிப்புடன் அவர்களைக் கடந்து கொண்டிருந்தனர் ஆசிரியர்களும் பிள்ளைகளும். அர்களின் சிரிப்பில் ஆயிரம் அர்த்தங்கள். பிள்ளைகள் மட்டுமல்ல கடந்து செல்லும் ஆசிரியைகளும் அப்படி ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டே சென்றார்கள்.
வசந்தி கபிலனைக் கூட்டிச் சென்று அதிபரின் அறைக் குமுன் இருக்கவிட்டுவிட்டு ஆசிரியர் அறைக்குச் சென்றுவிட்டாள்.
ஆசிரியர் அறைக்குச் சென்றவளை செல்வி ரீச்சர்
" என்ன வசந்தி, ஆள் பரவாயில்லை" என்றாள்.
" அப்பிடி ஒண்டும் இல்லையப்பா. அவர் என்னோடை யூனியிலை படிச்சவர்"
வசந்தியின் பதிலில் அவர்கள் திருப்திப்பட்டதுபோல் இல்லை. வசந்தி அதைப் பொருட்படுத்தாவிட்டாலும் அவள் மனதில் ஒருவித கிளுகிளுப்பு ஏற்படத்தான் செய்தது.
அதிபரின் அறைக்கு முன்னால் அமர்ந்திருந்த கபிலன் கொஞ்சம் பதட்டமாக இருந்தான்.
பெண்பிள்ளைகள் வெள்ளை உடுப்புடன் அங்கும் இங்கும் நடந்து திரிந்தமை கண்கொள்ளாக் காட்சியா கவிருந்தது.
"புது மாஸ்டர் வாறார் போல" ஒரு பெண் கூற மற்றவள் " ஆள் பரவாயில்லை" என்று அடுத்தவள் கூறுவதும் கபிலனின் காதுகளில் விழுகிறது.
" சரியான வாலுகள் கனக்க இருக்குதுகள் போல" என்று தனக்குள் கூறிக்கொண்டான் கபிலன்.
சிறிது நேரத்தில் உதவி அதிபர் வந்து அவனை வகுப்ப றைக்கு அழைத்துச் சென்றார்.
பத்தாம் வகுப்பு. இருபத்தாறு பிள்ளைகள். கபிலனும் உதவி அதிபரும் உள்ளே நுழைந்ததும் எல்லோரும் எழுந்து நின்று " வணக்கம் ரீச்சர்" என்று கூற அவர் கைச்சைகை மூலம் அவர்களை அமரும்படி கூறிவிட்டு " பிள்ளைகள் இன்று உங்களுக்கு இவர்தான் கணித வகுப்பு எடுக்கப் போகிறார் " என்று அவர்களுக்குக் கூறினார்.
அப்படிக் கூறிவிட்டு அவர் வகுப்பின் பின்பக்கம் சென்று அமர்ந்து கொண்டார். அங்கு ஏற்கனவே பாடசால நிர்வாகக் குழுவைச் சேர்ந்த பெண்மணியும் அமர்ந்திருந்தார்.
கபிலனின் வகுப்பு ஆரம்பமானது.
வகுப்பைப் பார்த்து
" என் பெயர் கபிலன். இன்று உங்களுக்கு கணிதம் படிப்பிக்க வந்துள்ளேன். உங்கள் பெயர்கள் எனக்குத் தெரியாது. பரவாயில்லை. நான் இப்போ ஒரு கேள்வி கேட்கப்போகிறேன்.
இண்டைக்குப் படிக்கப் போகிற அட்சர கணிதம் என்பதன் கருத்து என்ன? விடை தெரிந்தவர் கையை உயர்த்தலாம்.
என்று கூறிவிட்டு அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்.
யாருமே விடையளிக்கவில்லை.
" நான் இதை எதிர்பார்த்தேன். ஏனென்றால் என்னுடைய ஆசிரியர்களும் எனக்கு இதனைப் படிப்பிக்கவில்லை. எங்களுடைய கல்வித்திட்டம் வெறுமனே மூன்று மணித்தியாலத்தில் நடக்கும் பரீட்சைகளை நோக்காகக் கொண்டுள்ளதால் எது பரீட்சைக்கு வருமோ அதைமட்டுமே ஆசிரியர்களும் படிப்பித்தார்கள். நாங்களும் அதையே படித்தோம்.
ஒவ்வொரு பாடத்திற்குப் பின்னாலும் ஒவ்வொரு வரலாறு இருக்கிறதென்பதையும் அந்த வரலாறுகளின் வழியேதான் பாடங்கள் நகர்கின்றன என்பதையும் யாரும் அறிந்திருக்கவில்லை. ..... இப்படிக் கூறிவிட்டு சிறிதுநேரம் வகுப்பறையையே பார்த்துக் கொண்டி ருந்தான். வகுப்பு ஊசிபோட்டால் கேட்குமளவுக்கு அமைதியாக இருந்தது. எல்லோரும் அவனையே கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். அவன் ஏதோ புதிதாகச் சொல்லப் போகிறானென்ற எதிர்பார்ப்பு அவர்களின் கண்களில் தெரிந்தது. அவர்களுக்கெல்லாம் இவை புதிதாகவிருந்தது. அடுத்து அவன் என்ன கூறப்போகின்றான் என்பதை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். கபிலனுக்கும் அந்தச் சூழ்நிலை உற்சாகத்தைக் கொடுத்தது.
சோக்கட்டியை எடுத்து கரும்பலகையில் பெரியதொரு வட்டத்தைப்போட்டுவிட்டு அவர்களைப் பார்த்தான்.
"இது என்ன என்று கேட்டான்.?"
" வட்டம்" என்று ஒரு பிள்ளை கூறியது. இன்னொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை " பூச்சியம்" என்று கூறியது.

" ஒரு படத்திற்கு உங்களிடமிருந்து இரு விடைகள் வந்தன ஏன்?"

" ஏனென்றால் உங்களுடைய பாடம் கணிதம் என்பதாலை வட்டம் என்று கூறினேன்." என முதற்பிள்ளை கூறியது. மற்றைய பிள்ளையோ "கணிதத்திலும் நீங்கள் இன்று எண்கள் பற்றி விளக்குவதால் பூச்சியமாக இருக்குமோ என நினைத்து பூச்சியம் என்றேன்" என விளக்கினாள். கபிலனுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது.

" நீங்கள் இருவரும் ஒரே சிந்தனையில் இருந்தாலும் வெவ்வேறுபட்ட அணுகு முறைகளைக் கொண்டவர்களாக உள்ளீர்கள். இதைத்தான் கணிதம் என்பது" என்று கபிலன் கூறியபோது எல்லோருடைய முகங்களும் மலர்ந்திருந்தன.

" இந்தப் பூச்சியத்தை முதலில் யார் கண்டு பிடிச்சது?" கபிலன் கேட்டான். யாருமே விடை கூறவில்லை. ஆளையாள் பார்த்துக் கொண்டார்கள். அவர்களுக்குப் பின்னே கபிலனை அவதானித்துக் கொண்டிருந்த ஆசிரியையைத் திரும்பிப் பார்த்தார்கள். ஏனென்றால் அந்த ஆசிரியைதான் அவர்களது கணித ஆசிரியை. அந்த ஆசிரியைக்குச் சிக்கலைக் கொடுக்காமல் கபிலன் தானே தொடர்ந்தான்.

" பூச்சியத்தை முதலில் முதலில் உலகுக்கு அறிமுகப் படுத்தியது இந்தியாவைச் சேர்ந்த ஒரு கணிதவியலாளரே" என்றான் கபிலன்.

இப்படி அவன் கூறிக் கொண்டிருக்கும்போது பாடம் முடிந்ததற்கான மணியடித்தது. மணியடித்ததேயொழிய வகுப்பு முடிந்ததிற்கான சலசலப்பு அங்கே இருக்கவில்லை.

கபிலனே தொடர்ந்தான்.

" மிக்க நன்றி பிள்ளைகளே இந்தப் பாடசாலைக்குப் படிப்பிக்க வந்தால் இந்தப் பாடத்தை நான் தொடர்வேன்" என்று பாடத்தை முடித்து வைத்துவிட்டு வகுப்பறையைவிட்டு வெளியே வந்தான் கபிலன்.

வெளியே வந்த கபிலன் நேராக அதிபரின் அறைக்கு முன்னுள்ள கதிரையில் போய் அமர்ந்து கொண்டான். வகுப்பறையில் ஆசிரியர்கள் பிள்ளைகளிடம் கபிலன்பற்றிக் கேட்டார்கள். எல்லோரும் சந்தோசமாகவும் தெளிவாகவும் தங்களுக்கு கபிலன் மேலுள்ள பிடித்தத்தைக் கூறினார்கள்.

அவர்களும் சந்தோசமாக வெளியே வந்து நேராக அதிபரின் அறைக்குள் சென்றார்கள்.

அதிபரும் அவர்களும் கபிலனைப்பற்றிக் கதைத்தார்கள். உப அதிபர் தவபாக்கியம் முதலில் கதைத்தார். தவபாக்கியம்தான் அந்த வகுப்பின் கணித ஆசிரியர். " அந்தத் தம்பி மிக அழகாகப் படிப்பித்தார். அவரிடம் ஒரு ஆளுமை இருக்கிறது மிஸ். வகுப்பில் யாருமே கதைக்கவில்லை. அதற்காக சும்மா இருந்தார்கள் என்றுமில்லை. அவர் கேட்ட வினாக்களுக்குப் புத்திசாலித்தனமாக விடையளித்தார்கள். அவரும் எந்த வகையிலும் சலிப்புத் தட்டுகிறமாதிரிப் படிப்பிக்கவில்லை. எங்களுக்கே கேட்டுக் கொண்டிருக்கும்போது ஆசையாக இருந்தது. அவரது குரல் விடயங்களைப் பிள்ளைகளைநோக்கி லாவகமாக எறிகின்ற பாங்கு மிகச் சிறப்பாக இருந்தது." என்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிவிட்டு அமைதியாக சிவதாரிணியைப் பார்த்தார். சிவதாரிணி தன் பங்கினை கூற ஆரம்பித்தார்.

" தவபாக்கியம் மிஸ் கூறியவிடயங்கள் நூற்றுக்கு நூறு உண்மை. மிகத் திறமைசாலி. படிப்பித்தலில் கெட்டிக்காரன். ஆனால்.. என் பார்வை அவரின் வயதுதான். இங்கை உயர்தர வகுப்புப் பிள்ளைகளும் இருக்கினம். அவையளுக்கும் இவர் படிப்பிக்கப் போகிறார். அந்தப் பிள்ளையளுக்கும் இவருக்கும் இடையில் பெரிய வயது வித்தியாசமும் இல்லை. அந்தப் பக்கத்தைத்தான் யோசிக்கிறன்."

உப அதிபர் இடைமறித்து " என்ரை பார்வையிலை அந்தப் பையன் அப்பிடி பிழையானவராய்த் தெரியேல்லை." என்றார். சிறிது நேரம் மூவரும் எதுவும் பேசவில்லை.

திடீரென்று மௌனத்தைக் கலைத்த அதிபர் " சரி பையனை உள்ளை கூப்பிடுவம்" என்றார். உப அதிபர் எழுந்து சென்று அவரை உள்ளே கூப்பிட்டார். கபிலனும் உள்ளே சென்றான்.

" வாருங்கோ தம்பி இருங்கோ. " என்று அதிபர் கூற முன்னால் அமர்ந்த கபிலன் அவர்களைப் பார்த்து ஒரு புன் முறுவலை வீசினான்.

" சரி தம்பி சொல்லுங்கோ வகுப்பு எப்படிப் போய்ச்சுது"

" என்னைப் பொறுத்தவரை பிள்ளைகள் அறியவேண்டிய பல விடயங்கள் அறியாமலேயே இருக்குது."

" பிள்ளைகளின் ஒழுக்கம் எப்பிடி இருந்தது?"

" அது மிக நன்று."

" தம்பி கணிதம் படிப்பிக்கச் சொன்னால் வரலாறு படிப்பிச்சமாதிரியெல்லோ இருந்துது"

தவபாக்கியம் மிஸ் கேட்டா. கபிலன் அமைதியாக அவவைப் பார்த்துச் சிரித்துவிட்டு " கணிதம் ஒன்றுதான் எல்லாப்பாடங்களிலும் உண்மையைப் பேசுவது. கணிதத்தில் சமாளித்தல் என்பது சாத்தியப்படாது. ஒன்றை நிறுவினால் அதற்குமேல் வேறொன்றும் இல்லை. அப்படியான கணிதத்தில் ஒவ்வொரு விடயத்தையும் பொறுப்போடும் உண்மையோடும் ஐயமே இல்லாமல் கற்றுக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கணிதம் இன்னொரு சரித்திரமாகிப் போய்விடும். சரித்திரத்தை மாற்றிக்கூட எழுதலாம். ஆனால் கணிதத்தில் மாற்றுதலுக்கான இடைவெளியே இல்லை. உண்மையைத் தவிர வேறெதுவும் அங்கு இல்லை." என ஒரு பிரசங்கமே நிகழ்த்திவிட்டு நிறுத்தினான். அதிபர் வியப்பில் வாயடைத்துப்போய் இருந்தார். ஏன் கேட்டோம் என நினைத்துத் தலை குனிந்தபடி தவபாக்கியம் மிஸ் இருந்தா. ஒரு கேள்விக்கு இவ்வளவு விடையா என திகைத்துப் போய் இருந்தா சிவதாரிணி.

அந்த அமைதியான சூழலை முறித்துக்கொண்ட அதிபர் "சரி கபிலன் உமக்கு இந்த வேலையை தருவதாக வைத்துக் கொண்டால் நீங்கள் எங்களது ஒரேயொரு ஐயத்தைத் தீர்க்கவேண்டும். இது ஏற்கனவே உங்களோடு கதைத்ததுதான் ஆனாலும் இறுதி முடிவு எடுக்கும்போது மீண்டும் கதைக்கவேண்டியுள்ளது. உங்களுடைய வயது இளவயது. இங்கு நீங்கள் உங்களைவிட அதிகம் கூட இல்லாத பெண் பிள்ளைகளுக்குப் படிப்பிக்க வேண்டி வரும். .." அவ அப்படிக் கூறிக் கொண்டிருக்கும்போதே .. " மிஸ் நீங்கள் என்ன கேட்க வருகிறீர்கள் என்பது புரிகிறது. நீங்கள் என்னுடைய நடத்தைக்கு உத்தரவாதம் கேட்க விரும்புகிறீர்கள் .. சரி தானே.. இப்படியான விடயங்களுக்கு உத்தரவாதம் கொடுக்க முடியாது. ஆனால் நான் நல்லதொரு ஆசிரியத் தந்தையால் வளர்க்கப்பட்டவன். நான் சிறுவனாக இருக்கும்போதே ஆசிரியனாக வரவேண்டுமென்று சொல்லிச் சொல்லி வளர்க்கப் பட்டவன். தவறைத் தவறென்று புரிய வைக்கப்பட்டு வளர்க்கப்பட்டவன். அப்படி இவைகளையும் மீறி என்னையும் மீறி ஏதாவது நிகழ்ந்துவிட்டால் நான் உடனடியாகவே பாடசாலையைவிட்டு விலகிவிடுவேன். இதைத்தான் என்னால் உத்தரவாதமாக உங்களுக்குத் தரமுடியும் " என்று கூறிவிட்டு அவர்களைப் பார்த்தான்.


அவர்களும் ஆளைஆள் பார்த்தார்கள். அந்தப் பார்வையில் அவர்கள் முடிவெடுத்துவிட்டார்கள். "தம்பி எங்களுக்குத் திருப்தி நீங்கள் திங்கட் கிழமையிலிருந்து வேலைக்கு வரலாம்" என்று அதிபர் கூறினார். கபிலனும் நன்றி கூறிவிட்டு வெளியே வந்தான். அவன் கண்கள் வசந்தியைத் தேடின. அவளைக் காணவில்லை. சந்தோசத்தோடு நண்பனுக்குச் சொல்லிப் பின்பு தகப்பனுக்கும் அறிவிக்கவேண்டுமென்று எண்ணியபடி அறையை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

இன்னும் வரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவு மாடு



கந்தையன்ரை மில்லுக்கு மிளகாய்த் தூள் அரைக்கிறதுக்கு சாமான் கொண்டே குடுத்துப் போட்டு வந்த கனகன் படலையைத் திறந்து முத்தத்தை மறிச்சு அடைச்சுக்கிடந்த மட்டைப்படல் வேலியிலை சயிக்கிளைச் சாத்திப்போட்டு தோளில கிடந்த துவாயாலா முகத்தைத் துடைச்சுக்கொண்டே "என்ன ஆத்தையும் மோளும் வலு குதூகலமாய் இருக்கிறியள்" எண்டு குசினி விறாந்தைக் குந்தில குந்தியிருந்து என்னமோ குசு குசுத்துக்கொண்டிருந்த பாலாவையும் சுதாவையும் பார்த்துக் கேட்டான்.

"நாங்கள் குசுகுசுக்கிறது இருக்கட்டும் நீங்கள் என்னத்துக்கு இப்ப தூளை நிண்டு அரைச்சு வாங்காம வந்தனியள் .இக்கணம் ஆளில்லை எண்டதும் அவங்கள் தூளை அள்ளவெல்லே போறாங்கள். இருண்டது விடிஞ்சது ஒண்டும் தெரியாத உங்களோட நான் படுகிற பாடிருக்கே உந்தப் பிள்ளையாருக்கும் விளங்காது" எண்டாள் பாலா.

பாலாவுக்கு கலியாணம் கட்டின நாளில இருந்து உது ஒரு பழக்கம். சந்தர்ப்பம் கிடைக்கிற நேரமெல்லாம் கனகனை மட்டந்தட்டுவாள். உப்பிடி பாலா மட்டந் தட்டுறதுக்கு காதலிச்சாலும் சீதனம் வாங்கித்தான் கனகன் தன்னைக் கட்டினவன் எண்டு வந்த கோவமோ தெரியாது உண்மையைச் சொல்ல வேணும் எண்டால் சீதனம் வாங்கினதுக்கும் கனகனுக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது . கனகன்ரை தாய் செல்லம்மாதான் நாங்கள் கஸ்ரப்பட்டு பெத்து படிப்பிச்சு ஆளாக்கிவிட இடையில வந்தவளவை சும்மா றாஞ்சிக்கொண்டு போக விடேலுமோ எண்டு நாண்டுகொண்டு நிண்டு சீதனம் வாங்கினவ. சும்மா ஆக்கள் சொல்லுவினம் சீதனப் பிரச்சினைக்குக் காரணம் ஆம்பிளையள்தான் எண்டு ஆனா உண்மையா பெண்டுகள்தான் உதுக்குக் காரணம் எண்டு கனபேருக்கு விளங்கிறேல்லை. அவைதான் என்ரை பிள்ளைக்கு இவ்வளவு சீதனம் வேணும் எண்டு ஒற்றைக் காலிலை நிப்பினம். கனக்கப் போவானேன் உங்கை கன இடங்களில பெட்டையள் தாங்களே தாய் தேப்பனோடை சண்டை பிடிச்சுத் தனக்கு அது வேணும் இது வேணும் எண்டு கேட்டு வாங்கி இருக்குதுகள் .

பாலா உப்பிடிச் சொல்லவும் "அடியே சும்மா தன்ரைபாட்டில இருக்கிற பிள்ளையாரை என்னத்துக்கு இதுக்குள்ளை இழுக்கிறாய். உந்த வெளிநாட்டுக்கு குத்தரிசி மிளகாய்த்தூள் அனுப்பிறவை எண்டு அங்க சரியான சனம். வெக்கை ஒருபக்கம் தூசு ஒரு பக்கம் அதோட அதில மில்லுக்கு முன்னுக்கு நிண்ட வேப்ப மரத்தையும் எல்லே றோட்டுப் போட்ட விழுவாங்கள் வெட்டிப்போட்டாங்கள் மனுசர் கொஞ்சம் ஆறுதலா நிக்க நிழலுக்கும் வழி இல்லாமல் பண்ணிப் போட்டாங்கள் . அதுதான் அங்க நிக்கேலாது எண்டுபோட்டு வீட்டை வந்தனான் எப்பன் கோப்பி ஊத்தித்தா குடிச்சுப் போட்டுப் போறன்" எண்டவன்

"சரி..சரி நீங்கள் குசுகுசுத்த விசயம் என்ன எண்டதைச் சொல்லுங்கோ" எண்டான்.

"சுதா நீ இருந்து கதைச்சது காணும் போய் உன்ரை வேலையைப் பார் . நீயும் நானும் எப்பன் சிரிச்சுக் கதைச்சாலே உன்ரை கொப்பருக்கு அவற்றை ஆத்தைக்காரி மாதிரியே மூஞ்சை நீண்டுபோம்" எண்டு சுதாவைத் துரத்தின பாலா "அது ஒண்டுமில்லை இவளுக்கு இப்ப ஓ ஃலெவல் றிசல்ற் ஓரளவுக்கு நல்லா வந்திருக்கெல்லே" எண்டவும் "ஓ இப்ப அதுக்கென்ன" எண்டான் கனகன் .

"அதுக்கென்னவோ... அவள் யாழ்ப்பாணத்தில இருக்கிற பெரிய பள்ளிக்கூடத்தில படிக்கவாம். அவளின்ரை பிறன்சும் போகப் போகினமாம். உதில எங்கட தெய்வானை அக்கையின்ரை பெட்டையும் யாழ்ப்பாணம் தான் போகப் போகுதாம்" எண்டு பாலா சொன்னது சொல்லி முடிக்க முந்தி கனகன்

"ஏன் உங்க எங்கட ஊர்ப்பள்ளிக்கத்தில வகுப்புகள் இல்லையே வசதிகள் இல்லையே வாத்திமார் இல்லையே இப்ப என்னத்துக்குக் ரவுணுக்குப் போகவேணும்" எண்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்க ஊர்ப் பள்ளிக்கத்தில இங்கிலீசு மீடியம் இல்லை நான் உவளை இங்கிலீசு மீடியத்தில் தான் படிப்பிக்கப் போறன் அப்பதான் நாளைக்கு கலியாணம் காட்சியெண்டு வந்தா வெளிநாட்டை அனுப்பச் சுகம். வெளிநாட்டு மாப்பிளைமார் இங்கிலீசு தெரிஞ்ச பொம்பிளையள் தான்வேணுமெண்டுறாங்களாம்" எண்டாள் பாலா .

"எடி விசரி வெளிநாட்டு மாப்பிளைமார் இங்கிலீசு பேசுற பொம்பிளை தான் வேணுமெண்டால் அவங்கள் அங்கி னேக்கை பாத்து ஒரு வெள்ளைக்காறியைக் கட்டுறதுதானே. அவங்களே கொறோனாவில குறண்டிப் போய்க்கிடக்கி றாங்கள் நீ கதைக்கிற கதையே கதைக்கிறாய்"அறிவு கெட்டனி.

"வடலி வளர்த்துக் கள்ளுக் குடிக்கிற கொப்பன்ரை புத்தி அப்பிடியே கிடக்கு. விசர்க்கதை கதைக்கிறாய்" எண்டு கோபப்பட்டான் கனகன் .

"உங்க கண்டது கிண்டதுகளின்ரை ஒரு வேளை சோத்துக்கும் வழியில்லாததுகளின்ரை பெடி பெட்டை எல்லாம் ரவுணிலை போய் இங்கிலீசு மீடியத்தில படிக்கேக்கை நான் என்ரை பிள்ளையைப் படிப்பிக்கேலாதே".

"நானும்பெட்டையளும் எதைக்கேட்டாலும் எப்பவாவதும் ஏதும் செய்யிறியளே. ஊருக்கு முந்தி அதை இதைச் செய்யிறன் எண்டு ஊரில உள்ளவைக்கு எல்லாம் செய்வியள் எங்களுக்கு மட்டும் ஒண்டுஞ் செய்ய மாட்டியள் எல்லாம் என்ரை தலைவிதியெண்டு" மூக்கைச்சிந்தினாள் பாலா

"எடியே இப்ப என்னத்துக்கு நீலிக் கண்ணீர் விடுகிறாய் சும்மா மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடாதை. ஓ ஃஎல் இல் நல்ல ரிசல்ட் எடுத்து பெரிய ரவுண் பள்ளிக்கத்தில படிச்ச எத்தினையோ பிள்ளையள் ஏ ஃஎல் பாசாகேல்லையே ".

"அதேமாதிரி ஓ ஃஎல்லில மட்டுமட்டாப் பாஸ் பண்ணி ஊர்ப் பள்ளிக்கத்தில படிச்ச எத்தினையோ பிள்ளையள் ஏ ஃஎல்லிலை நல்ல றிசல்ற் எடுத்திருக்குதுகள் எல்லே . முயற்சி உள்ள பிள்ளை எங்கையும் படிக்கும் விளங்கிச்சோ".

"ரவுணில போய் இங்கிலீசு மீடியத்தில என்ரை பிள்ளை படிக்குது எண்டு சொல்லுறது பெருமையில்லை . அதுகள் ஒழுங்காப் படிக்குதுகளோ நல்ல பழக்க வழக்கம் பழகுது களோ எண்டு பாக்கவேணும். அப்பிடிப் போனதுகள் எத்தினையோ ஒண்டுக்கும் உதவாமைக் குறுக்கால போயி ருக்குதுகள் கண்டியோ".

"அதே நேரம் தமிழ் மீடியத்தில ஊரில படிச்ச எத்தினையோ பிள்ளையள் நல்ல றிசல்ற் எடுத்து இண்டைக்கு நல்லா இருக்குதுகள் கண்டியோ" எண்டான்.

"உழுகிற மாடு எங்கயும் உழும் விளங்கிச்சோ. உவளை ரவுணுக்கை விட்டுப்போட்டு வயித்தில நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்காமல் உங்க ஊர்ப்பள்ளிக்கத்தில விடுகிற வழியைப்பார். வாத்திமார் எல்லாரையும் தெரியும் போய் அடிக்கடி விசாரிக்கலாம் கண்டியோ" எண்ட கனகன் "சரி சரி கோப்பியைக் கொண்டா" எண்டான்.

"கோப்பியோ ஏன் அதையும் போறபோற இடத்தில வாங்கிக் குடிக்க வேண்டியதுதானே. இஞ்சை எனக் கொண்டும் கோப்பி ஊத்தேலாது இண்டைக்கு உலையும் வைக்கமாட்டன் ஓம்! சொல்லிப்போட்டன்" எண்டு சொன்ன பாலா எழும்பி மூக்கை சேலைத் தலைப்பால துடைச்சுக்கொண்டே உள்ளுக்கை போனாள். கொஞ்ச நேரம் பாத்துக்கொண்டு நிண்ட கனகன் "திருந்தாத ஜென்மம்" எண்டு பல்லை நறுவிக்கொண்டே சயிக்கிளை எடுத்துக்கொண்டு போனான்.

தாய் தேப்பன் தன்ரை விசயமா வாக்குவாதப்பட்டதைக் கொஞ்சமும் கவனிக்காத சுதா தன்ரை அறையில கட்டில்ல கிடந்தபடி தன்னோட படிக்கிற நேசன் வட்சப்பில அனுப்பின என்னமோ ஒரு செய்தியை ஆரும் வருகினமோ எண்டு அங்காலயும் இஞ்சாலையும் பாத்தபடி போனை ஒளிச்சு வைச்சுப் பாத்துச் சிரிச்சுக்கொண்டு இருந்தாள் .

\\\\\\\\\\\\

" நான் இப்பொழுது எழுதுவதையே முற்றாக விட்டுவிட்டேன். எழுதினால் சமூகத்திற்குத் தேவையான சத்தியத்தையே எழுதவேண்டும். வெறும் எழுத்து எதற்கு? நான் எழுதாமலே விட்டுவிட்டேன். இனி எழுதப்போவதுமில்லை. நிச்சயமாக இல்லை."

**- சம்பந்தன்-**

**நன்றி : மக்கள் இலக்கியம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழம்புச்சோறு

பரமன் அந்த அரிசி ஆலையில் வேலைக்குச் சேர்ந்து எட்டு மாதங்களாகிவிட்டன. வடமராட்சி நெல்லியடியில் பிரபலமானதோர் அரிசி ஆலை அது. அங்கு மொத்தம் பத்துப்பேர் தொழிலாளர்களாகப் பணி புரிந்து கொண்டிருந்தார்கள். தொழிலாளர்களைக் கண்காணித்து... அவர்களை வழிநடத்துவதற்கு முகாமையாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார்.

காலையில் எட்டு மணிக்கெல்லாம் தொழிலாளர்கள் ஆலைக்குள் வந்துவிடுவார்கள். அவியல்பெட்டிக்கு அருகே முதல்நாள் அவித்துக் கொட்டப்பட்டிருந்த புழுங்கல்களை கடகங்களில் நிரப்பி, பரந்து கிடக்கும் சிமெந்துத் தளத்தில் விரிப்பதிலிருந்து, தளத்தில் காய்ந்து கொண்டிருக்கும் புழுங்கல்மீது நடப்பதன்மூலம் கால்விரல்களினால் கீறி காயவிடுவது... காய்ந்த புழுங்கலை உடைத்து இயந்திரத்தால் தீட்டி அரிசியாக்குவது... அந்த அரிசியை உரப்பைகளில் நிரப்பி, தராசில் நிறுத்து மூடைகளாக்கி ஓரமாக அடுக்கி வைப்பது... தொட்டிகளுக்குள் நெல்லைப்போட்டு, நீர் நிறைத்து ஊறவிடுவது... இப்படிப் பல வேலைகளை அவர்கள் மாறிமாறிச் செய்துகொண்டிருந்தார்கள்.

ஞாயிற்றுக்கிழமைகளில் தொழிலாளர்களுக்கு விடுமுறைநாள். முகாமையாளரும் வீட்டுக்குச் சென்று விடுவார். பரமன் வன்னியைச் சேர்ந்தவன். அந்த அரிசி ஆலையிலேயே தங்கி நிற்பவன். அவனோடு மலையகம் கண்டியைச் சேர்ந்த முனுசாமி என்பவனும் இருந்தான். ஏனையவர்கள் ஊரவர்கள். வேலை முடிந்ததும் அவரவர் தங்கள் வீடுகளுக்குப் போய்விடுவார்கள். ஞாயிற்றுக் கிழமைகளில் பரமனுக்குப் பொழுதுபோவது சிரமமாக இருந்தது. கடந்துபோன காலங்களில் நிகழ்ந்துவிட்ட கசப்பான நிகழ்வுகளும் அனுபவங்களும் அன்றைய தினம் அவன் மனதினுள் குமைந்து கொள்ள ஆரம்பித்துவிடும்.

வன்னியில் பரமன் தொழில் இல்லாது மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்த நிலையில், ஊருக்குள் நெல் மூடைகளைக் கொள்வனவு செய்யவந்த ஒரு லொறி உரிமையாளர் அவன்மீது இரக்கப்பட்டு, அவனை அழைத்து வந்து அந்த ஆலையில் வேலைக்குச் சேர்த்துவிட்டுப் போயிருந்தார். மதியம் இரவென இரண்டு வேளைக்கும் திருப்தியாக அவனுக்குச் சாப்பாடு கிடைத்தது. காலை நேரங்களில், முதல்நாள் இரவு சோற்றுப்பானைக்குள் ஏதாவது மிச்சம்மீதி தேறியிருப்பின், கறிச்சட்டிக்குள் அவற்றைப்போட்டுப் பிரட்டிக் குழைத்துவிட்டு, முனுசாமியும் அவனும் பங்கிட்டுச் சாப்பிடுவார்கள். மாதமுடிவில் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு, மூன்றுநாள் விடுப்பில் வீட்டுக்குப்போய்வர பரமனுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

பரமனுக்கு அன்று உடல்நிலை சீரில்லை. இதற்குள் தலையிடி வேறு. முகாமையாளரிடம் 'பனடோல்' குளிகை வாங்கப்போனபோது, அவர் கேட்டார்.

" என்ன காய்ச்சலா...?"

" தெரியேல்லை. உடம்பு ஒருமாதிரிக் கிடக்குது..."

பனடோல் குளிகையைக் கொடுக்கும்போது முகாமையாளர் கூறினார்.

"இண்டைக்குத் தளத்தில நிற்க வேண்டாம். உள்ளுக்கைபோய் புழுங்கலை உடையும்..."

பரமனும் சரி... எனத் தலையாட்டிவிட்டு, கண்ணாடி அறையைவிட்டு வெளியே வந்தான். குசினிப்பக்கம்போய் தண்ணீர் எடுத்து பனடோலுடன் விழுங்கியவன், புழுங்கல் உடைக்கும் பகுதிக்கு வந்தான். அங்கு முகாமையாளர் வேலையாள்களை மாற்றிக் கொண்டிருந்தார்.

பொழுது மதியமாகி விட்டிருந்தது. பரமனால் வேலை செய்யச் சிரமமாக இருந்தது. அவனோடு கூட நின்ற தொழிலாளியே எல்லாவற்றையும் கவனித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். வெயில் தணிந்து... பொழுது மாலையாகிக் கொண்டிருந்தது. தொழிலாளர்கள் வேலை முடிந்து வீடுகளுக்குப் போக ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். முகாமையாளர் பரமனிடம் வந்தார்.

" இப்ப எப்படி இருக்கு...?"

"கொஞ்சம் பரவாயில்லை.. "

"சரி... நாளைக்கு ஞாயிற்றுக் கிழமை தானே. ஒருட்மும் போக வேண்டாம். படுத்து நல்லா ஓய்வெடும். முனுசாமி சமைக்கட்டும். நான் அவனுக்குச் சொல்லிப்போட்டுப் போறன்..." என்று கூறிவிட்டு, முகாமையாளரும் போய் விட்டார்.

தெருவில் மின்விளக்குகள் ஒளிரத் தொடங்கின. பரமன் அறையை விட்டு வெளியே வந்தான். மெதுவாக வீசிய காற்று அவனது மேனிக்கு சற்று சுகத்தைக் கொடுத்தது. வானத்தில் நட்சத்திரங்களுக்குக் கீழே மின்மினிகளும் ஒளிர்பரப்பியவாறு பறந்து திரிந்தன. அவன் அதை ரசிக்கக்கூடிய மனநிலையற்று தளத்தின் அருகேயுள்ள நெல்லை ஊறப்போடும் நீர்த்தொட்டிக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டான்.

பரமன் தனது கடந்தகால வாழ்வை நினைத்து வருந்தாத நாள்களே இல்லை. தனிமை அவனைச் சூழும் போதெல்லாம் அவனது மனம் பின்நகர ஆரம்பித்துவிடும். அவன் இன்றைய நாள்களில் ஒரு கூலித்தொழிலாளியாகத் தோற்றம் பெற்று நிற்கின்றமைக்கு, அவனது பெற்றோரே காரணமானவர்கள். அவனது பெற்றோர் பொறுப்பற்றவர்கள். அவனது விருப்பத்தை, எதிர்காலச் சிந்தனைகளைப் புரிந்து கொள்ளத் தவறியவர்கள். தங்கள் நலனுக்காக... தங்கள் சுய விருப்புகளுக்காக... அவனது கனவுகளைப் பலியிட்டவர்கள். படிக்கவேண்டிய வயதில் அவனது படிப்பை நிறுத்தி, குடும்பத்தில் நிலவிய வறுமையைக் காரணம்காட்டி மேசன் சண்முகத்தோடு உதவியாளனாக அனுப்பியவர்கள்.

" நான் படிக்கப் போறன்..." என்று அவன் கூறியதற்கு,

"படிச்சுக் கிழிச்சது போதும்..." என்ற பதிலே பெற்றோரிடமிருந்து வெளிப்பட்டது. இதுதவிர, குடும்பத்துள் பிள்ளைகளிடம்காட்டப்பட்ட பாரபட்சமான அன்பு, கவனிப்பு, சுதந்திரம்.. என்பவற்றால் குழப்பங்கள் உருவாகத் தொடங்கின. அடிதடிகள்... வன்மப் பேச்சுகள்... நாகரிகமற்ற சொல்வீச்சுகள்... பொலிஸ் விசாரணைகள்... கௌரவக் குறைச்சல்கள் ... என்பன அடிக்கடி நிகழ ஆரம்பித்தன.

பரமனின் அண்ணனுக்கு வழங்கப்பட்ட அளவுக்குமீறிய சுதந்திரத்தினால், அவன் நாளடைவில் அவன் ஊதாரியாகப் போனான். பரமனுக்கும் அவனுக்கும் வாய்த்தர்க்கம் ஏற்படும் போதெல்லாம், அவன் பரமன்மீது முரட்டுத்தனமாகத் தாக்குவான். பெற்றோரால் அண்ணனைக் கட்டுப்படுத்த முடியாமல் போகவே, பெற்றோர் அவனைக் கைகழுவி விட்டனர். சாப்பிடும் வேளைகளில், சோறு கறி சுவையில்லையெனில், பானை சட்டிகள் உடைபடும் சத்தம் குசினிக்குள்ளிருந்து எழும். அதன்பின்பு -

"ஆ... போக்கறுந்து போவானே... அம்மாளடிப்பானே..." என தாயின் அழுகையோடு கூடிய சாபவார்த்தைகள்... காற்றோடு கலந்து வரும். வெள்ளிக்கிழமைகளில்கூட சோற்றுக்கு மீன்குழம்பு வேண்டும். இல்லையெனில், அன்று குசினிக்குள் ஒரு பிரளயமே நிகழும்.

வலிகாம இடப்பெயர்வு வந்தபோது... பரமனின் அண்ணனால் வன்னிக்கு வர முடியவில்லை. அவன் யாழ்ப்பாணத்திலுள்ள சண்டிலிப்பாய் எனும் இடத்தில் யாரோ ஒருபெண்ணைத் திருமணம் முடித்திருப்பதாக பரமன் அறிந்து கொண்டான். 'ஒழிந்தது ஒரு பீடை... ' என அவன் தனக்குள் நினைத்துக் கொண்டு, அமைதியாக வன்னியிலேயே இருந்து விட்டான். அதன்பின் அவன் அண்ணனைச் சந்திக்கவுமில்லை. அவனை நினைக்கவுமில்லை. ஆயினும், தொடர்ந்து தன்னால் படிக்கமுடியாமல்போன அந்தத்துயர நிகழ்வுகளை நினைத்து மனம் வருந்திக்கொண்டேயிருந்தான்.

"பரமு...பரமு..." நீர்த்தொட்டிக்கு அருகில் இருந்த பரமன், திரும்பி ஆலையின் வாசல்பக்கம் பார்த்தான். கேற்றுக்கு வெளியே முனுசாமி நிற்பது தெரிந்தது.

கேற்றைத்திறந்து முனுசாமியை உள்ளே வரவிட்டபின், கேற்றைப் பூட்டிக்கொண்டான் பரமன். முனுசாமி பரமனுக்கு இடியப்பம் வாங்கிக் கொண்டு வந்திருந்தான்.

" ஏன் இதெல்லாம்.. ?" எனப் பரமன் கேட்டபோது,

" இன்று பகல்முழுக்க காய்ச்சல் காய்ஞ்சதல்லோ... சோறு கூடாது. இடியப்பத்தைத் தின்னுங்கோ..." என்று கூறிய முனுசாமி, இடியப்பப்பொதியை பரமனிடம் கொடுத்துவிட்டு, படுப்பதற்கு ஆயத்தமானான். சோற்றுப் பானைக்குள் மிதமிஞ்சிக் கிடந்தது அன்று ஆக்கிய சோறு. கூடவே மீன் குழம்பும்.

இரவு அமைதியாக நீங்கிச் செல்ல, தன் துயில்தனைக் கலைத்துக் கொண்டது வைகறை. அக்கம்பக்கத்திலிருந்து சேவல்கள் கூவத்தொடங்கின. பிள்ளையார் கோவிலின் ஆரம்பகால பூசைக்கான மணி ஒலிக்கத் தொடங்கியது. விடிந்து விட்டது. பரமனுக்கு உடல் பூரணமாகச் சுகப்பட்டிருந்தது. காலைத் தேநீரைக் குடித்து முடித்ததும், முனுசாமி வெளிக்கிட ஆயத்தமானான்.

" எங்கை இந்த வெள்ளென...?"

" உதில கன்பொல்லைப் பக்கம் போட்டு வாறன். நான் வர எப்படியும் பொழுது படும். வரேக்கை ஏதேனும் சாப்பாடு வாங்கி வரவா...?" என்றுகேட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனுசாமி.

இருக்கிற பழைய சோறும் கறியும் மதியத்துக்குப் போதும். இண்டைக்குச் சமைக்கத் தேவையில்லை... என நினைத்த பரமன், முனுசாமியின் வேண்டுதலுக்குச் சம்மதம் தெரிவித்தான்.

முனுசாமி வெளியேபோய் வெகுநேரமாகி விட்டது. பரமன் தனது அறையில் படுத்திருந்தான். கேற்வாசலில் யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. பரமன் அறையைவிட்டு வெளியேவந்து கேற்றடியைநோக்கி நடந்தான்.

பரமனுக்கு அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும், அதேநேரம் அருக்களிப்பாகவும் இருந்தது.

"பரமு... என்னைத் தெரியேல்லையே? நான்தான் உன்னுடைய அண்ணன்..." எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத விதமாக வந்து நிற்கும் தனது உடன் பிறப்பைக் கண்டதும் பரமனுக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. அவன் அமைதியாக நின்றான். அவனுள் 'நான் இங்கு வேலை செய்வது இவனுக்கு எப்படித் தெரியும்...?' என்ற சிந்தனையே மேலோங்கி நின்றது.

"கேற்றைத் திற. உள்ள வாறதுக்கு.. "

"கேற் திறக்கேலாது. முதலாளி சம்மதிக்க மாட்டார்..." அண்ணனுக்கு முகம் கறுத்துவிட்டது. மேற்கொண்டு சில விடயங்களைக் கதைத்தவன்... இறுதியாக, கைச்செலவுக்குக் காசு கேட்டான். சாப்பிட ஏதாவது இருக்குமோ? என்றும் கேட்டான்.

"இஞ்சை ஒண்டுமில்லை. பழஞ்சோறும் வெறுங்குழம்பும்தான் கிடக்குது..."

" வெறுங்குழம்போடையாவது கொஞ்சச் சோறு தாவன்..." பரமன் இதை எதிர்பார்க்கவில்லை. அவனது மனம் பழைய நினைவுகளை நோக்கி நகர்ந்தது.

சோற்றுக்கு ருசியான குழம்பு தேடிய அதேவாய், இன்று வெறுங்குழம்புச் சோற்றுக்காவேணும் வீதியெல்லாம் அலையுது. அண்ணன் திரும்பிப் போய்கொண்டிருந்தான் வெறும் வயிற்றோடு!

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்..." பரமன் கூறிய வார்த்தைகள்...எதிரொலியாகப் பின்தொடர்ந்து கொண்டிருந்தன அண்ணனின் பின்பாக...

\\\\\\\\\\\\

## 14 ஆம் பக்கத்தொடர்......

எப்படியிருக்கும் என்ற காட்சியைக் கண்ணுக்கு முன் கொண்டுவந்தன.

'அந்திமகாலத்து நேசம்' என்ற கதையில் முதியவர் ஒருவரின் அன்புக்கான ஏக்கம் அழகாகக் காட்டப்பட்டிருந்தாலும், அந்த இளம் பெண் தன் கணவருடன் வாழ்வதை அண்ணனுடன் வாழ்வதாக அவருக்குச் சொல்வது, கொஞ்சம் அதீதமானதாகத் தெரிந்தது எனக்கு. கணவனின் சந்தேகப் புத்தி தெரிந்து அங்கு போவதை மறைக்க நினைப்பது அதற்கான காரணம் எனக் கதையில் காரணம் கற்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் என்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவளுக்குள் கள்ளம் இல்லாவிடில் அவருக்கேன் அவள் பொய் சொல்லவேண்டுமென எனக்குள் கேள்வி எழுந்தது. அவளைப் பற்றியே அனுதினமும் நினைத்துக் கொண்டிருக்கும் அந்த முதியவர் ஒரு கட்டத்தில் தங்களுக்கு மகள் இல்லாத குறையை அவள் மூலம் நிவர்த்திப்பதாக நினைக்கிறார். அவளும் அவருடன் ஏதோவொரு ஆத்மார்த்தமான உறவை உணர்ந்திருந்தாள் என்பது அவர் இறந்தபின்புகூட அந்த வீட்டு வழியே அவள் செல்வதாகக் காட்டப்பட்டிருந்தது.

ஏழைக்குடும்பத்தினரின் அவல வாழ்வையும் அரச மருத்துவமனை ஊழியர்களின் அசட்டைத் தன்மையையும் 'எப்போதும் மேரி நினைவில் வருகிறாள்' என்ற கதை கண் முன்நிறுத்தியது. நீரழிவு நோய்க்கான கட்டுப்பாடு அரச மருத்துவமனை மூலம் இலங்கையில் பேணப்பட முடியாதா என்பது எனக்குத் தெரியவில்லை. மகளையும் கணவரையும் உறவுகளாகக் கொண்டிருக்கும் அவளின் வாழ்க்கையில் மேரிக்கு விரக்தியிருப்பதாகக் கதை கூறாததால், தன் உடல் நலத்தைக் கவனிக்காமலிருப்பது பொறுப்பற்றதன்மை அல்லவா என்றே என்னை எண்ணவைத்தது.

'நந்தியாவட்டைப் பூக்கள்' கதை ஒரு பிள்ளையின் பார்வையில் சொல்லப்படுகிறது. ஆனால் பிள்ளையின் வயது ஊகிக்க முடியாத வகையில் இரு வேறுபட்ட எல்லைகளைக் காட்டியது. அப்பாவுக்கும் பெரியம்மாவுக்கும் உறவிருப்பதால் பெரியம்மாவின் வீட்டுக்கு அப்பா போட்டுவருவது அம்மாவுக்கு கோபத்தைத் தருகிறது. அம்மாவின் கோப நடத்தைகளால் அந்தப் பிள்ளைக்குப் பெரியம்மாதான் விருப்பத்துக்குரியவராக இருக்கிறார். இந்தக் கதையில் வரும் அப்பா பிரக்ஞையோ பொறுப்போ இல்லாத ஒருவராக இருக்கிறார். பெரியம்மா வீட்டுக்குப் பிள்ளையுடன் ஒன்றாகச் சென்று அப்படியான ஒரு உறவைப் பேணுவதும், அம்மாவுக்கும் பிள்ளைக்குமான உறவைப் பாதிக்கும் வகையில் நடப்பதும் அந்த அப்பாவில் எனக்குக் கோபத்தையே எழுப்பின. அதேபோல, சிறப்பான ஒரு பாத்திரமாகப் பெரியம்மா படைக்கப்பட்டிருந்தபோதும், அவரின் செய்கைகள் அவரைக் கீழானவராகவே என்னை உணர வைத்தன. 'சுதர்மா அத்தையின் தென்னோலைக் கூரைக்கு யாரோ தீக்குச்சியை எறிய, கூரை படபடவென பற்றியெரிந்த போதும் கூட பெரியம்மா பதற்றப்படவில்லை. இந்தப் பெரிய வீடு பற்றியெரிஞ்சாலும் இப்படித்தான் இருப்பா என்று அம்மா கத்தினாள். பெரியம்மா அதைக் காதில் வாங்கியதாகக் கூட காட்டிக் கொள்ளவில்லை,' என வரும் ஒரு விவரணம் பெரியம்மாவின் அமைதியைக் காட்டவில்லை, சக மனிதர்கள் மேலான அக்கறையின்மையே காட்டுகிறது என்றே எனக்குத் தோன்றியது. இருப்பினும், நந்தியாவட்டைப் பூக்கள் மலர்தல், உதிர்தல் மற்றும் வீட்டின் ஒழுங்கமைப்பு போன்ற பௌதிக விடயங்களை உவமையாகக் காட்டுவதன்மூலம் கதை மிக அழகாக எழுதப்பட்டிருக்கிறது.

30 ஆம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சிலிட்ட தீ

வல்லியின் வீட்டுக்கருகேயுள்ள குச்சொழுங்கை முகரிவரை வந்து நின்ற காரில் இருந்து சரவணமுத்து வாத்தியாரும், மார்க்கண்டனும் இறங்கி நாலு கவடுகள் குச்சுக்குள் நடந்து வல்லியின் படலைக்கு வந்து விட்டனர். வல்லி வீட்டு நாய்க்குட்டி கீச்சிட்ட குரலில் குரைத்து ஆரவாரித்த போது அந்த ஆரவாரிப்புக்குமேலாக "வல்லி வல்லி" என்ற குரல் வந்தது.

"தம்பி படலேக்கை ஆரோ கூப்பிட்டுக் கேக்கு ஆரெண்டு பார்" என்று அடுக்களைக்குள்ளிருந்து வல்லியின் மனைவி பொன்னிப் பெட்டை மகன் சுப்பையனுக்கு கட்டளையிட்டாள். குடிசைப் பத்தியில் கம்பியில் தொங்கிய அரிக்கன் லாம்பைக் கையில் எடுத்துக் கொண்டு முற்றத்திற்கு வந்த சுப்பையன் லாம்பைச் சற்று உயர்த்திப் பிடித்து படலைக்கு உள்ளே வந்து விட்டவர்களை இனங்காண முற்படும் போதே சரவணமுத்து வாத்தியாரும், அவருக்குப் பின்னால் மார்க்கண்டனும் முற்றத்திற்கு வந்து விட்டனர்.

"ஆர்மோனை சுப்பையனே? எடபொடி, நாவூறு படக்கூடாது நீ நல்லாய் வளந்திட்டாய், ஆளை மட்டுக்கட்ட முடியேலை" என்று வாத்தியார் முகமன் வைத்தார்.

உயர்த்திப் பிடித்த லாமபைச் சற்றுப் பதித்துக் கொண்டே வாத்தியாரை வரவேற்கும் பாவனையில் ஓலைக் கூரையில் தலை முட்டாதபடி குனிந்து பத்தியின் பக்கமாகப் போடப்பட்டிருந்த சிறுவாங்கின் பக்கமாக சுப்பையன் வந்து நின்றான்.

"மோனை நாங்கள் இழவு வீட்டிலை நிண்டு வாறம், வீட்டுக்கை வரேல்லை, வல்லி பெண்டில் எப்பன் இஞ்சாலை வா, பொடிச்சி விளாத்தியெடி சின்னையா மணியகாறனெல்லே கண்ணை மூடிப் போட்டார். மூண்டு வரிசமாய் ஆமான அன்னந் தண்ணி இல்லாமல் கிடந்தவர், ஒரு மாதரிப் போய்ச் சேந்திட்டார். பதங் கெட்டுப் போறத்துக்கிடையிலை எடுத்துப் போடவேணும் வெள்ளணத்தோட வல்லியை வரக் காட்டியிடு, வழமை போலை கோவன்னா மார்க்கண்டன் தான் வந்தவனெண்டு சொல்லிவிடு பாவம் அவனுக்குக் கால்லை சுகமில்லை நடக்கமாட்டான். அது தான் நான் அவனைக் காரிலை கூட்டிக் கொண்டு வந்தனானெண்டு சொல்லிவிடு வேளையோடை, வல்லியை வரக்காட்டவேணும் கண்டியோ" என்று கூறி முடிக்கும் போதே வாத்தியார் முற்றத்தை விட்டுப் படலை வரை வந்து விட்டார்.

பொன்னிப் பெட்டை அடுக்களைக்குள்ளிருந்து வெளியே வந்தபோது மார்க்கண்டன் நொண்டி நொண்டி படலைவரை போனது மட்டும் தெரிந்தது. கார் இரைச்சல் பலமாகக் கேட்டது. அது வந்தபடி பின் பக்கமாகவே போயிருக்க வேண்டும். அதுதான் அத்தனை இரைச்சல்! பொன்னிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டை மறுபடியும் அடுக்களைக்குள் போய் விட்டாள். அவள் அடுக்களைக்குள் அடுப்போடும் நெருப்போடும் போராடுவது வரிச்ச மட்டைகளுக்கூடாக நன்கு தெரிந்தது. சற்று வேளைக்குப் பின்பு "தம்பி வாவன் சோத்தைத் தின்னன்" என்ற தாயின் அழைப்புக் கேட்கவே சுப்பையன் அடுக்களைக்குள் போய் விட்டான்.

"தம்பி மணியகாறன்ரை செத்த வீட்டுக்கு என்ன செய்யிறது? கொப்பருமில்லை, கொக்காவெட்டைப் போன மனிசன் எப்ப வருகுதோ தெரியேல்லை" என்று பொன்னிப்பெட்டை மகனை மெதுவாகக் கேட்டாள்.

"அதுக்க என்னை என்ன செய்யச் சொல்லுறாய்? உதுகள் செய்யேலா தெண்டு தானை நான் ஊரை விட்டுப் போன னான்" என்று மட்டுந்தான் சுப்பையன் பதில் கூறினான். பேச்சு மூச்சு எதுவுமின்றி சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளியே வந்த சுப்பையன் பாயை உதறிப் போட்டுக் கொண்டு படுத்துவிட்டான். சுப்பையன் உறங்கிப் போகு முன் பொன்னி சுப்பையனுக்குப் பக்கமாக வந்து விட்டாள்.

"தம்பி இப்ப என்ன செய்யிறது? கொப்பருமில்லை, நீ இல்லையெண்டாலும் பறவாயில்லை ஒரு மாதரிச் சொல்லிப் போடலாம். நீ நிக்கிறதை எல்லாரும் கண்டவை அவை விடுவினமே? குடியெழுப்பிப் போடுவினம்! நீ வெளியூரிலை நிக்கேக்கை மார்க்கண்டன்ரை ஆக்கள் சவந்தூக்க மாட் டேண்டத்துக்கு எத்தினை வெட்டுக் கொத்து நடத்தினவை! உன்ரை குஞ்சியப்பர் ஆலடிச்சந்தியிலை மார்க்கண்டன்ரை ஆக்களை கடைக்கை வைச்சு மயிர் வெட்டினதுக்கு அவரை அடிச்சு றோட்டு றோட்டாய் கொண்டு திரிஞ்செல்லை ஊரை விட்டுக் கலைச்சவை!"

பொன்னிப் பெட்டை இதைச் சொல்லி முடிப்பதற்கிடையில் "நான் போக மாட்டன் சொல்லிப்போட்டன்" என்று தீர்ப்புக் கூறிவிட்டு சுப்பையன் மறுபுறமாகத் திருப்பிச் சுருண்டு கொண்டான். வல்லிக்கும் பொன்னிப்பெட்டைக்கும் சுப்பையன் கடைக்குட்டி. அவனுக்கு அண்ணன்மார் இருவர், அக்காள் ஒருத்தி. ஒரு அண்ணன் சின்னவயதில் சிங்கப்பூருக்கு எடுபட்டுப் போய் அங்கேயே சலூன் நடத்தி அங்கேயே ஒரு சீனத்துக்காரியைக் கட்டிக் கொண்டு இரண்டு குழந்தை களுக்கும் அப்பனாகி அங்கேயே செத்துப்போயும் விட்டான். அக்காள் நெடுந்தீவில் கலியாணம் செய்து அங்கேயே குடித்தனம் ஆகிவிட்டாள். வல்லி இப்போது அங்கே தான் மகளிடம் போயிருக்கிறான். கடைக்குட்டி சுப்பையன் உள்ளூர் கிராமப் பள்ளியில் 7ம் வகுப்புவரை படித்தான். அப்போது சரவணமுத்து வாத்தியார் தான் பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக இருந்தார்.

அவன் எட்டாம் வகுப்புக்கு வந்த போது அவனின் வகுப்பு மாணவர்கள் அவனைப் "பரியாரி பரியாரி" என்றே அழைத்தனர். இதைப் பொறுக்க முடியாத சுப்பையன் தலைமை ஆசிரியரிடம் முறையிட்டதற்கு அவர் "டேய் பரியாரி, பரியாரியெண்டால் அது பெரிய பட்டமடா, உனக்கேன்ரா கோபம் வருகுது!" என்று படக்கென்று பதில் சொல்லிவிட்டார். அன்றே சுப்பையன் படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டான். வல்லிக்கு மகன் பெரிதாகப் படிக்க வேண்டுமென்ற பேராசை அவன் சுப்பையனைப் படிக்கப் போகும் படி வற்புறுத்தி வற்புறுத்தி, அதட்டி அதட்டி, எவ்வளவோ முயன்ற பார்த்தான் முடியவில்லை. இறுதியில் ஒரு நாள் அவனை உதை உதையென்று உதைந்து விட்டான் பின் சுப்பையன் வீட்டை விட்டு ஓடி விட்டான்.

பத்து மைல்களுக்குகப்பால் இருந்த அவனின் இரண்டாவது அண்ணனிடம் போனான். அந்த இரண்டா வது அண்ணன் அங்கே ஒருத்தியை அவனளவில் காதலித்துக் கல்யாணமும் செய்து கொண்டவன் அவன் கட்டிக் கொண்ட பெண்ணானவள் தாழ்ந்த சாதிக்கு மயிர் வெட்டும் குடும் பத்தைச் சேர்ந்தவள். வாய் நனைக்கக் கூடாத இடத்தில் அவன் கட்டிக்கொண்டதால் "வாழ்வுக்கும் வேண்டாம், சாவுக்கும் வேண்டாம்" என்று முருக்கம் இலைக் கஞ்சிகாய்ச்சி குடித்து முழுக்கும் போட்டு விட்டான் வல்லி. சுப்பையன் அங்கே போய்விட்டான் என்பதை அறிந்த வல்லி தனது நயினார் உதவியாட்களுடன் அங்கே சென்று அங்கே வைத்து அண்ணனையும் தம்பியையும் சேர்த்து உதைத்த உதையில் சுப்பையனத் தந்தையின் கண்களுக்கும் எட்டாத தொலைக்குப் போய்விட்டான். சுப்பையனுக்கு மனது ஒரு மாதிரியாகி விட்டது.

எதிலும் ஒரு பற்றற்ற வாழ்க்கை! அன்று உழைப் பான். அன்றே தின்பான். நெஞ்சுக்குள்ளே ஏதோ ஒன்றை வைத்து நெருடி நெருடி அவஸ்தைப்படுவது போன்ற செயல்பாடுகள்! அவன் அதிகம் பேசுவதில்லை. நீண்ட நேரம் பசி கிடப்பான். அகப்பட்ட வேளை நிறையத் தின்பான். தன்னை அழகுபடுத்திக் கொள்ள அவன் விரும்புவதில்லை. ஆனால் சுத்தமாக இருப்பான். பத்து வருடங்களுக்குப் பின்பு இப்போது தான் சுப்பையன் முதல் முதலில் வீட்டுக்கு வந்திருக்கிறான். பொன்னிப் பெட்டை அழுது தீர்த்தாள். சுப்பையனுக்கு அழுகை வந்ததோ இல்லையோ அவன் கண்ணீர் விட்டுக் கடன் தீர்த்துக் கொள்ளவில்லை. சுப்பையன் வந்த இரண்டாவது நாள் வல்லி நிறையக் குடித்து விட்டு வந்தான். அன்றிரவு அவன் விடியும் வரை கண்ணீர் கொட்டிக் கொட்டிக் கடன் தீர்த்தான்.

"குடிபோதையில் பொய்யுணர்வு வருவதில்லை" என்பதைத் தான் அவன் நிரூபித்துவிட்டானோ தெரியவில்லை. விடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுநேரமாகி விட்டது. வல்லியின் வரவை நோக்கி பொன்னிப் பெட்டை படலையை பார்த்துப் பார்த்து ஏங்கிக் கொண்டிருந்தாள். சுப்பையன் இன்னும் எழுந்திருக்கவில்லை.

"தம்பி தேத்தண்ணியைக் குடி தம்பி மத்தியானமாப் போச்சு" சுப்பையன் எழுந்திருந்தான். அவன் முகம் உப்பி பொருமிப் போயிருந்தது. இரவெல்லாம் அவன் கண் விழித்திருக்க வேண்டும்.

எழுந்திருந்து அமைதியாகக் குடத்தடிக்குச் சென்று வாய் கொப்பிளித்து விட்டு வந்தவன் தாய் கொடுத்த தேனீரைப் பருகினான். வெளியே கார் ஒன்று வந்து நிற்கும் ஓசை கேட்டது.

குட்டி நாய் கீச்சிட்டுக் குரல் வைத்தது. சரவணமுத்து வாத்தியார் மடமடன்று உள்ளே வந்தார்.

"என்னடா வல்லி வழக்கமில்லா வழக்கம் மார்க் கண்ணனோடை நானும் வந்து சொல்லியும் வரேல்லை! எடி வல்லி பொண்டில் எங்கையெடி உவன்" என்று வாத்தியார் இரைந்தார்.

"இல்லையாக்கும் அந்தாள் மோளெட்டைப் போனாப் போலை இன்னும் வரக்காணம்" என்று இழுத்தாற் போலக் கூறிக் கொண்டே பொன்னிப் பெட்டை வெளியே வந்தாள்.

"மோளெட்டைப்போட்டானோ? இன்னும்வரேல்லையோ? அவர் நயினார் வரும் வரையிலை பிரேதம் வீட்டோடை கிடக்கிற தாக்கும்!" கொட்டிலுக்குள் நின்று சேட்டை மாட்டிக் கொண்டு சுப்பையன் வெளியே வந்தான்.

"உங்கை மோன் நிக்கிறான் அவனை அனுப்பு! சாத்திரப் படிக்கு அவன் வரட்டுக்கு!"

"இல்லையாக்கும்! அவன்.... அவன்....." என்று பொன்னி இழுக்கும் போது "வாருங்கோ வாத்தியார் நான் வாறன்"என்று கூறிக்கொண்டே சுப்பையன் வாத்தியாருக்கு முன்னால் வந்து விட்டான்.

"வாமோனை வா நீயெல்லோ தேப்பன்ரை பிள்ளை உதேன் மோனை செத்த வீட்டுக்க சட்டையும் செருப்பும்? வல்லி பொண்டில் மோனுக்கு ஒரு சால்வைத்துண்டு குடன் எக்கணம் வாய்கரிசி போட முகத்துண்டும் போட வேணும்"

அசந்து போய் நின்ற பொண்ணிப்பெட்டை உள்ளே வல்லியின் சலவைக்குப் போன நலமுண்டுத் துணடொன்றை எடுத்து வந்து மகனிடம் கொடுத்தாள். சேட்டைக் கழற்றித் தாயிடம் கொடுத்துவிட்டு செருப்பையும் நின்ற இடத்திலேயே விட்டு விட்டு சுப்பையன் வாத்தியாருக்கு முன்னால் நடந்தான்.

"வாத்தியார் நயினார் அவன் இன்னும் ஒண்டும் தின்னேல்லை வெறுவயித்தோடை நிக்கிறான் ஏதும்!"

பொன்னியின் பரிதாபமான இந்த வேண்டுகோளுக்கு "அதெல்லாம் நான் பாக்கிறன்" என்று பதில் கூறியபடி வாத்தியார் வந்து காரில் ஏறிக்கொண்டு மோனை சுப்பையா நான் இதாலை ஒரு இடத்துக்குப் போட்டு அப்பிடி வாறன் நீ இழவு வீட்டடிக்கு வா... என்று மட்டும் சொன்னார். சுப்பையனைக் காரில் ஏற்றிச் சென்றால்.... பின்புறமாக இரைந்து கொண்டே கார் வெகு தூரம் போய்விட்டது. நலமுண்டுத் துண்டினை அரையில் கட்டி கருவிப் பையைக் கக்கத்துக்குள் வைத்துக் கொண்டு மகன் சோகத்துடன் தலை கவிழ்ந்து செல்வதைப் பார்த்தபடி பொன்னிப் பெட்டை வெகு நேரம் படலைக்குள் நின்றாள்.

சுப்பையன் இழவு வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்த போது அங்கிருந்தவர்கள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். அவனின் வரவு பற்றி வாத்தியார் ஏற்கனவே சொல்லி வைத்திருக்க வேண்டும். "ஆ.... ஆ.... பரியாரிப் பொடியனும் வந்திட்டான் பொண்டுகள் ஒருக்காக் குரல் வையுங்கோ! எடசாம்பானவை என்னடா ஓஞ்சு போயிருக் கிறியள் முறைப்படி பரியாரிக்குத் தட்ட வேணுமெண்டதை மறந்திட்டியளோ இவன் வல்லியினரை மோனடா தட்டுங்கோடா!" என்ற வாத்தியாரின் குரல் கேட்டது. பெண்களின் குரலோசையோடு சாம்பான்களின் தம்பட்டச் சத்தங்களும் சங்கமித்து பரியாரிக் குடிமோனுக்குக் கட்டியம் கூறின. ஓசைகள் ஓய்ந்த போது...

"சவங்கிடக்கிற இடத்துக்கு 'எச்சந்தாங்கி'ச் சீலை கட்டிப்போட்டு இந்தாவாறனெண்டு போன கட்டாடியை இன்னமும்காணேல்லை" என்று எங்கோ ஒரு மூலையிலிருந்து கேட்ட ஆண் குரல் ஒன்றுக்கு "கட்டாடிமார் இப்ப முந்தினமாதிரியே? அந்த நாளையிலேயெண்டால் இழவு விழுந்த நேரந்தொட்டு பிரேதம் படலையாலே போறவரைக்கும் அடுகிடை படுகிடையெல்லோ கிடப்பாங்கள் அதெல்லாம் போட்டுது!" என்ற ஒரு பெண் குரல் பெருமூச்சுடன் பதில் சொல்வதும் கேட்டது. சுப்பையனுக்கு முன்னால் வந்த ஒரு சின்னப் பையன் தாம் பாளத்தோடு வெற்றிலையை நீட்டினான். அவனுக்கு என்ன தெரியும் அவன் சின்னப்பயல்!

"டேய் பரியாரிக்குத் தட்டத்தோடை நீட்டிறீர் என்ன? கையில் எடுத்துக்குடு!" என்று ஒருவன் முறைத்தான். சுப்பையன் திடுக்குற்று வெற்றிலையை வாங்கிப் பொத்திக் கொண்டு வேலிக்கரையோரம் ஒதுங்கிக் கொண்டான்.

"மூப்பன் நாலுபேரைக் கொண்டந்து ஒரு மாதிரிச் சமாளிக் கப்பார்க்கிறாய் என்னடா? மணியக்காறன் உயிரோடை நல்லாயிருக்கேக்கை அவரெட்டை வரிசப்படி, பொங்கல்படி, தீபாவளிப்படி, ஆடிப்படி எண்டெல்லாம் வாங்கித் திண்டவங்கள் சூட்டுமிதியள்ளை போய் பறைக் கணக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லு வாங்கி விழுங்கினவங்கள் தங்கடை நன்மை தின்மையளுக்கெல்லாம் கடகங் கடகமாகச் சோறு வாங்கிச் சுமந்து கொண்டு போனவங்கள் எங்கையடா போட்டாங்கள்? மூப்பன் எழும்பு! உங்கடை ஆக்கள் பதினைந்து குடி இருக்கிறாங்கள் வீட்டுக்கு ஒருத்தனாய் பதினைஞ்சு பேரோடை வந்து மணியக்காரனுக்குத் தட்டவேணும் சொல்லிப் போட்டன்!" என்று கூறிக் கொண்டே மூப்பன் சின்னான் எழுந்து வெளியே போனான்.

"மெய்யே குஞ்சியப்பு! கட்டைகுத்தி தறிக்கிறவங்களைக் காணேல்லை! கும்பன்ரை ஆக்கள் வந்து குருத்தோலை வெட்டக் காணேல்லை! குளிப்பாட்டிறத்துக்கு குரம்பை இன்னும் புடுங்கேல்லை" என்ற கேள்விகளை வாத்தியாரைப் பாத்து ஒருவன் கேட்டான். "அதெல்லாம் நான் செய்விப்பன் நீர் எனக்குப் படிப்பிக்கிறீர் என்ன? நீ வாடாபொடி!? என்று சுப்பையனை அழைத்துக் கொண்டே வாத்தியார் வெளியேறினார். வாத்தியாருடன் பனை வழிகளுக்கூடாக சுப்பையன் நடந்து வாத்தியார் வீட்டுப் படலைத் தலைவாயில் வரை வந்து விட்டான்.

"இஞ்சேரும், இஞ்சேரும், இந்தப் பரியாரிப் பொடியனுக்க ஏதும்குடும், அவள் பொன்னிப்பெட்டை வழிக்குவழி சொல்லி விட்டவள்!" என்று வாத்தியார் குரல் வைக்கவே மனைவி வள்ளி நாச்சியார் படலைக்கு வந்துவிட்டாள்.

"இது எங்கடை பரியாரி வல்லியின்ரை கடைக்குட்டி சுப்பையன் என்னெட்டைப் படிச்ச பையன் வலு கெட்டிக் காரன்! ஊர் வேலை பிடிக்கேல்லை எண்டிட்டு தேசாந்திரியர்ப்போட்டு ஐஞ்சாறு நாளைக்கு முந்தித் தான் வந்திருக்கிறான். நல்ல பொடியன்! இப்பாபன் அவனுக்கு ஊர்க்குடிமைத் தொழிலின்ரை அருமை விளங்கியிருக்கு இண்டைக்கு தான் மணியக்காறன்ரை இழவு வீட்டுக்கு முதல் முதல்லை வந்திருக்கிறான். இண்டைக்கு நல்ல நாள் புதன்கிழமை அதுகும் மணியகாறன்ரைக்கு! இனி இவன்ரை சோத்தை நாயுந்தின்னாது! அது கிடக்கட்டுக்கு இவனுக்கு ஏதும் தின்னக்குடுமன்!"

உள்ளே போன வள்ளிநாச்சியார் சற்று வேளைக்குள் குஞ்சுப்பெட்டி மூடல் ஒன்றுக்குள் நான்கைந்து தோசைகளுடனும் மினுமினுத்த பால் போணி நிறைந்த தேனீருடனும் வந்து சேர்ந்தாள்.

"எடமோனை வெக்கப்படாதை வாங்கித்தின்! நான் உதிலை போட்டு வாறன் இஞ்சேரும் நீர் கெதியாய் வெளிக்கிட்டுச் செத்தவீட்டை போம்! நானும் பொடியனும் வாறம்" என்று கூறிக் கொண்டே வாத்தியார் சற்று அப்பால் போய்விட்டார். சுப்பையன் படலைத் தலைவாயில் ஒட்டில் கீழ்ச் சாய்ந்து தோசையைக் கொறிக்கத் தொடங்கினான். சுப்பையன் செத்த வீட்டுக்க மறுபடி வந்திருந்த போது அமளியாக வேலைகள் நடந்து கொண்டிருந்தன. பந்தலுக்கு இரண்டு மூன்று பேர் வெள்ளை கட்டிக் கொண்டிருந்தனர். வெளிப்படலையில் குலைவாழைகள் இரண்டு கட்டப்பட்டு அதிலிருந்து றோட்டு நீளத்துக்கும் படலையிலிருந்து பந்தல் வரையும் கயிறு கட்டித் தோறணங்கள் தொங்கவிட்டுக் கொண்டிருந்தனர்.

சொத்தி மார்க்கண்டன் அங்கமிங்குமாக ஓடி ஓடி மேல் பார்வை செய்து கொண்டிருந்தான். வளவு நிறைய கதிர்ப்பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. வேலிக்கரைகளில் பச்சை ஓலைகளும் கிடுகளும் பரவப்பட்டிருந்தன. தண்டிகை ஒரு மூலையில் கட்டப்படுகிறது! ஒரு பக்கம் வேலிக்கரைக் கிடுகுகளுக்குமேல் ஏழெட்டு மேளங்களுடனும் ஐந்தாறு தம்பட்டங்களுடனும் மூப்பன் சின்னானின் ஆட்கள் பரவி இருந்தனர். அவர்களுக்கு நடுவே சீமெந்துக் கடதாசியில் வெற்றிலைகளும், சுருட்டுக்களும் பரவி வைக்கப்பட்டிருந்தன. பறிக்கப்பட்ட இளநீர்கள் அங்கோன்றும் இங்கொன்றுமாகக் கிடந்தன. சவக்கிருத்தியம் நடக்கும் பந்தலைச் சுற்றி இளநீர்க்குரும்பைகளும் தோரணங்களும் தோங்கின.

சவக்கிருத்தியத்திற்கு வேண்டிய சாமான்கள் ஒரு பக்கமாகக் கிடந்தன. தலைவாழை இலைத்துண்டுகள், சுள்ளிக் கட்டுகள், செம்புகள், பொற்சுண்ணம் இடிப்புக்கான உரல் உலக்கை இத்தியாகி இத்தியாதி! வளவின் பின்புறத்தின் முது பூவரச மரங்கள் தறிக்கப்படுகின்றன.

ஒரு பச்சை ஓலைக்கீற்றை எடுத்து வந்த ஒருத்தன் அதைச் சுப்பையனுக்கு முன்னால் போட்டு "குட்டிபரியாரி நெருப்புச் சட்டி உறியைக் கட்டுமோனை!" என்று கூறிவிட்டுச் சென்றான்.

"எட மார்க்கண்டன் அவன் புதுப்பொடியன். நெருப்புச்சட்டி உறியை அவன் கட்டட்டுக்கு எப்பன் காட்டிக்குடு" என்று வாத்தியார் மாக்கண்டனைக் கேட்டுக் கொண்டார். நெருப்புச்சட்டி உறியும், பன்னாங்கும் பின்னத் தெரியாத சுப்பையன் மார்க்கண்டனின் உதவியுடன் அவைகளைச் செய்து முடித்தான். பொழுது உச்சிக்க வந்து கொண்டிருந்தது. சாவீடு இப்போதுதான் களை கட்ட ஆரம்பித்திருக்கிறது.

"எங்கை ஐயன்ரை தலைக்கறுப்பை இன்னும் காணேல்லை" என்று ஒரு குரல் கேட்டபோது சொல்லி வைத்தாற் போன்று சவக்கிருத்திய ஐயரின் திருக்கல் வண்டில் படலைக்குள் வந்து விட்டது.

"ஐயன் தனிய வாறான் போலைக் கிடக்கு பண்டாரப் பொடியன் ஒண்டையும் கூட்டி வரேல்லை" என்று குறைப் பட்டுக் கொண்டார் இளையதம்பிக்கமக்காரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பண்டாரியளுக்கு ஏன் பங்கு குடுப்பான் தான் எல்லாத்தையும் தட்டுச் சுத்திக் கொண்டு போவம் எண்டு ஐயர் வாறார் போலக் கிடக்க!" இப்படி ஒரு இளம் பொடியன் நக்கலாகப் பேசினான். தொடர்ந்து ஐயருக்கான மேளமுழக்கம் கூக்குரல்! உள்ளே வந்த ஐயர் தனது வேகைளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டாார. தெற்பைப்புற்களை ஒழுங்குபடுத்தி, பூ நூல்களை முடிந்து, செம்புகளுக்கு நூல் முடிந்து, செம்புகளுக்கு நூல் சுற்றி, சுள்ளிகளை வளம் பார்த்து அடுக்கி, நெய் விடத் தொன்னை சுற்றி ,தலைவாழைத் துண்டுகளைக் கணக் கெடுத்து, வாழைப்பழங்களுக்கு நாக்கு, மூக்கு தள்ளி இப்படி! இப்படி!

"எம்பிவாறார் எம்பிவாறார் என்று நான்கைந்து குரல்கள் மெதுவாகக் கேட்டன.

காரை விட்டு இறங்கிய எம்.பி நேராக விறாந்தைப் படி ஏறி வினையமாக சால்வையை எடுத்து கையில் வைத்துக் கொண்டு அமைதியாகத் துயில் கொள்ளும் மணியக்காரனைச் சுற்றி வந்து கால்மாட்டில் நின்று, சால்வையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டு, மேளங்கள் உச்சஸ்தாயில் முழங்க, பெண்களின் கூக்குரல்களுக்கு நடுவே தனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டு படியிறங்கி வெளியே வந்தார். இரண்டு மூன்று கதிரைகள் அவரைச் சுற்றி வந்து விட்டன. ஆயினும் அவர் அவைகளை அலட்சியம் செய்துவிட்டு கதிரப்பாய் ஒன்றில் உட்கார்ந்து கொண்டார். பலர் அவரை சூழ்ந்து இருந்து கொண்டனர். சற்று வேளைக்குப்பின் எம்.பீயைச் சுற்றிப் பலவித பேச்சுக்கள் தொடங்கிவிட்டன.

பாராளுமன்றம் பற்றி, தமிழர் நாகரீகம், பண்பாடு, கலாசாரம் பற்றி, தாக்கமான அரசியல் பற்றி, கறுப்புக் கொடிகள், கடை அடைப்புகள் பற்றி, தேநீர்க்கடைப் பிரவேசம் பற்றி, ஆலையப் பிரவேசம் பற்றி, மாவிட்டபுரம் பற்றி, இப்படி எத்தனையோ பற்றி, ஆய்வுகள்!

"ஓ..ஓஆடி அமவாசைக்கு மாவிட்டபுரத்திலை உள்ள கஞ்சலுகள் ஏதோ செய்யப் போகுதுகளாம், நல்ல சுந்தரலிங்கமையா வோடைதான் பகிடி!

"சுந்தரலிங்கம் ஐயாவோடை வண்டில் விட்டாலும் துரைச்சாமிக் குருக்களெட்டை வண்டில் விட ஏலுமே?

"அதெல்லாம் பெரிய அடுக்குக்கள் நடக்குது! எங்கடை மார்க்கண்டன்ரை ஆக்கள். அதுதான் கோவன்னாப் பொடியன் அவங்கள் கீரிமலைவரையிலை இருக்கிறாங்கள். எக்கணம் வெட்டிக் குவிப்பாங்கள் விசாலாச்சியின்ரை மோன் இருக்கிறான் எல்லாத்துக்கும் சுட்டுத்தள்ளிப் போடுவான்" உது சும்மா விளையாட்டான காரியமெண்டு நினைக்கப்படாது! உந்தப் பஞ்சமப் படையளுக்குப் பின்னாலை ஆமான சிவப்புச் சட்டைக் காறங்கள் நிக்கிறாங்களெண்டு கதையாக்கிடக்கு ஆரோ சுண்ணாகத்துப் பறையனும் ஒருதன் அவன் தானாம் தலைக்கிடாயாம்! இந்தக் கலந்துரையாடல்களிலெல்லாம் கலந்தும் கலவாததுமாக எம்.பி இருந்து கொண்டார். வேலிக்கரையோடு தலையைத் தாழப் போட்டுக் கொண்டிருந்த சுப்பையன் எல்லாவற்றிற்கும் காதுகளைக் கூர்மையாக வைத்துக்கொண்டான்.

பந்தலுக்குள் சவக்கிருத்தியம் தொடங்கிவிட்டது.

"மார்க்கண்டன் மூண்டு கால் பந்தலுக்குத் தடியள் வெட்டி வைச்சிருக்கிறியே" கட்டாடி மூண்டுகால் பந்தலுக்கு வெள்ளை கட்ட வேணும் வா? எட மூப்பன் வா, பந்தலைப் போடு, பரியாரிப் பொடியா நீவா, கொள்ளிக்குடக் காற னுக்குத் தலையை வழிச்சுப்போட்டு மணியக்காரனையாவுக்கு முகச்சவரம் பண்ணவேணும்" என்று எல்லோரையும் அழைத்துக் குரல் வைத்தபடி வாத்தியார் கோடிப்புறம் சென்றார். மூப்பன் சின்னான் சுப்பையனால் பின்னப்பட்ட பன்னாங்கைச் சரி செய்து தலைகட்டி முடித்து விட்டு கையில் வெட்டுக் கத்தியோடும் கட்டாடி செல்லப்பன் குளிப்பாட்டுக்கு மறைவு பிடிப்பதற்காக சீலை ஒன்றோடும் பரியாரி சுப்பையன் கருவிப்பையை ஆயத்தமாகக் கையில் வைத்துக் கொண்டும் உபாத்தியாருக்குப் பின்னால் போயினார்.

மூன்றுகால் பந்தல் போட்டாயிற்று. அதற்குத் துண்டு கட்டியாயிற்று. கொள்ளி குடக்காரனுக்கு சவரம் பண்ணியாயிற்று. பெண்கள் கூக்குரல்கள் மேலெழ இப்போது மணியக்காரன் மூன்றுகால் பந்தல் வரை கட்டிலோடு தூக்கிச் செல்லப்படுகிறார். மறுபடியும் "பரியாரி, பரியாரி" என்ற குரல்கள். மூன்று கால் பந்தலில் வைத்து மணியக்காரனுக்கு அவன் சவரம் செய்ய வேண்டும். பிணவெடில் மூக்கைப் பிடுங்க, தாடையால் வடியும் நிறைநீருக்கு மேலாக சவர்க்காரத்தைக் கையால் தடவி, மூச்சைப்பிடித்துக் கொண்டு சுப்பையன் மணியகாரன் நயினாருக்கு சவரம் செய்து முடித்துவிட்டான்.

"அச்சோ! பேந்தென்ன? வல்லி கூட இப்படிச் செய்ய மாட்டான்!" என்று வாத்தியாரின் பாராட்டும் கிடைத்து விட்டது.

அதற்கப்புறம்....

அதற்கப்புறம் பரியாரி சுப்பையன் அரப்பெண்ணெய்த் தட்டினைத் தூக்கிப் பிடிக்க, அரப்பெண்ணெய் வைத்து விட்டவர்களின் கைகளில் செம்பு பிடித்து கட்டாடி செல்லப்பன் தண்ணீர் வாக்க, குடிமுழுக்கு-மஞ்சள் தண்ணி முழுக்கு-இளநீர் முழுக்கு- குளிப்பாட்டல் முற்றுப் பெற்றுவிட்டது. "ஐயாவுக்கு எடுத்த கோடியைப் பெட்டியிக்கை போட்டிட்டு ஐயா விரும்பி உடுக்கிற உடுப்புகளைத் தான் உடுக்க வேணும்!" இப்படி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பான குரல். அது எல்லோரினதும் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டது.
"கட்டாடி, ஐயா உடுத்திருந்த வேட்டிக்கு நீ தான் உருத்துக் காறன் எடுத்துவை!"
கூட்டத்துக்குள் ஒரு குரல். மணியக்காரன் ஐயா சகல ஐசுவரியங்களுடனும் பந்தலுக்குள் எடுத்து வரப்பட்டார். முதிரை நிறப் பிறெம்பெட்டி, ஆயிரத்து எழுநூற்று மூன்று வேட்டி, அணில் மார்க்கு பெனியன், ஆரணியன் சால்வைத் தலைப்பாகு, தங்கப் பிரேம் கண்ணாடி, அவர் புதுமாப் பிள்ளை போலச் சயனிக்கிறார்.
தொடர்ந்து கிறுத்தியங்கள். பொற்சுண்ணம், வாய்க்கரிசி.
"வாய்க்கரிசிக்காறற்றை கை கழுவுற தண்ணிச் செம்பைப் பரியாரியெட்டைக் குடுத்திடாதையுங்கோ, அது கட்டாடிக்குத்தான் உருத்து!" ஒரு கிழவியின் குரல் வந்தது.
"என்ன மார்க்கண்டன், சவங்காவிற உன்ரை ஆக்கள் சரியோ, மேலாப்புப் பிடிக்கிறவங்கள் ஆயித்தமோ"
"ஓமாக்கும் அதெல்லாம் றெடி"
"கட்டாடி நிலபாவாடை விரிக்க உன்ரை ஆக்கள் ஆயித்தமோ?"
"ஓமாக்கும் வாத்தியார் நயினார் அவங்கள் எப்ப எண்டு காத்துக் கொண்டிருக்கிறாங்கள்."
அந்தக் குரலுக்குப் பதிலாக மேளங்கள், தம்பட்டங்கள், சல்லாரிகள் யாவும் துரிதகால சுருதியில் ஒலித்தன.
தேவாரம்
போட்டித் தேவாரம்
அதற்குப் போட்டி மணியக்காரனுக்குப் பிள்ளைகளும் இல்லை. அதனால் பந்தம் பிடிக்க யாருமில்லை. கிருத்தியக் குருக்கள் அதைத் தடுத்து வைத்திருந்தார். மணியக்காரனின் எண்பத்தெட்டு வயது மனைவியானவள் கண்ணீர் சிந்தி கூனிக் குறுகி கையில் மணியக்காரன் ஐம்பது ஆண்டுகளாகப் பாவித்து வந்த ராசாராணிக் குடை ஒன்றினைக் கொண்டு வந்து பெட்டி மூடும் நேரம் பார்த்து உள்ளே வைத்து விட்டாள்.
"ஐயாவின்ரை வெள்ளிப் பூண்போட்ட சிங்கப்பூர் பிரம்பையும் பெட்டியிலை வையுங்கோ!" வாத்தியார் சரியான நேரத்திற்கு இதை ஞாபகப்படுத்தி விட்டார்.
பிரம்பும் வைக்கபட்டு விட்டது.
சின்னஞ் சிறிய கோழிக்குஞ்சொன்று அவலக்குரல் எழுப்பியது யாரோ ஒரு கிழவி, அதை பெட்டிக்குள் வைத்தாள்.

ஐயா சாகும் போது பஞ்சமி. பெட்டி மூடப்படுகிறது. தண்டிகையைச் சுற்றி மார் அடிப்பு!
பிரியாவிடைக் கூக்குரல்கள், பிரலாபங்கள்!
சாம்பான்கள் கூட்டம் முன்னே செல்ல, கட்டாடிமார் நிலப்பாவாடை விரிக்க கொள்ளிக்குடக்காரன் தலைச்சனாக நிலைப்பாவாடை மேல்நடக்க முகிலாப்புக் குடிமைகள் நான்கு தடிகளில் முகிலாப்புப் பிடிக்க தண்டிகை தூக்க சகல சீர்வரிசைகளுடனும் மணியக்காரன் கமக்காரன் வரும் பவனியில் கடைசிக்குடி மகனாகச் சுப்பையன் கொள்ளிக் குடம் கொத்தும் கத்தி கமக்கட்டில், நெருப்புச் சட்டி தாங்கிய உறி இடக்கரத்தில், அதே கரத்தின் மேல் கரத்தின் மேல் பகுதியில் பொரிப்பெட்டி குந்தி இருக்க வலக்கரம் பொரி எடுத்து தண்டிகை மேல் தூவி விட, உச்சி வெய்யிலில் சுப்பையனின் பாதங்கள் வெந்து துடிக்கின்றன.
அவனின் நெஞ்சு கொதிக்கிறது. சுடலையை நோக்கி மூன்று மைல்கள் அவன் அந்தக் கோலத்தில் போக வேண்டும். அவனுக்கு அழுகையாய் வருகிறது.
இருட்டி விட்டது. சுப்பையன் இன்னும் வீட்டுக்கு வரவில்லை.
பொன்னிப்பெட்டை மகனின் வரவை எதிர்பார்த்து எதிர் பார்த்துத் தவித்துப் போனாள்.
இருட்டி வரும் நேரத்திற்குப் பின்பு வல்லி நெடுந்தீவால் வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்த போது பொன்னிக்கு அழுகை வந்தது.
வல்லி மகன் சுப்பையனைத் தேடி இழவு வீடுவரை சென்று விசாரித்தான். சுப்பையன் அங்கு இல்லை. மறுநாளும் விடிந்தது. சுப்பையன் வரவில்லை. வல்லி ஊரெல்லாம் மகனைத் தேடினான். மறுநாளும் சுப்பையன் வரவில்லை. வல்லி உறவினர் இருக்கும் கிராமங்கள் தோறும் சென்று சுப்பையனைத் தேடி அலுத்துப்போனான்.
சுப்பையன் வரவில்லை. பத்து நாளுக்கு மேல் ஆகிவிட்டது. மறுபடியும் சுப்பையன் காணாமல் போய் விட்டான்.
வல்லி ஒவ்வொரு நாளும் நன்றாகக் குடித்து விட்டுத்தான் வீடு வருவான். விடியும் வரை அழுவான்.
பொன்னிப்பெட்டை பட்டினி கிடந்து உருகிப்போய் விட்டாள். வல்லி காலையில் வெளியே போன போது வாத்தியாரைச் சந்தித்தான்.
"வல்லி உனக்கென்னடாப்பா! உன்ரை மோன் சுப்பையன்ரை படமெல்லே பேப்பரிலை வந்திருக்கு" என்று வாத்தியார் சொன்ன போது அவன் திடுக்குற்றுப் போய்விட்டான். சுப்பையனுக்கு ஏதோ நடக்கக் கூடாதது நடந்து விட்டதாக வல்லி பயந்து போனான். வாத்தியார் கக்கத்துக்குள் இருந்த பத்திரிகை ஒன்றை எடுத்து வல்லியின் கண்களுக்குச் சமீபமாக விரித்துப் பிடித்தார். அதிலே ஒரு படம் இருந்தது.
"சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற பென்னம் பெரிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளப்பதாகையின் கீழ் பலர் நெருங்கி வந்து கொண்டிருந்தனர். அதன் இடப்புறத்தடியை உயர்த்திப் பிடித்தபடி சுப்பையன் நின்றான்.

"வல்லி பாத்தியே உன்ரை கடைக்குட்டி சுப்பையன்ரை வடிவை" என்று வாத்தியார் கேலித்தோணி வைத்தார். வல்லி படத்தை உற்றுப் பார்த்தபடி நின்றான்.

"வல்லி மோன்ரை வடிவைக் கண்டியே?"

வாத்தியார் மறுபடியும் கேட்டார். வல்லியின் கண்களில் நீர் முட்டி நிரம்பி வழிந்தது அவன் விம்மினான்.

"வல்லி ஏன்ராப்பா அழுகிறாய்? பொல்லாப்பிள்ளையிலும் இல்லாப்பிள்ளை நல்லது. உன்ரை கடைக்குட்டி பிறந்து செத்துப் போறானெண்டு நினைச்சுத்தான் நீ அழுகிறாய் எண்டு எனக்கு விளங்குது. அவன் இனி வரமாட்டான்ராப்பா உந்தச் சிவப்பு சட்டைக்காரர் அவனைப் பலிக்கிடாயாக்கிப் போட்டாங்கள் அழாதை போ!" வாத்தியாரின் இந்தப் பேச்சுக்கு வல்லி காத்திருக்கவில்லை. வல்லிக்கு இப்போது ஒரு பத்திரிகை வேண்டும். அதை அவன் பொன்னிப்பெட்டைக்கு காட்ட வேண்டும். அவன் சந்தையை நோக்கி நடந்து கொண்டிருந்தான். இளையதம்பிக் கமக்காரன் வந்தார்.

"வல்லி உன்னைத்தான்டா தேடினனான் ஒருக்காப் பட்டணம் மட்டும் போக வேணும் இந்த முகத்தை ஒருக்கா வழிச்சுவிடு" என்று கூறிக்கொண்டே இளையதம்பிக் கமக்காரன் வீதி ஓரத்துத் தண்ணீர்தொட்டிக்குப் பக்கமாக உட்கார்ந்தார். வல்லி அவரை விலத்தி விட்டு நடந்து கொண்டிருந் தான்.

இளைய தம்பிக் கமக்காரனுக்குக் கோபம் பொட்டுக் கொண்டு வந்தது. தனது சொல்லை வல்லி தட்டிவிட்டுச் செல்வதை யாராவது பார்த்து விட்டார்களோ என்றறியச் சுற்று முற்றும் பார்த்தார். வாத்தியார் வந்து கொண்டிருந்தார். கமக்காரனுக்கு சுயமரியாதை தலை தூக்கிவிட்டது.

"டேய் வல்லி, டேய் அம்பட்டா, டேய் பரியாரி"என்று அவர் பலமாகக் கத்தினார்.

இக்குரல் வல்லிக்குக் கேட்டதோ இல்லையோ அவன் நடந்து கொண்டிருந்தான். நிமிர்ந்து நடந்து கொண்டிருந் தான். இப்போது எப்போதையும் போல அவன் கூனவில்லை. தன்னாலேயே அவன் முதுகெலும்பும் நிமிர்ந்து விட்டது. வல்லி சந்தையில் பத்திரிகைக் கடைவரை போய்விட்டான். அவனுக்கு இப்போது வேண்டியது ஒரு பத்திரிகை! அதை அவன் மனைவியானவளுக்குக் காட்ட வேண்டும். எப்போதும் அரையோடு ஒட்டிப்போய்க் கிடக்கும் நாலு முளத் துண்டினை எடுத்து உதறித் தோளில் போட்டுக் கொள்கிறான் வல்லி.

\\\\\\\\\\\\\\

## 23 ஆம் பக்கத் தொடர்.........

'இப்போதும்', என்ற கதை என்னதான் முரண்பாடுகள் இருந்தாலும் முதல் காதலன் அல்லது கணவனில் இருக்கும் பாசம் இலகுவில் அற்றுப்போய்விடாது என்பதை, 'நான் வைத்த பூச்செடிகள் எப்படியிருக்கு,' எனக் கேட்பவளுக்கு, 'உரம் போடுகிறதில்லை ஆனால் அடிக்கிற வெயில் தானா வளருது,' என அவன் சொல்லும் பதிலின் மூலம் எழுத்தாளர் சிறப்பாகக் காட்டியுள்ளார். அத்துடன் அவர்கள் இருவரினதும் விருப்புக்களையும் செயல்பாடுகளை பல்வேறு விடயங்களுக்கு ஊடாக ஒப்பிடல் மூலம் அவர்கள் இருவருக்கும் இடையிலிருந்த முரண்பாடுகளை தக்ஷிலா அழகாகக் காட்டியுள்ளார். பிள்ளைகள் பெற்றோரைப் பாதுகாக்க வேண்டுமென்ற நினைப்பு எவ்வளவு பிழையானது என்பதையும் இந்தக் கதை பின்வரும் உரையாடல் மூலம் அறிவுறுத்துகிறது. "நாம் வயசாகுற காலத்துல நம்மைப் பார்த்துக் கொள்ளணும்னு நினைச்சு பிள்ளை பெத்து வளர்க்கத் தேவையில்ல சந்திமா. அவங்க, அவங்களோட உலகத்தைத் தேடிப் போகட்டும். அவங்களுக்கும் கூட ஓய்வா, வாழ்க்கையை அனுபவிக்க நேரம் வாய்க்குமென்றால் அவங்களே நமக்கு முடியாமப்போற காலத்துல உதவி செய்வாங்க." 'ஓரேதிடலில்,' என்ற கதை முற்றிலும் ஆணாதிக்க மயமாகத்தானிருந்தது. முன்னாள் கணவன் இன்னொரு பெண்ணைத் தேடிப்போகிறான். புதுக் கணவன் அவளின் விருப்பம் எதுவெனக் கரிசனைப்படாமல், தான் ஏதோ பெரிய தியாகி போல அவளின் வாழ்வைத் தானே தீர்மானிக்கிறான். இந்தக் கதையும் பிள்ளையின் பார்வையில் சொல்லப்படுவதால், அம்மாவுக்கு இருவரிலும் ஒரேயளவு அன்பிருந்ததால் தீர்மானிக்கமாட்டா என்பதால் துணையை இழந்திருக்கும் பழைய கணவனுடன் அவளின் வாழ்வுப் பாதையை இணைப்பதற்குப் புதுக்கணவன் முடிவெடுத்ததாகச் சமாதானம் வருகிறது. 'தங்கையைத் தேடி,' என்பது தமிழ் சிங்கள சுதந்திரப் போராட்டகாரர்களின் சோகங்களைக் கூறுகிறது. அதுவும் சிறப்பாகவும் யதார்த்தமாகவும் எழுதப்பட்டிருக்கின்றது. தமிழ் சிங்கள உறவை வளப்படுத்தும் வகையிலான ஒரு கதையாகப் 'பொட்டு' கருதப்படுகின்றது. விதவையாக வாழும் ஒரு சிங்களப் பெண்ணுக்கும் வாடகைக்கு இருக்கும் தமிழ் ஆணுக்கும் காதல் உருவாகிறது. ஆரம்பத்தில் பொட்டு இருந்தால் அழகாயிருக்கும் என அவளுக்குப் பொட்டு வைத்து அழகு பார்க்கிறான் அவன், பின்னர் பொட்டு இல்லாமலேயே நீ அழகுதான் எனச் சொல்வது தமிழ்-சிங்கள் பேதம் காதலில் போய்விடுகிறதைச் சொல்லவந்தது போல இருந்தது. ஆனால் நாளாந்தப் பிழைப்புக்காகப் போன இடத்தில் தமிழ் தீவிரவாதிகளின் குண்டடிபட்டு செத்துப்போன கணவன் இறந்த சோகத்தை, சில காலம் பழகிய அவன் தீவிரவாதி எனக் கைதுசெய்யப்பட்டு போனபோது உணர்ந்ததாகச் சொல்வது சற்றும் யதார்த்தமானதல்ல என்றே எனக்குத் தோன்றியது. எனினும் கதை மிக அழகாக அந்தப் பெண்ணின் நோக்கிலும் உணர்வுகளினாலும் எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வாறான பேசாப் பொருள்களைப் பற்றி எழுதுகின்ற பெண்களை அந்தக் கதைகளில் வரும் கதாபாத்திரங்களோடு ஒப்புநோக்கும் எங்களின் சமூகக் கட்டமைப்புகள் எதையும் பொருட்படுத்தாத தக்ஷி லாவின் தைரியம் பாராட்டப்படவேண்டியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஞ்சரி சிறுகதைகள்

## ஒரு பார்வை

செ. யோகராசா

மஞ்சரி 23

**விடியலை நோக்கி** - எஸ். ஏ.ஸ்மத் பாத்திமா

குடும்ப சூழலைக் களமாகக் கொண்ட சிறுகதை. அன்றாடம் பிரச்சினைகள் எதிர்கொள்ளும் அக்குடும்பத்திலுள்ளவர்கள் தமது நிலையை நன்குணர்ந்து தாமே அவற்றுக்கு முகங் கொடுக்க முற்படுவதை வெளிப்படுத்துவது என்ற விதத்தில் வித்தியாசமான சிருஷ்டி. எனினும், வாசகர் மனதில் தாக் கத்தை ஏற்படுத்தும் விதத்தில் சம்பவங்களை நகர்த்தியிருப்பின் கவனிப்பிற்குரியதொன்றாக அமைந்திருக்கும்.

**பூக்களின் வண்ணங்கள்**- கமலினி கதிர்

தமிழ்ச்சமூகத்திலுள்ள பெரும்பாலானோர் போன்று தனது மகனின் படிப்பை மட்டும் விரும்புகின்ற தந்தையும் அவரது நடவடிக்கைகளால் மனஉளச்சலுக்கு உள்ளாகும் மகனைப் பற்றியது இச்சிறுகதை. எனினும், மகனது ஆசிரியரது தெளிவானதும், எளிமையானதுமான போதனையால் தந்தை மனமாற்றமடைவதை கதை முடிவாகக் கொண்டி ருப்பது பாராட்டிற்குரியது. மஞ்சரியில் முன்னரும் இப்போதும் போன்று தொடர்ந்தும் இவ்வகைக் கதைகளை இவ் எழுத்தாளர் எழுதுவாராக!( சிறுகதையின் அர்த்த புஷ்டியான தலைப்பிற்கு விசேட பாராட்டுக்கள்)

**செயற்பட்டு மகிழ்வோம்**- ஏ. எஸ். சற்குணராசா

கதாசிரியர் எடுத்துக்கொண்ட பேசு பொருளிலிருந்து விலகிச் செல்வதும் கதையில் அநாவசியமான நீட்சி. அதிப ரின் நீண்ட பேச்சினைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களின் மனநிலையே வாசகர்களுக்கும் ஏற்படுத்தியிருக்குமென்று நம்ப இடமுள்ளது!

**எங்கிருந்தோ வந்த மரணம்** - அசுரா

போர்க்காலச்சூழலில் கணவன் அகால மரணத்தைத் தழுவிக் கொண்டாலும் மனஞ்சோராமலும் ஊரின் விமர்சனங்களைப் பொருட்படுத்தாமலும் தனது மூன்று பிள்ளைகளையும் மனவுறுதியுடன் வளர்க்க முற்படும் தாயொருத்தியின் கதை. எனினும் வித்தியாசமாகவுள்ள இறுதிப் பந்தி நிகழ்வுகளை மேலும் விவரித்திருக்கலாம். வாசகர்களை ஈர்க்கும் விதத்தில் தாயை சிருஷ்டித்திருக்கிறார்.

**காலத்தின் தீர்ப்பு**- சி. சிறீரங்கன்

முதுமை நிலையிலுள்ளவர்களுக்கு வழிகாட்டக்கூடிய கதை. மேலும் செதுக்கினால் முக்கிய கவனிப்பைப் பெறக் கூடிய கதை.

**காலத்தின் கோலங்கள்** - சியாமளா. யோகேஸ்வரன்

புகலிட வாழ்க்கைச் சூழல் இச்சிறுகதையில் வருகின்ற தாயையும் மகனையும் போல் பலரைக் கண்டுள்ளது. மறக்க முடியாத மனதை நெகிழச் செய்யும் விதத்திலும் அத்தகு சிறுகதைகள் வெளிப்பட்டுள்ளன. இச்சிறுகதையும் வித்தியாசமான முறையில் செல்வது அவசியமானது.

**சகபயணி** - ராஜேந்திரன். ஜித். ஹம்ஷன்

இச்சிறுகதையின் கரு என்ன என்பது பற்றிய தெளிவும் தெளிந்த நிலையில் அது பற்றிய நகர்வும் அவசியமானது.

**மனிதம்** - எம். சீ. பரீத்

போர்க்காலச்சூழலில் போராளிகளோ, சாதாரணமக்களோ பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகிய நிலையில் பிறரது மனிதாபிமானச் செயற்பாடுகளால் தப்பித்துக் கொண்டமை தொடர்பாகப் பல படைப்புகள் வெளிவந்துள்ளன, வெளிவரு கின்றன. அத்தகைய பட்டியலில் இச்சிறுகதையும் இடம் பெறக்கூடிய வாய்ப்புள்ளது குறிப்பிடத்தக்கது.

**மேலதிககுறிப்பு**

இவ்விதழில் விமர்சனம் எழுதியுள்ள அஷ்வினி வையந்தி மஞ்சரி வாசகருக்குப் புதியவரல்லர். ஏலவே சிறுகதைகள் சில எழுதியுள்ளார். பிரசுரமான விமர்சனம் பாராட்டும் படியுள்ளது.

**விசேடகுறிப்பு**

சமீபகாலமாக வெளிவந்துள்ள ஆசிரியத்தலையங்களுள் இவ்விதழின் ஆசிரியத்தலையங்கம் உரத்த சிந்தனைகளுக்கு வழிவகுத்திருப்பது குறிப்பிடத்தக்கது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுகதை எழுதுவது எப்படி?

மு.தயாளன்

சென்ற இதழில் அணுகுமுறை பற்றிப் பார்க்க ஆரம்பித்திருந்தோம். எந்த ஒரு இலக்கிய வடிவிற்கும் அணுகு முறை என்பது அத்தியாவசியமான ஒன்றாகும். யாருடைய கண்களினூடாக சம்பவத்தைப் பார்க்கிறோம் என்பதே அணுகு முறையின் அடிப்படையாகும்.

உதாரணத்திற்கு திருமண முறிவு பற்றி ஒரு கதை எழுதப் போவதாக வைத்துக் கொள்வோம். இங்கு மனைவியானவள் வேறொரு ஆணுடன் தொடர்பு வைத்ததனால் கணவனைவிட்டுப் பிரிந்திருக்கிறாள் எனக் கொள்வோம். இந்தக் கதையில் மூன்று பாத்திரங்கள் உள்ளதை நன்கு அவதானியுங்கள். மனைவி காதலன் கணவன் ஆகிய மூவருமே கதையை நகர்த்தும் வல்லமை கொண்டவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் ஒருவரின் கண்கள் மூலமாகவே கதை பார்க்கப்படும். இதனை இக்கதையின் அணுகுமுறை எனலாம். மனைவியை உங்களின் அணுகுமுறைப் பாத்திரமாக எடுத்தால் கதை முழுமையும் அவளின் கண்களினூடாகவே பார்க்கப்படும். அதாவது கதையின் பிரதான பாத்திரமும் மனைவி என்றாகிவிடும். இப்படி ஒரு அணுகுமுறையை மாத்திரம் கருத்தில் கொண்டு கதை சொல்லல் வழமையான மரபுரீதியான கதை சொல்லல் வகையாகும். ஆனால் அனுபவம் வாயந்த எழுத்தாளர்களால் தற்காலத்தில் ஒரு கதைக்கு இரு அணுகுமுறைகள் இருப்பதையும் பார்த்திருக்கிறேன்.

## உரையாடல்

உரையாடல் என்பது கதையின் உயிர் நாடியாகும். உரையாடல் மூலமாகவே சிலர் கதையைக் கூறி முடிப்பார்கள். உரையாடல்கள் கதையை நகர்த்தும் சக்தி கொண்டவை. பிரபலமான சிறுகதைகள் உரையாடல்களோடுதான் வெற்றி அடைந்துள்ளன. பாத்திரங்களுக்கிடையேயான காத்திரமான உரையாடல்கள் வாசகனைக் கதையின்பால் இழுக்கும் தன்மை கொண்டன. கதைக்கு உயிர் கொடுப்பது உரையாடல்களே. உரையாடல்களை பலவிதமாகக் கையாளலாம். கதையினுடைய பிரதான பாத்திரம் தன்னுடைய மொழியில் கதையைச் சொல்வது போலவும் அல்லது கதையிலுள்ள இரு பாத்திரங்கள் அவ்வப்போ உரையாடுவதுபோலும் கதையைக் கொண்டு செல்லலாம். ஒரு காட்சியினை அமைப்பதற்கு உரையாடல்கள் உறுதுணையாக இருக்கின்றன. வாசகன் ஒரு பாத்திரத்தின் உரையாடலிலிருந்து அந்தப் பாத்திரத்தை விளங்கிக்கொள்ள ஏதுவாக இருக்கிறது. இனிவரும் அத்தியாயங்களில் உதாரணங்களோடு உரையாடலைப்பற்றி உரையாடுவோம்.

## கரு

ஒரு சிறுகதை சம்பவமாகவும் கணநேரத் தோற்றமாகவும் கருதப்படுகின்ற போதிலும் அதற்கு கரு இல்லை என்று ஆகிவிடாது. கரு என்பது உண்மையில் தொடர்ச்சியான சம்பவங்களின் தொகுப்பாகும். சிறுகதையில் இது பிரதான பாத்திரத்தோடு நகர்ந்து அந்தப் பிரதான பாத்திரம் அந்த சம்பவங்களை அனுபவிப்பதையும் முடிவில் அந்தப் பாத்திரம் எழுப்பப்பட்ட பிரச்சினைகளைத் தன்னளவில் தீர்த்துக் கொள்வதாகவும் அமைகிறது. நகர்தலின்போது சில ஆச்சரியங்களும் அமையும்போது சிறுகதை வாசகனைக் கவர்ந்திழுக்கும் தன்மை கொண்டதாகிறது. அப்படி இல்லாவிட்டால் கதையானது ஒரு நேர்கோட்டில் சம்பவங்களைத் தொடுத்துவிடும்ஒன்றாக அமைந்துவிடுகிறது. உதாரணத்திற்கு ஒரு குற்றம் சம்பந்தப்பட்ட கதையை எடுப்போம். இப்படியான கதையில் குற்றமிழைத்தல் குற்றத்தைக் கண்டுபிடித்தல் என்பதோடு கதை அமைந்தால் அது கருவாக முடியாது. பதிலாக குற்றமிழைத்தலுக்கும் குற்றத்தை தீர்ப்பதற்குமிடையில் ஏதும் ஆச்சரியங்கள் இருக்கவேண்டும். அதாவது யார் குற்றமிழைத்திருப்பார் என்கின்ற எண்ணமானது வாசகனுக்கு ஏற்படும் பட்சத்தில் அவனைத் திருப்பி வேறு ஒருவர் குற்றமிழைத்தவர் ஆகும்போது வாசகன் மனதில் ஒரு ஆச்சரியம் எழுகிறது. இந்தத் தன்மை கதைகளில் இருந்தால்தான் அங்கு கரு என்ற ஒன்று இருக்க முடியும். இதனைத் திருப்பங்கள் என்றும் சொல்லலாம். குற்றமிழைத்தவர் குற்றத்தை தனக்காகச் செய்தாரா அல்லது சமூகத்திற்காகச் செய்தாரா போன்ற இன்னோரன்ன கேள்விகள் வாசகன் மனதில் எழவேண்டும். இந்தக் கேள்விகளுக்கு வாசகனே ஒரு முடிவை தனக்குள் கொண்டிருப்பான். அதனை முறியடித்துக் கதை நகரவேண்டும். இதைத்தான் கதையின் கருவென்று நாம் வரையறுக்கலாம். அடுத்த இதழில் பாத்திரங்களை எப்படி ஒருங்கிணைப்பது என்பது பற்றிப் பார்ப்போம்.

இன்னும் வரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பதிப்பகம்
# Luxmi Publications

## நூல்

* பக்கங்களின் எண்ணிக்கை 100 இற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
* சமூக முன்னேற்றம் சம்பந்தமானதாக கருப்பொருள் இருத்தல்வேண்டும்.
* கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாவல், நாவல் வகைகளாக இருக்கலாம்.

## ISBN

* இது லண்டனில் எடுக்கப்படும்
* இலங்கையில் உள்ள இலக்கம் தேவைப்படுபவர்கள் சுயமாக விண்ணப்பித்து எமக்குத் தரலாம்

## நடைமுறை

* 300 புத்தகங்கள் அச்சிடப்படும். * சகல உரிமைகளும் பதிப்பகத்தால் உள்வாங்கப்படும்.
* அச்சிடலுக்குப் படைப்பாளியிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.
* விற்பனை உரிமை பதிப்பகத்திற்குமட்டுமே உரித்து.
* படைப்பாளி 100 பிரதிகளைக் கொள்வனவு செய்ய வேண்டும். அதற்கான பணம் வங்கியில் வைப்புச் செய்தபின்தான் அச்சிடல் ஆரம்பிக்கும்.
* மேலதிக பிரதிகள் தேவைப்படின் பதிப்பகத்திடம் படைப்பாளி கொள்வனவு செய்யலாம்.
* விற்பனை உரிமைப் பணம்(Royalty) 10% படைப்பாளிக்கு வழங்கப்படும்.

  உதாரணம்: 300 புத்தகங்களின் விற்பனை அளவு : 60000 ரூபா ( ஒரு புத்தகம் 200ரூபா)

  10 % = 6000 ரூபா ( ஆகக் கூட படைப்பாளி, புத்தகங்கள் முழுவதும் விலைப்பட்டால் 6000 ரூபா பெறுவார்)
* படைப்பாளிகள் மேலதிக புத்தகங்கள் வாங்கும்போது விலை பின்வருமாறு கணிக்கப்படும்.

  உதாரணம்: படைப்பாளி 10 புத்தகங்கள் மேலதிகமாக வாங்கினால் அவர் செலுத்த வேண்டிய உண்மையான தொகை 2000ரூபா.

  அவருக்கான விற்பனை உரிமைத் தொகை : 200 ரூபா (10% of 2000)

  புத்தகங்களுக்கு அவர் செலுத்தவேண்டிய தொகை 2000-200=1800
* புத்தக விற்பனை உரிமை பதிப்பகத்திடம் இருப்பதால் படைப்பாளி தான் வாங்கும் புத்தகங்களை கடைகளில், அல்லது புத்தகத் திருவிழாக்களில் விற்பனை செய்ய முடியாது. அவர் விரும்பினால் சுயமாக வெளியீட்டு விழா ஒன்றை வைத்து விற்பனை செய்யலாம்.
* புத்தகம் ஒன்றின் விலை புத்தகத்தினை அச்சிடுவதற்கு ஆகும் செலவினைக் கொண்டு மதிப்பிடப்படும்.
* புத்தகங்களின் தரத்தை நிர்ணயித்து ஏற்றுக் கொள்வதா? நிராகரிப்பதா? என்கின்ற உரிமை பதிப்பகத்திற்கே உரியதாகும்.
* எழுத்தாளர்கள் கீழுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும். தொலை பேசி இலக்கம் லண்டன் 0044 785 2810 285

மு.தயாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



LUXMI EDUCATION CENTRE
LEC

# ENROLLING NOW
## 2022 / 2023

REGISTER NOW

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org